# உதயன்

கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
மேகமூட்டம், மழை

சுடர் 30 | கதிர் 155 | வள்ளுவர் ஆண்டு 2046 | சித்திரை 17, வியாழக்கிழமை 30.04.2015


# இனப்பிரச்சினை தீர்வு நோக்கி நகர வேண்டும் மைத்திரிபால

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்துகின்றார்

கொழும்பு, ஏப்ரல் 30
"நாட்டில் பிரச்சினைகள் அனைத்துக்கும் மூலகாரணமாக உள்ள தேசிய இனப்பிரச்சினைக்கும் நிரந்தர அரசியல் தீர்வுக்காக ஜனாதிபதி மைத்திரிபால உடன் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்."– இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.
"அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டம் நாடாளுமன்றில் சாதாரண மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மட்டுமல்லாமல், ஏகோபித்த ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குக் கிடைத்த மகத்தான வெற்றியாகும். அவரின் முன்னேற்றகரமான பாதைக்கு இது நல்ல உதாரணமாகும்."– என்றும் அவர் தெரிவித்தார்.
அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்ட வரைவு திருத்தங்களுடன் நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டது. திருத்தச்சட்டத்துக்கு ஆதரவாக 212 வாக்குகள் அளிக்கப்பட்டன.
இந்த நிலையில், 19ஆவது திருத்தச் சட்ட நிறைவேற்றம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்துக் குறித்து அதன் தலைவர் இரா.சம்பந்தனிடம் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"ஜனாதிபதித் தேர்தலின்போது மக்களிடம் இருந்து வழங்கப்பட்ட ஆணையை ஜனாதிபதி மைத்திரிபால நிறைவேற்றியுள்ளார். அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை நாடாளுமன்றில் நிறைவேற்றியே தீருவேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால தேர்தல் பரப்புரையின்போது வாக்குறுதியளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.
இந்த 19ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதால் நாட்டின் ஜனநாயகம்,

பக்.02

## பஸில் கைது விவகாரம்: மழுப்பியது எதிர்க்கட்சி

கொழும்பு, ஏப்.30
முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கைதுசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் எதிர்க்கட்சி எவ்வித கருத்தையும் வெளியிடாமல் மௌனம் காத்துவருகின்றமை தொடர்பில் நேற்று ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்கு மழுப்பல் போக்கில் பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள், ஊடகச் சந்திப்பை இறுதியில் அவசரமாக முடித்துக் கொண்டனர்.
நாடாளுமன்ற சிறப்புரிமை விடயம் தொடர்பாகத்தான் பேச வேண்டும் என இதன்போது தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா, பஸிலின் கைது குறித்து கருத்து வெளியிடுவதைத் தவிர்த்து

பக்.02

## மஹிந்த சொல்லில் மைத்திரி செயலில்!

### சுட்டிக்காட்டினார் அமைச்சர் ராஜித

கொழும்பு, ஏப்.30
"அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டவரைவூடாக நிறைவேற்று ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களை மட்டுப்படுத்தியமையானது நாட்டு மக்களுக்கும் ஜனநாயகத்துக்கும் கிடைத்த வெற்றியாகும்" – இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பக்.02

## மஹிந்தவின் சதித்திட்டம் அனைத்தும் முறியடிப்பு!

கொழும்பு, ஏப்.30
"முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது சகாக்களால் முன்னெடுக்கப்பட்ட சதித்திட்டங்கள் அனைத்தும் முறியடிக்கப்பட்டு 19ஆவது திருத்தச் சட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது" என்று மத்திய மாகாண சபை உறுப்பினர் அஸாத் ஸாலி தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று நடை பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.
"19ஆவது திருத்தச் சட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த வெற்றிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே உரிமையானவர். இந்த வெற்றியானது நாட்டில் வாழும் சிறுபான்மையின

பக்.02

## எதிர்பார்ப்பது நிரந்தரத் தீர்வே

### ஜனாதிபதியிடம் வலியுறுத்தினார் யாழ்.ஆயர்

யாழ்ப்பாணம், ஏப். 30
வடக்கு–கிழக்கு மக்களின் அதிகப்படியான வாக்குகளால் நீங்கள் ஜனாதிபதியாகத் தெரிவானீர்கள். தமிழ் மக்கள் ஒரு நிரந்தர அரசியல் தீர்வை எதிர்பார்த்திருக்கிறார்கள். அதற்கான செயற்பாடுகளை நாங்கள் உங்களிடம் எதிர்பார்த்திருக்கின்றோம் என் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேரில் வலியுறுத்தினார் யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.
இவ்வாண்டுக்கான முதலாவது ஆயர் பேரவை கடந்த வாரம் கண்டியில் கூடியது. இதன் பின்னர் இலங்கை ஆயர்கள் கொழும்பில் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். கடந்த திங்கட்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.
இதன்போது யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஜனாதிபதியைச் சந்தித்து உரையாடினார். இனப் பிரச்சினைக்கான நிரந்தர அரசியல் தீர்வை ஏற்படுத்தவேண்டியதன் அவசியம்

பக்.02

## ஐ.நாவின் அறிக்கையில் ஆச்சரியமிக்க தகவல்கள்

### சொல்ஹெய்மிடம் கூறினார் அல் ஹூசைன்

கொழும்பு, ஏப். 30
ஒத்தி வைக்கப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அறிக்கை செப்ரெம்பர் மாதத்தில் வெளியாகும்போது, அதில் ஆச்சரியமான தகவல்கள் பல உள்ளடங்கியதாக இருக்கும் என்று மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹூசைன், இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம் கூறியுள்ளார்.
ஐ.நா. மனித உரிமைகள்

பக்.02





மயூரனின் இறுதித் தருணம்

மயூரன் உட்பட எட்டுப் பேருக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றம்

விரிவு பக்கம் 13 இல்

## அரசின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் வாரம் இது

பக்கம் 17

## இலங்கைக்கு வரவுள்ள கெரிக்கு ஒபாமாவை விடவும் பாதுகாப்பு!

### 200 அதிகாரிகள் 40 மோப்ப நாய்களுடன் கொழும்புக்கு வந்து சேர்ந்தனர்

கொழும்பு, ஏப். 30
இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியின் பாதுகாப்புக்காக, அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் 200 பேர், 40 மோப்ப நாய்கள் சகிதம் இலங்கையை வந்தடைந்தனர்.
அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி நாளைமறுதினம் சனிக்கிழமை இலங்கைக்கு வருகை தரவுள்ளார். அவருக்குப் பாதுகாப்பு வழங்குவது மற்றும் அவரது பாதுகாப்புக்கான

பக்.02

## சிவில் பாதுகாப்பு கூட்டத்தில் வாள்வெட்டு குறித்து முடிவு

### யாழ்ப்பாண அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்

யாழ்ப்பாணம், ஏப். 30
யாழ்.மாவட்டத்தில் மீண்டும் அதிகரித்துள்ள வாள்வெட்டு கலாசாரம் தொடர்பில், உரிய நடவடிக்கை எடுப்பது தொடர்பாக, எதிர்வரும் 5 ஆம் திகதி இடம்பெறும் சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.
யாழ்.மாவட்டத்தில் கடந்த ஒரு வார

பக்.02

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# போராட்டம் ஓயவேயில்லை ஐ.தே.கவை எச்சரிக்கும் சு.க.

கொழும்பு, ஏப்.30
19ஆவது திருத்தச்சட்டத்தினூடாக
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குப்
பெரும் வெற்றி கிடைத்துள்ளதா
கவும், சு.க., புறக்கணித்திருந்தால்
ஐ.தே.கவால் 19ஐ நிறைவேற்றி
இருக்கமுடியாது என்றும் தெரி
வித்த எதிர்க்கட்சித் தலைவர் நிமல்
சிறிபால டி சில்வா, '19' நிறைவேற்
றப்பட்டதுடன் தமது போராட்டம்
முடியவில்லை என்றும், 20ஐ
நிறைவேற்றுவதற்காக ஐக்கிய
மக்கள் சுதந்திர முன்னணி அர்ப்
பணிப்புடன் செயற்படும் என்றும்
தெரிவித்தார்.
முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெய
வர்த்தனவால் கொண்டுவரப்பட்ட
அரசமைப்பை ஜனாதிபதி மைத்
திரிபால சிறிசேனவால் மட்டுமே
மாற்ற முடிந்துள்ளது. அரசியல்
வரலாற்றில் அவரது நாமம் அழியா
இடத்தைப் பிடிக்கும் என்றும் தெரி
வித்தார். கொழும்பிலுள்ள சிறி
லங்கா சுதந்திரக் கட்சித் தலைமை
யகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக
வியலாளர் சந்திப்பின்போதே இவ்
வாறு அவர் தெரிவித்தார்.
3 தசாப்த காலமாக மாற்ற முடியா
திருந்த நிறைவேற்று அதிகாரத்
தைக் குறைத்து ஓரளவுக் குப் பிரதி
பலனொன்றைக் காணமுடிந்துள்
ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி
உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர
முன்னணியின் ஆதரவுடன் ஐக்கிய
தேசியக் கட்சி உள்ளிட்ட ஏனைய
கட்சிகளையும் இணைத்துக்கொண்டு
19ஆவது திருத்தச் சட்டமூலத்தை
நிறைவேற்றி யுள்ளோம். சுதந்திரக்
கட்சி புறக்கணித்திருந்தால் அர
சால் 19ஐ நிறைவேற்றியிருக்க முடி
யாது. ஜனாதிபதி மைத்திரிபால
சிறிசேன பெரும் அர்ப்பணிப்பு -
பெரும் சேவையைச் செய்துள்ளார்.
பதவிக்கு வந்ததும் எவரும் அதிகா
ரத்தைக் கைவிட விரும்புவதில்லை.
ஆனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறி
சேன அதிகாரத்தைக் கைவிட்டுள்ளார்.
19ஆவது திருத்தச் சட்டமூலம் ஊடாக
ஜனாதிபதியின் நிறைவேற்று அதி
காரங்கள் ஓரளவுக்குக் குறைக்கப்
பட் டுள்ளன. முன்னாள் ஜனாதிபதி
ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் கொண்டு
வரப்பட்ட நிறைவேற்று அதிகாரத்தை
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன
வால்தான் மாற்றமுடிந்துள்ளது.
இதனூடாக அரசியல் வரலாற்றில்
அவர் இடம் பிடித்துள்ளதுடன், மக்
கள் மனதிலும் இடம்பிடித்துள்ளார்.
19ஆவது திருத்தச் சட்ட மூலத்தை
நிறைவேற்றுவதற்கு நாம் பெரும்
பங்களிப்பைச் செய் துள்ளோம்.
இருப்பினும், எமது போராட்டம்
இத்துடன் முடிந்து விடவில்லை. தேர்
தல் திருத்த முறைமை தொடர்பான
20 ஆவது திருத்தச் சட்டமூலத்தை
நிறை வேற்றவேண்டும். அதற்காக
சிறி லங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அர்ப்
பணிப்புடன் செயற்படும்– என்றும்
அவர் கூறினார். (ற–சி)

## இலங்கைக்கு

ஒழுங்குகளை மேற்கொள்வதற்
காகவே, அமெரிக்கப் படை அதிகாரி
கள், மோப்பநாய்கள் சகிதம், கொழும்
புக்கு வந்துள்ளனர் என்று தெரிவிக்
கப்படுகின்றது.
இவர்கள் ஏற்கனவே ஜோன் கெரி
பயணம் செய்யும் பாதைகள், அவர்
செல்லும் இடங்களின் பாதுகாப்பை
உறுதிப்படுத்தும், கண்காணிக்கும்
பணிகளை ஆரம்பித்துள்ளனர் என்
றும் தெரியவருகிறது.
அமெரிக்க ஜனாதிபதியின் வெளி
நாட்டுப் பயணங்களின் போது
வழங்கப்படும் பாதுகாப்பை விட
வும், அமெரிக்க இராஜாங்கச் செய
லருக்கு இலங்கையில் அதிகமான
பாதுகாப்பு வழங்க அமெரிக்க அதி
காரிகள் முடிவு செய்துள்ளனர் என்
றும் கூறப்படுகிறது. (ற–5)

## சிவில்

காலத்துள் வாள் வெட்டு சம்பவங்
கள் அதிகமாக இடம்பெற்றுள்ளது
டன், பல்கலைக்கழக மாணவர்
ஒருவரது கையும் துண்டாடப்பட்
டுள்ளது. இது தொடர்பில் நடவ
டிக்கை எடுக்கக் கோரி பல்கலைக்
கழக மாணவர்கள் வகுப்புப் புறக்
கணிப்புப் போராட்டத்திலும் ஈடுபட்
டுள்ளனர்.
அதேவேளை, சுன்னாகத்தில் வாள்
களுடன் பலர் கைது செய்யப்பட்ட
னர். தொடர்ச்சியாக இடம்பெற்று
வரும் இந்தச் சம்பவங்கள் தொடர்
பில், எவ்வாறான நடவடிக்கைகள்
மேற்கொள்ளப்பட்டுள்ளன என்
பன தொடர்பில் அரச அதிபரிடம் கேட்
கப்பட்டது.
இதற்குப் பதிலளித்த அவர், வடக்கு
மாகாண பிரதிப் பொலிஸ்மா அதி
பர் தலைமையில் எதிர்வரும் 5 ஆம்
திகதி சிவில் பாதுகாப்புக் குழுக்
கூட்டம் இடம்பெறவுள்ளது. இதன்
போது இந்த விடயங்கள் தொடர்
பில் முழுமையாக ஆராய்ந்து தீர்வு
கண்டறியப்படும் என்று தெரிவித்
தார். (ற–5)

# இனப்பிரச்சினை தீர்வு நோக்கி நகர வேண்டும் மைத்திரிபால

மக்களின் இறைமை, உயர்நீதிமன்
றம் மற்றும் சுயாதீன ஆணைக்
குழுக்களின் கௌரவம், சுதந்திரம்
பாதுகாக்கப்படும். அத்துடன், நாட்
டில் நல்லிணக்கம் ஏற்பட்டு நல்
லாட்சி நிலவும் என்றும் கருதுகின்
றோம். இலங்கையில் தலைவிரித்
தாடிய சர்வாதிகாரப் போக்குக்கும்
இந்த 19ஆவது திருத்தம் முடிவு
கட்டியுள்ளது. எனவே, ஜனநாயக
வழியில் நாடு பயணிக்கும் சூழல்
ஏற்பட்டுள்ளது. அரசமைப்பின்
19ஆவது திருத் தச் சட்ட விடயத்தில்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப்
பொறுத்தவரை மக் களுக்கு நாம்
வழங்கிய வாக்குறுதிகளை நிறை
வேற்றியுள்ளோம். எனவே, நிரந்
தர அரசியல் தீர்வுக்கான எமது பய
ணம் தொடரும்" – என்று அவர் கூறி
னார். (ற–சி)

## ஐ.நாவின்

ஆணையாளர் சயிட் அல்ஹுசைனை,
இலங்கைக்கான நோர்வேயின்
முன்னாள் சமாதானத் தூதுவர்
எரிக் சொல்ஹெய்ம் சந்தித்துப்
பேசியுள்ளார். அதன்போது, இலங்
கையில் இடம்பெற்ற போர்க் குற்
றங்கள் தொடர்பில் ஐ.நா. மனித
உரிமைகள் ஆணையாளர் அலு
வலகத்தால் மேற்கொள்ளப்பட்ட
விசாரணை அறிக்கை கடந்த மார்ச்
மாதம் வெளியாகாமல் ஒத்தி வைக்
கப்பட்டமை தொடர்பிலும், அந்த
அறிக்கை எதிர்வரும் செப்ரெம்பர்
மாதம் கட்டாயம் வெளியாகும்
எனவும், அவ்வாறு அந்த அறிக்கை
வெளியாகும் போது பல ஆச்சரிய
மான தகவல்களை உள்ளடக்கியி
ருக்கும் எனவும் ஐ.நா. மனித உரி
மைகள் ஆணையாளர் தெரிவித்
துள்ளார்.
இந்தத் தகவலை, எரிக் சொல்
ஹெய்ம் தனது 'ருவிட்டர்' பக்கத்
தில் வெளியிட்டுள்ளார். அத்துடன்
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையா
ளருடன் மிக நெருக்கமாக உள்ள
ஒளிப்படம் ஒன்றையும் வெளியிட்
டுள்ளார். எனினும், ஐ.நா. மனித
உரிமை ஆணையாளரை எங்கு,
எப்போது சந்தித்துப் பேசினார்
என்ற விவரங்கள் எதையும் எரிக்
சொல்ஹெய்ம் வெளியிடவில்லை(ற–5)

## பஸில்

விட்டார்.
கொழும்பிலுள்ள சிறிலங்கா சுதந்
திரக் கட்சித் தலைமையகத்தில்
நேற்று ஊடகவியலாளர் சந்திப்பு
நடத்தப்பட்டது.
எதிர்க்கட்சித் தலைவரிடம் கேள்வி
எழுப்பிய ஊடகவியலாளர்கள்,
"முன்னாள் அமைச்சர் திஸ்ஸ அத்த
நாயக்க கைது செய்யப்பட்டமை
தொடர்பில் நாடாளுமன்றத்தில்
எதிர்க்கட்சி கேள்வி எழுப்பியமை,
அதுபோல், முன்னாள் ஜனாதிபதி
மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்
னாள் பாதுகாப்புச் செயலாளர்
கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோ
ருக்கு இலஞ்ச, ஊழல் ஆணைக்
குழு அழைப்பு விடுத்தமை குறித்து
கடும் சர்ச்சைகளை ஏற்படுத்தின.
ஆனால், உங்கள் அரசில் முக்கிய
அமைச்சராகப் பதவி வகித்த பஸில்
ராஜபக்ஷ கைதுசெய்யப்பட்ட விட
யம் தொடர்பாக எவ்வித கருத்
தையும் வெளியிடவில்லையே?"
என்று கேட்டனர்.
இதற்குப் பதிலளித்த எதிர்க்கட்சித்
தலைவர் நிமல் சிறிபால டி சில்வா,
"முன்னாள் ஜனாதிபதி மஹிந்த
ராஜபக்ஷவுக்கு கௌரவமளிக்க
வேண்டும் என்றும் நாம் கூறி
னோம். முன்னாள் பாதுகாப்புச்
செயலாளரின் வீட்டுக்குச் சென்று
வாக்குமூலம் பெற்றதுபோல, இவர்
விடயத்திலும் செயற்படவேண்டும்
என்றும் கூறினோம். நாடாளு
மன்ற சிறப்புரிமைக்கு உட்பட்ட
விடயங்களைப் பற்றித்தான் நாம்
பேசவேண்டும்" ? என்றார்.
இதையடுத்து, பதிலளித்த நாடாளு
மன்ற உறுப்பினர் ரெஜினோல்ட்
குரே "சரண குணவர்தன மற்றும்
பிரேமலால் ஜயசேகர ஆகிய
நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைது
செய்யப்பட்டபோதுகூட நாம் எது
வும் பேசவில்லை" ? என்றார்.
இதையடுத்து, பதிலளித்த பிரதிய
மைச்சர் டிலான் பெரேரா, "பஸில்
ராஜபக்ஷ இலங்கைக்கு வந்ததை
யடுத்து, அவர் கைதுசெய்யப்பட்டு,
விளக்கமறியலில் வைக்கப்பட்டது
வரை சிறிலங்கா சுதந்திரக் கட்சி
நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய
நாம் அவருடன்தான் இருந்தோம்.
அவர்மீது ஐக்கிய தேசியக் கட்சி
பொய்யான குற்றச்சாட்டுகளை
முன்வைத்துள்ளது. அது தற்போது
வேறொரு இடத்தில் தாக்கம் செலுத்
துகிறது" ? என்று கூறினார்.
இவ்வாறாக அனைவரும், மழுப்
பல் போக்கில் பதிலளித்தனர்.
அதையடுத்து, வேறொரு கேள்
வியை கேட்பதற்கு இறுதி சந்தர்ப்
பத்தை வழங்கிய எதிர்க் கட்சித்
தலைவர் நிமல் சிறிபால டி சில்வா,
அந்தக் கேள்விக்குப் பதிலளித்த
பின்னர் அனைவருக்கும் நன்றி
கூறி இறுதிச் சந்தர்ப்பத்தில் அவசர
மாக ஊடகச்சந்திப்பை நிறைவு
செய்தார். (ற–சி)

## எதிர்பார்ப்பது

பற்றி யாழ். ஆயர் ஜனாதிபதியிடம்
சுட்டிக்காட்டினார். தமிழர்களின்
நீண்டகால எதிர்பார்ப்பு நிரந்தர
அரசியல் தீர்வு மட் டுமே என்றும்
அவர் எடுத்துரைத்தார்.
நிரந்தரத் தீர்வை எட்டுவது என்பது
சவால்கள் நிறைந்த கஷ்டமான
பணியானாலும் நீங்கள் அதை
உறுதியுடன் செயற்படுத்துவீர்கள்
என நம்புவதாகவும் அவர் ஜனா
திபதியிடம் கூறினார்.
யாழ். ஆயர் ஜனாதிபதியிடம் மேலும்
தெரிவித்தவை வருமாறு:–
அரசினாலும் இராணுவத்தாலும்
கைப்பற்றப்பட்ட தமிழர் நிலங்
களை மீளக் கையளிப்பதற்கு நீங்
கள் எடுக்கும் முயற்சியை மனதா
ரப் பாராட்டுகிறேன். மக்களும் மகிழ்
வுடன் சொந்த இடங்களில் குடியேறு
வதைப் பார்க்க சந்தோசமாக உள்
ளது. ஆயிரம் ஏக்கர் நிலங்களைக்
கையளிக்கும் திட்டத்தைத் தொடர்ந்து,
வடக்கு–கிழக்கில் ஆக்கிரமிக்கப்
பட்டுள்ள தமிழ் மக்களின் நிலங்
களை விரைவில் விடுவிக்க ஆவன
செய்யுமாறு கேட்டுக் கொள்கி
றேன் – என்று கூறினார்.
இவை குறித்து தான் அதிக அக்
கறை செலுத்திச் செயற்படுவதாக
ஜனாதிபதி உறுதியளித்தார் என்று
யாழ். ஆயர் கூறினார். (த)

## மஹிந்தவின்

மக்களுக்குக் கிடைத்த மிகப் பெரிய
வெற்றியாகும். இதன்மூலம், ஜனா
திபதி மைத்திரி பால சிறிசேன
இலங்கை அரசியல் வரலாற்றில்
மிக முக்கியமான இடத்தைப்
பெற்றுள்ளார்" – என்றார்.(ற–சி)

## மஹிந்த

"19ஆவது திருத்தச் சட்டமூலம்
நாடாளுமன்றில் நேற்று முன்தினம்
மூன்றில் இரண்டு பெரும்பான்மை
யுடன் நிறைவேற்றப்பட்டமை வர
லாற்று வெற்றியாகும். – என் றும்
அவர் குறிப்பிட்டார்.
"1978 ஆம் ஆண்டு, ஜே.ஆர்.ஜெய
வர்த்தனவால் கொண்டுவரப்பட்ட
நிறைவேற்று அதிகாரமுறைமையா
னது 37 வருடங்களாக இந்த நாட்
டைப் பந்தாடியது. கடந்த 37 வரு
டங்களாக ஒவ்வொரு முறையும்
ஆட்சிக்குவரும் ஜனாதிபதிகள் நிறை
வேற்று அதிகாரத்தை இல்லாதொழிப்
பதாகக் கூறியே ஆட்சிக்கு வந்த
னர். ஆனால், நடந்தது என்ன?
ஆட்சியதிகாரத்தைக் கைப் பற்றிய
பின்னர் தங்களுடைய அதிகாரத்
தைப் பலப்படுத்திக் கொண்டனர்.
2001ஆம் ஆண்டு முன்னாள் ஜனா
திபதி சந்திரிகா குமாரதுங்க நாடா
ளுமன்ற உறுப்பினர்களுக்கே தெரி
யாமல் இரவோடிரவாக நாடாளு
மன்றத்தைக் கலைத்தார். அதன்
பின்னர் ஆட்சிக்கு வந்த மஹிந்த
ராஜபக்ஷ 18ஆவது திருத்தச் சட்
டத்தைக் கொண்டுவந்து இந்த
நாட்டை சர்வாதிகார பாதைக்குக்
கொண்டுசென்றார்."– என்றும்
அவர் கூறினார்.
"18ஆவது திருத்தச் சட்டம் மூலம்
நாடாளுமன்றமும் ஜனாதிபதியும்
பிரிந்து காணப்பட்டனர்; சுயாதீன
ஆணைக்குழுக்கள் முடக்கப்பட்
டன; பொறுப்புக்கூறும் தன்மை
இல்லாதுபோனது. இவ்வாறு 37
வருடகாலமாக இந்தத் தேசத்தை
ஆட்டிப்படைத்த நிறைவேற்று அதி
காரமுறைமையை ஜனாதிபதி மைத்
திரிபால சிறிசேன இன்று இல்லா
தொழித்துள்ளார். ஜே.ஆர்.ஜெயவர்த்
தனவால் ஏற்படுத்தப்பட்ட பிரச்சி
னைக்கு ஜனாதிபதி மைத்திரி பால
சிறிசேனவே தீர்வு கண்டுள்ளார்.
இதன்மூலம் முன்னாள் ஜனாதிப
திகளான ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும்,
மஹிந்த ராஜபக்ஷவும் தோல்விய
டைந்துள்ளனர்."– என்றும் அவர்
தெரிவித்தார்.
"கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற
ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி
பெற்ற ஜனாதிபதி மைத்திரி பால
தலைமையிலான புதிய அரசு இந்த
நாட்டில் ஆட்சியமைத்தது. புதிய
அரசு நாட்டில் ஆட்சி அமைத்த
நாள் முதல், இது பொய்யான அரசு,
வாக்குறுதிகளை நிறைவேற்றாத
அரசு எனப் பல்வேறு குற்றச்சாட்டு
கள் எழுந்தன. மக்கள் ஊடகங்கள்
வாயிலாகவும் மேடைகளிலும் கூக்
குரலிட்டு வந்தனர். இன்று என்ன
நடந்துள்ளது? சொன்னதை செய்து
காட்டியுள்ளார் ஜனாதிபதி மைத்
திரிபால சிறிசேன."– என்றும் அவர்
சுட்டிக்காட்டினார்.
"19ஆவது திருத்தச்சட்டத்தினூடாக
ஜனாதிபதியின் பதவிக்காலம், ஆறு
வருடங்களிலிருந்து ஐந்து வருடங்
களாக குறைக்கப்பட்டுள்ளது. அத்
துடன், ஜனாதிபதியின் பதவியும் 2
தடவைக்கு மட்டுப்படுத்தப்பட்டு
முள்ளது. ஜனாதிபதியானவர் நாடா
ளுமன்றத்துக்கு பொறுப்புக் கூற
வேண்டும் என்பதுடன் ஜனாதிபதி
யின் நடவடிக்கைகள் குறித்து நீதி
மன்றத்தில் முறைப்பாடு செய்ய
வும் முடியும்."– என்று அவர் குறிப்
பிட்டார்.
"19ஆவது திருத்தச்சட்டம் நிறை
வேற்றப்பட்டுள்ள நிலையில், எமக்கு
இன்னுமொரு பிரதான கடமை
உள்ளது. அதாவது, 20ஆவது திருத்
தச்சட்டத்தையும் நிறைவேற்றிக்
கொள்ள வேண்டும். இதற்கான
வேலைகள் நடைபெற்றுக் கொண்டு
இருக்கின்றன. 20ஆவது திருத்தம்
தொடர்பில் சிறிய கட்சிகளும் சிறு
பான்மைக் கட்சிகளும் சற்று அச்ச
மடைந்துள்ளன. கண்டிப்பாக சிறிய
கட்சிகளையோ சிறுபான்மைக்
கட்சிகளையோ பாதிக்கும் வகை
யில் எந்தவொரு தீர்மானத்தையும்
கொண்டுவர மாட்டோம். எல்லா
கட்சிகளும் நாடாளுமன்றத்தில்
பங்குபற்றும் வகையில்தான் திருத்
தங்கள் மேற்கொள்ளப்படும். சிறிய
கட்சிகள் பல கோரிக்கைகளை முன்
வைத்துள்ளன. அவற்றையெல்
லாம் சேர்த்து தற்பொழுது தேர்தல்
முறைமையொன்று தயாரிக்கப்பட்
டுள்ளது. விரைவில் இது தொடர்
பான விடயங்கள் ஆரம்பிக்கப்
படும்" – என்றும் அவர் அங்கு
மேலும் தெரிவித்தார்.
அதேவேளை, 19ஆவது திருத்தச்சட்
டம் தொடர்பான வர்த்த மானி
அறிவித்தல் இன்று வெளியிடப்
படும் என்றும் தெரிவித்தார்.(ற–சி)

# வேலை வாய்ப்பு வழங்குமாறு பட்டதாரிகள் போராட்டம்



யாழ்ப்பாணம், ஏப். 30
வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகள் யாழ். மாவட்டச் செயலகத்தின் முன்பாக நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர். தமக்கான வேலை வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் அதற்கான உறுதிமொழி எழுத்து மூலம் வழங்கப்பட வேண்டும் எனவும் கோரியே இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

வடக்கின் 5 மாவட்டங்களையும் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகள் யாழ்.மாவட்டச் செயலகத்தின் முன்பாக நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர். அதனால் மாவட்டச் செயலகத்துக்கு வந்திருந்த பொதுமக்கள் தமது கடமைகளைநிறைவேற்ற முடியாமல் அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.

தாம் ஏற்கனவே, யாழ்.மாவட்ட அரச அதிபர், வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண முதலமைச்சர் ஆகியோருக்கு வேலை வாய்ப்புக் கோரி மனுக் கையளித்திருந்ததாகவும், அது தொடர்பில் பதில் வழங்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

நேற்றுக் காலை திரண்ட ஒரு தொகுதி வேலையற்ற பட்டதாரிகள், மாவட்டச் செயலகத்தின் இரு நுழைவாயில்களையும் மூடி, அதன் முன்பாக அமர்ந்து போராட்டம் நடத்தினர். நேற்றுப் புதன் கிழமை – பொதுமக்கள் தினம் என்பதால் மாவட்டச் செயலகத்திற்கு அதிகளவிலான பொதுமக்கள் தமது கடமைகளை நிறைவேற்ற வருகை தந்தனர். அவர்களையும் உள்ளே அனுமதிக்காது, உள்ளே சென்றவர்களையும் வெளியேற விடாது தடுத்து போராட்டம் நடத்தினர்.

மாவட்டச் செயலக அதிகாரிகள் வந்து, போராட்டக்காரர்களுடன் பேசிய போதும், போராட்டக்காரர்கள் அவர்களது கோரிக்கையை ஏற்கவில்லை. இதன் பின்னர், பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து, பொதுமக்களுக்கு பாதிப்பில்லாமல் போராட்டம் நடத்துமாறு கட்டளையிட்டனர். இதனையடுத்து வேலையற்ற பட்டதாரிகள், நுழைவாயில்களை திறந்து விட்டனர்.

அத்துடன் பொலிஸார், மாவட்ட அரச அதிபருடன் பேசி போராட்டக்காரர்களுடன் சந்திப்பை ஏற்படுத்திக் கொடுத்தனர். இதன் போது அரச அதிபர், வேலை வாய்ப்பு வழங்குவது அரசின் கொள்கை என்று தெரிவித்த போதும் அதனை ஏற்காத வேலையற்ற பட்டதாரிகள் மீண்டும் மாவட்டச் செயலக முன்றலில் அமர்ந்து இரவிரவாக தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர். (ற–5)

## மதுபான விற்பனை நிலையங்களை இரு தினங்களுக்கு மூடுமாறு உத்தரவு

யாழ்ப்பாணம், ஏப். 30
வெசாக் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 3 ஆம் மற்றும் 4 ஆம் திகதிகளில் சகல மதுபான நிலையங்கள், கொல்களங்கள் ஆகியவற்றை மூடுமாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

பௌத்தர்களின் முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றான, வெசாக் தினம் அடுத்த வாரம் கொண்டாடப்படவுள்ளது. அதனைமுன்னிட்டு எதிர்வரும் 3 ஆம் மற்றும் 4 ஆம் திகதிகளில் சகல மதுபான நிலையங்கள், கொல்களங்கள், பந்தயம் மற்றும் சூதாட்ட நிலையங்கள், களியாட்ட நிலையங்கள் ஆகியவற்றை மூடுமாறு அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குரிய உத்தரவை, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் விடுத்துள்ளார். எனவே அதற்கமைய எதிர்வரும் 3 ஆம் மற்றும் 4 ஆம் திகதிகளில் இவற்றை மூடு மாறு அரச அதிபர் பணித்துள்ளார். (ற–5)

## நேபாளத்துக்கு உதவ விரும்புவோர் உதவலாம்

யாழ்ப்பாணம், ஏப். 30
நேபாளத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய விரும்புவோர், யாழ். மாவட்டச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

நேபாளத்தில் நில நடுக்கத்தின் காரணமாக பல லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உதவிகளை வழங்க விரும்புவர்கள் இன்று மாலை 4 மணிக்கு முன்னர் யாழ்.மாவட்டச் செயலகத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

குறிப்பாக கூடாரம், குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம், மருத்துவப் பொருள்கள் மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கக் கூடிய பொருத்தமான உதவிப் பொருள்கள் ஆகியவற்றை மாத்திரம் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றை வழங்க விரும்புவர்கள், யாழ்.மாவட்ட செயலக இடர்முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் சு.ரவியுடன் (தொலைபேசி – 07739 57894) தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ற–5)

## மீள்குடியமர்ந்தவர்களுக்கு அடுத்தவாரம் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஏப். 30
வலி.வடக்கில் மீள்குடியமர்வுக்காக பதிவு செய்யதவர்களுக்கு, மீள்குடியேற்ற அமைச்சின் 13 ஆயிரம் ரூபா கொடுப்பனவு அடுத்த வாரம் வழங்கப்படும். விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் காணிகளைத் துப்புரவு செய்வதற்கு தனியானதொரு கொடுப்பனவு வழங்குவது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம்.– இவ்வாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வலி.வடக்கு மற்றும் வலி.கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஒரு தொகுதி காணிகள் மீள மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதியில் மீள்குடியமர்வதற்காக 850 குடும்பங்கள் வரையில் பதிவுகளை மேற்கொண்டுள்ளன. மீளக் குடியமர்வதற்கு பதிவுகளை மேற்கொண்டவர்களில் ஒரு தொகுதியினருக்கு 13 ஆயிரம் ரூபா கொடுப்பனவு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியவர்களுக்கு ஒரு மாதம் கடந்தும் இன்னமும் வழங்கப்படவில்லை. இந்த நிலையில், மீள்குடியேற்ற அமைச்சு வழங்கும் மேற்படி கொடுப்பனவு பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு, அடுத்த வாரமளவில் அவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விடுவிக்கப்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் தமது காணிகளை தாங்களே துப்புரவு செய்தால், ஒவ்வொரு பரப்புக்கும் குறிப்பிட்ட தொகை நிதி வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்த அரச அதிபர், எவ் வளவு தொகை நிதி வழங்குவது என் பது தொடர்பில் இதுவரை தீர்மானிக்கவில்லை என்று குறிப்பிட்டார். (ற–5)

## வாகனங்கள் தேவையில்லை அவைத் தலைவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 30
வடமாகாண சபைக்கு இனி வாகனங்கள் வேண்டாம். வாகனங்கள் வாங்கப்போவதில்லை. இருக்கிறவாகனங்களைத் திருத்திப் பாவிக்க வேண்டும் என்று வடமாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரி வித்தார்.

வடமாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தைச் சேர்ந்த 27 பேருக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு யாழ்.பொது நூலகத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையி லேயே அவர் அதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

சில திணைக்களங்களில் பாவிக்காமல் சில வாகனங்கள் உள்ளன. அரச வாகனங்களின் சாரதிகள், அதில் பயணித்த அதிகாரிகள் எல்லோரும் ஒழுங்காக இருந்திருந்தால் சில வாகனங்களைக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது.

எங்களுடைய சொத்து, வடமாகாணம் எங்களுடையது என்ற சிந்தனை எல்லோரிடமும் இருக்க வேண்டும். வாகனங்கள் எங்களுடையவை என்ற எண்ணம் வரவேண்டும். எமது சொந்த வாகனங்கள் போல அவற்றின் மீது அக்கறை கொள்ள வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற–4)

## மே தின பேரணியில் திரளுமாறு பல்வேறு பகுதிகளில் சுவரொட்டி

யாழ்ப்பாணம், ஏப். 30
யாழ். நகரில் நாளை நடைபெற இருக்கும் மே தின எழுச்சிப் பேரணியில் கூட்டுறவாளர்கள் சகலரையும் அணி திரண்டு பேரணியில் கலந்துகொள்ளக் கோரும் சுவரொட்டிகள் பல்வேறு பிரதேசங்களிலும் ஒட்டப்பட்டுள்ளதுடன், அவை நேற்று மக்களிடமும் விநியோகிக்கப்பட்டன.

வடக்கு மாகாண கூட்டுறவாளர்களால் இந்தமுறை தமிழரின் பாரம்பரியத்தை எடுத்துக் காட்டும் வகையிலான மேதின எழுச்சிப் பேரணி, ஊர்திகள் என்பன இடம்பெறவுள்ளன. இதில் வடமாகாண கூட்டுறவாளர்கள் இணைந்து ஒருமித்த குரல் கொடுக்கவுள்ளனர். இந்த மே தினத்தை எழுச்சியுடன் கொண்டாடும் முகமாக மக்கள் மத்தியில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்படுவதுடன் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டும் வருகின்றன.

அதனைவிட கூட்டுறவு நிறுவனங்களுக்குமுன்பாக பதாகைகள் ஒட்டப்பட்டுள்ளதோடு கூட்டுறவு கொடிகளும் பறக்க விடப்பட்டுள்ளன. (ற–17)

## ஆயிரத்து 73 பேருக்கு நிரந்தர நியமனம்: பிரதம செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.30
வடக்கில் தற்காலிகமாகப் பணியாற்றிய ஆயிரத்து 73 உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் சில நியமனங்கள் ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று வடமாகாணப் பிரதம செயலாளர் அ.பத்திநாதன் தெரிவித்தார்.

வடமாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தைச் சேர்ந்த 27 பேருக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு யாழ்.பொது நூலகத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டுஉரையாற்றுகையிலேயே அவர் அதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

180 நாள் வேலை செய்தவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கலாம் என்ற சுற்றறிக்கை விடுக்கப்பட்டு 6 மாதங்கள் நிறைவடைகின்ற நிலையில் உரிய தரவுகள், ஆவணங்கள் விரைவில் வந்து சேர்ந்திருக்க வேண்டும். அதற்கு செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் விரைந்து நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஏனைய மாகாணங்களில் பல மாதங்களுக்கு முன்னர் அந்தப் பணிகள் நிறைவடைந்து விட்டன. நாங்கள் சற்றுத் தாமதமாகிவிட்டோம். – என்று அவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் உங்களுக்கு நியமனம் கிடைக்குமா? எதிர் காலம் சிறக்குமா என்று எண்ணியிருப்பீர்கள். வடமாகாண முதலமைச்சருடைய, மாகாண அமைச்சர்களுடைய, மாகாண உறுப்பினர்களுடைய முயற்சியால் நியமனம் கிடைத்துள்ளது.

> “ திணைக்களத் தலைவர்கள் விரைந்து நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஏனைய மாகாணங்களில் பல மாதங்களுக்கு முன்னர் அந்தப் பணிகள் நிறைவடைந்து விட்டன. நாங்கள் சற்றுத் தாமதமாகிவிட்டோம்.
> கடந்த காலங்களில் உங்களுக்கு நியமனம் கிடைக்குமா? எதிர் காலம் சிறக்குமா என்று எண்ணி யிருப்பீர்கள். வடமாகாண முதலமைச்சருடைய, மாகாண அமைச்சர்களுடைய, மாகாண உறுப்பினர்களுடைய முயற்சியால் நியமனம் கிடைத்துள்ளது. — என்று தெரிவித்தார் வடமாகாணப் பிரதம செயலாளர் அ.பத்திநாதன்

நியமனம் பெறுகையில் உங்களது பொறுப்புகள் அதிகரிக்கின்றன. நிரந்தர நியமனம் கிடைத்த பின்னும் மேலதிக நேரக் கொடுப்பனவு கிடைக்குமா, வாகனம் கிடைக்குமா, மோட்டார் சைக்கிள் கிடைக்குமா, விடுதி கிடைக்குமா என்று பார்ப்பது. இனிமேல் அவ்வாறு பார்க்க முடியாது.

அரச உத்தியோகத்தர் தனது சேவைக் காலத்தில் நல்ல பெறுபேற்றை அடைய 2 விடயங்கள் முக்கியம். முதலாவது அர்ப்பணிப்பு. உங்களது சுய சிந்தனைக்கு மேலாக நிறுவனத்துக்காகச் சேவை ஆற்றுகிற, நிறுவனம் கேட்கும் போதெல்லாம் அவற்றுக்காக உங்களுடைய உழைப்புகளை நிறுவனத்துக்கு வழங்கும் அர்ப்பணிப்பு இருக்க வேண்டும்.– என்றும் அவர் தெரிவித்தார்.

இரண்டாவது, விருப்பம். உங்களுக்குத் தந்துள்ள வேலையை விருப்பத்தோடு, ஆர்வத்தோடு ஆற்றுகிற பக்குவம் ஏற்பட வேண்டும். இரண்டும் இருக்குமாக இருந்தால் அரச ஊழியர் தனது சேவைக் காலத்தில் அரச தலைவருடைய நன்மதிப்பைப் பெற முடியும். மக்களுடைய நன்மதிப்பைப் பெற முடியும். இந்த இரண்டும் இருந்தால் தான் அரச சேவைக் காலத்தில் நீங்கள் நல்ல உத்தியோகத்தராகச் செயற்பட முடியும். அர்ப்பணிப்பான சேவையை நீங்கள் மாகாணத்துக்குச் செய்ய வேண்டும்.– என்றும் அவர் குறிப்பிட்டார். (ற)



## திணைக்கள உத்தியோகத்தர் 27 பேருக்கு நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், ஏப்.30

வடக்கு மாகாணத்திலுள்ள வீதி அபிவிருத்தித் திணைக்களத்தைச் சேர்ந்த 23 பேருக்கும் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தைச் சேர்ந்த 4 பேருக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நியமனக் கடிதங்களை வழங்கினார்.

இதுவரை காலமும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வந்த அவர்களுக்கு மைத்திரி அரசின் 180 நாள் வேலைத்திட்டத்தில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் வடமாகாண அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம், பிரதம செயலாளர் அ.பத்திநாதன், மாகாண சபை உறுப்பினர்களான பரஞ்சோதி, கஜதீபன், மாகாண எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ற-4)

## பல்கலை மாணவர் மீது வாள்வெட்டு; சந்தேகநபர்கள் அறுவருக்கு மறியல்

வலி.தென்மேற்கு,ஏப்.30

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட ஆறு சந்தேக நபர்கள் மல்லாகம் நீதிவானின் உத்தரவின் பேரில் ஒருவாரகாலத்துக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மானிப்பாய் செல்லமுத்து திறந்த வெளியரங்கில் இடம்பெற்ற இசைக்கச்சேரிக்குச் சென்றுவிட்டு இரவு எட்டு மணியளவில்திரும்பிச்சென்றுகொண்டிருந்த மூன்று மாணவர்களை பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் சென்ற ஒரு குழுவினர், சுதுமலை வீதியில் வைத்து வழி மறித்து தாக்குதல் நடத்தினர்.

இந்தச் சம்பவத்தில் வவுனியாவைச்சேர்ந்தஎன்.முரளிதரன்(வயது – 23)என்னும் மாணவன் கை துண்டிக்கப்பட்ட நிலையில்கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். முல்லைத்தீவைச் சேர்ந்த எஸ்.ஜெபர்ஸன், வவுனியாவைச் சேர்ந்த க.ரஜீவன் ஆகிய இரு மாணவர்களும் வெட்டுக் காயங்களுடன் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணையில் ஈடுபட்டுள்ள மானிப்பாய் பொலி ஸார் சந்தேகத்தின் பேரில் சுது மலை, கட்டுடை ஆகிய இடங்களைச் சேர்ந்த ஆறு இளைஞர்களைக் கைது செய்து, மல்லாகம் நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய போது நீதிவான் இவர்களை 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் அடையாள உத்தரவிட்டுள்ளார். (ற-115,4)

## கஞ்சா வைத்திருந்த நபருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஏப்.30

கஞ்சா வைத்திருந்த வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊழியர் ஒருவருக்கு யாழ். நீதிவான் நீதிமன்று நேற்று 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

கடந்த வாரம் கைது செய்யப்பட்ட குறித்தநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

நேற்று அவருக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அவர் குற்றத்தை ஏற்றுக்கொண்டார். அதையடுத்து அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டதுடன், ஐம்பது மணித்தியாலங்கள் கட்டாய சமூக சேவை செய்யுமாறும் உத்தரவிட்டார். (ற-103)

# நெல் கொள்வனவுக்கு நிதி ஒதுக்குமாறு கோரிக்கை

மன்னார், ஏப்.30

மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளின் நெல்லை கொள்வனவு செய்ய தேவையான நிதியை ஒதுக்குமாறு வன்னி மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவரும் கைத்தொழில், வணிகத்துறை அமைச்சருமான ரிசாத் பதியுதீன் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவிடம் வேண்டு கோள் விடுத்துள்ளார் என வர்த்தக வாணிப கைத்தொழில் அமைச்சின் ஊடகப் பிரிவு நேற்றுத் தெரிவித்துள்ளது.

வன்னி மாவட்டத்தில் தற்போது நெல் அறுவடை இடம்பெறுவதாகவும் விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை கொள்வனவு செய்வதற்கு போதுமான நிதி தம்மை வந்தடையவில்லையெனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் நெல் கொள்வனவுக்கு தேவையான நிதி 200 இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும்நிதிஅமைச்சருக்கு அமைச்சர் ரிசாத் பதியுதீனால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. – என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

## தபால் பெட்டி இல்லாததால் அவதிப்படும் மாசார் மக்கள்

பளை, ஏப். 30

363 குடும்பங்கள் வசிக்கும் பளை, மாசார் கிராமத்துக்கு தபால் பெட்டி ஒன்று இல்லை என்று அந்தப் பகுதி மக்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர்.

அந்தப் பகுதியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையில் தபால் பெட்டி வைப்பதற்கு சங்க நிர்வாகத்திடம் இணக்கக் கடிதம் வாங்கி கொடுத்து பல மாதங்களாகிய போதும் தபால் திணைக்களத்தால் பெட்டி வைக்கப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

தபால் பெட்டி இல்லாததால் அந்தப் பகுதி மக்கள் 3 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள சோரன்பற்று உப தபால்நிலையத்துக்குச்செல்லவேண்டியுள்ளது.

பளை தபால் நிலையக் கட்டுப்பாட்டில் உள்ள மாசார் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்து வசித்து வருவதாகவும் இங்குள்ள மக்களுக்கு பளை தபால் நிலையத்திலிருந்து கடிதங்கள் பட்டுவாடா செய்து வருவதாகவும் சோரன்பற்று உப தபால் நிலையம் தூரத்தில் இருப்பதால் கடிதங்கள் அனுப்புவதாயின் மக்கள் வாகனங்களில் பயணித்து பளைக்குச் செல்லவேண்டியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

மாசார் பகுதியில் தபால் பெட்டி வைக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு கடந்தஐந்து வருடங்களுக்கு மேலாக முறையிட்டு வருகின்றபோதிலும், பயன் கிடைக்காததால் ஜனாதிபதியிடமும், தபால்துறை அமைச்சரிடமும் முறையிடவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (ற-9)

## திருட்டு சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.30

நீதிமன்ற உத்தியோத்தர் ஒருவரின் வீட்டில் புகுந்து கையடக்கத் தொலைபேசி மற்றும் தங்க நகைகளைத் திருடிய குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவர் நேற்று யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டார்.

கடந்த மாதம் 3ஆம் திகதி அரியாலையில் உள்ள குறித்த உத்தியோகத்தரின் வீட்டுக்குள் நுழைந்த சந்தேகநபர் அங்கிருந்த பொருள்களைத் திருடினார் என்று யாழ். பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ற-13)

## இணை பிரியாத நண்பிகள் இறப்பிலும் பிரியமறுத்தனர்

தென்மராட்சி, ஏப்.30

பால்ய சிநேகிதிகள் இருவர் இறப்பிலும் பிரிய மறுத்தனர். இந்தச் சம்பவம் சாவக்சேரி, காளிகோயில் வீதியில் நடந்துள்ளது.

அயல் வீடுகளில் நீண்ட காலம் வசித்த இவர்களில் ஒருவ ரான நல்லையா நாகம்மா (வயது–79)என்பவர் கடந்த 27ஆம் திகதி திங்கட்கிழமை உயிரிழந்தார். அவர் இறந்த செய்தியைக் கேட்ட சினேகிதியான சபாபதி நாகம்மா (வயது –79) என்பவர் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை உயிரி ழந்தார்.

இரு மரண வீடுகளும் அருகருகே பந்தல்கள் போடப்பட்டிருந்தன. ஒருவரின் இறுதிக்கிரியை நேற்றுநடைபெற்றது. மற்றையவரின் இறுதிக்கியைகள் இன்று நடைபெறவுள்ளது.

சிறு வயதுமுதல் ஒன்றாகப் பழகி – வாழ்ந்த இரண்டு பெண்களும் 24மணி நேரத்தினுள் மரணமடைந்தது குறித்து இவர்களின் நட்பின் பெருமையைப் பற்றி இறுதிக் கிரியைகளில் பங்குபற்றியவர்களால் பேசப்பட்டது. (ற-9)

## கல்வி அமைச்சரின் பயணத்தால் தடைப்பட்டிருந்தவை நிறைவேறின

### மல்லாகம் மகா வித்தியாலயத்தில்

வலி வடக்கு ஏப். 30

தெல்லிப்பழை கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட மல்லாகம் மகா வித்தியாலயத்துக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் மேற்கொண்ட சில நிமிடப் பயணத்தால் அங்கு பல ஆண்டுகளாகக் தேங்கிக் கிடந்த செயற்பாடுகள் சீர் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

மாணவர்களின் விஞ்ஞான ஆய்வு கூடத்தில் மாணவர்கள் ஆய்வு கூடத்தைப் பயன்படுத்த முடியாத நிலையில் தூசி நிறைந்த கதிரைகள் அடுக்கப்பட்டுக் கிடந்த ஆய்வு கூடம் துப்பரவு செய்யப்பட்டுள்ளது என்று பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவித்தனர். அத்துடன் பாடசாலையில் பயன்படுத்தப்பட்டு பின்னல் அறுந்த நிலையில சீர் செய்யாது தூக்கி மேல்மாடியில் வெய்யிலிலும் மழையிலும் போடப்பட்டிருந்த ஆசிரியர்களின் தரமான கதிரைகள் உரிய முறையில் பாதுகாப்பான இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கைவிடப்பட்ட நிலையில் மாணவர்களின் பயன்படுத்தமுடியாத நிலையில் இருந்த கணினிகளை திருத்தம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ற-86)

# கீழ் உழைப்புப் பட்டதாரிகளையும் பட்டதாரி நியமனத்துள் உள்வாங்குக

### வடமாகாண கீழுழைப்பு பட்டதாரிகள் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப் 30

கீழ் உழைப்புப் பட்டதாரிகளை பட்டதாரி நியமனத்துக்குள் உள்வாங்குமாறு வடமாகாண கீழுழைப்பு பட்டதாரிகள் சங்கத்தால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

மே தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள இந்த கோரிக்கைக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கையின் கீழ் உழைப்பு பட்டதாரிகள் சுமார் 16 ஆயிரம் பேர் உள்ளனர். அதிலும் வடமாகாணத்தில் 2 ஆயிரத்து 500 பேர் வரையில் உள்ளனர். வறுமை நிலை காரணமாகக் கிடைத்த அரச தொழிலைச் செய்கின்றனர். 10 வருடங்களுக்கு மேலான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளனர். அதனால் பட்டதாரிகள் ஆட்சேர்ப்புக்குள் போக முடியாமல் மத்திய மற்றும் மாகாண அரசின் அலுவலகங்களில் பணியாற்றிவருகின்றனர்.

அரச சுற்றறிக்கைகள் மூலம் குறித்த பதவிகளில் இருந்து உள்ளீர்க்கப்பட்டு பட்டதாரிகள் நியமனம் வழங்கப்பட்டு அவர்களுக்கு நியமனமும் வழங்கப்பட்டுள்ளது. இதேபோன்று அகில இலங்கை ரீதியாக அரச பொது முகாமைத்துவ உதவியாளர் சேவையிலும் கிராம சேவையாளர் சேவையிலும் ஆயுள் வேத மருந்துக் கலவையாளர், அலுவலக உதவியாளர் சேவை மற்றும் வேறு பல பதவி உயர் நிலைகளிலும் பணி செய்பவர்களை பட்டதாரி நியமனத்துக்குள் அவர்களின் சேவைக் காலம் பாதிக்காதவாறு உள்ளீர்ப்புச் செய்து நியமனங்கள் வழங்க வேண்டும்.இவர்களின்உயர் கல்வித் தரத்தைகருத்தில் கொண்டு நாட்டின் அபிவிருத்தியில்இணைத்துக்கொள்ள வேண்டும்"– என்றுள்ளது. (ற-10)

## முக்கூட்டு வலைகள் பாவித்த மீனவர்களுக்கு அபராதம்

முல்லைத்தீவு, ஏப்.30

முல்லைத்தீவு நந்திக்கடல் நீரேரியில் தடை செய்யப்பட்ட முக்கூட்டு வலையை பாவித்த இரண்டு மீனவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதவான் எம்.எஸ். ஷம்சுதீன் நேற்றுத் தீர்ப்பளித்தார்.

மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட வலைகளை அழிக்குமாறு முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளுக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.சுதாகரன் தலைமையிலான குழு நடந்த செவ்வாய்க்கிழமை நந்திக் கடல் நீரேரியில் நடத்திய சோதனை நடவடிக்கையில், முக்கூட்டு வலையை பாவித்து மீன்பிடித்த இரண்டு மீனவர்களைக் கைது செய்தது. அவர்களிடம் இருந்த ஒரு தொகுதி முக்கூட்டு வலைகளையும் அதன் மூலம் பிடிக்கப்பட்ட மீன்களையும் கைப்பற்றியிருந்தனர்.

அவர்கள் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது நீதிவான் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ஈ)

## ரணில் பிரதமராக வருவதற்கு மக்கள் காங்கிரஸே காரணம்

மன்னார் நகர சபையின் உறுப்பினர் நகுசீன் கூறுகிறார்



மன்னார், ஏப் 30
ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்று பிரதமராக இருப்பதற்கு எமது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியும் அதனது தேசியத் தலைமைத்துவமுமே காரணமாகும். ஆனால் இன்று சில வங்குரோத்து நிலை அரசியல்வாதிகள் மக்கள் மத்தியில் பிரபல்யம் ஆக வேண்டும் என்பதற்காகச் செல்லாத தீர்மானங்களை எடுப்பது நகைப்புக்கிடமானது என மன்னார் நகர சபை உறுப்பினர் நிலாமுதீன் நகுசீன் தெரிவித்தார்.

வன்னி மாவட்டத்தின் அரசியல் நிலைவரம்தொடர்பில்ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேலும் அவர் கூறியதாவது:

கடந்த காலங்களில் இடம் பெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் எமது தலைவர் அமைச்சர் ரிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வேட்பாளர்களை நிறுத்தியது. இந்த வேட்பாளர்களுக்கு மக்கள் வாக்களித்து வெற்றி பெறச் செய்தார்கள். இவ்விதம் மக்கள் வாக்களித்தமை அமைச்சர் ரிசாத் பதியுதீன் மீது கொண்ட நம்பிக்கையின் வெளிப்பாடே. அதே போல் இந்த வேட்பாளர்கள் தோற்கடிக்கப்படவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு எமது வெற்றிக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் படுதோல்வி அடைந்தார்கள். அவர்கள்கட்சியின்பிரதமஅமைப்பாளர்கள் என்றும் தெரிவித்து வந்ததை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

மக்கள் செல்வாக்கில்லாமல் நிராகரிக்கப்பட்ட ஒரு குழுவினர் இந்த மன்னார் மாவட்டத்தில் எமது தேசிய தலைமைத்துவம் மேற்கொண்டுள்ள அபிவிருத்திகளைக் கண்டு வாயடைத்துப் போயுள்ளதுடன், எதிர்காலத்திலும் மக்கள் இந்த தேசியத் தலைமைத்துவத்துடன் தான்இருப்பார்கள்என்பதைஅறிந்து கொண்டதன் விளைவாக தான் தோன்றித்தனமான தீர்மானங்களை வெளியிடுகின்றனர். இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் கடும் சினம் கொண்டுள்ளது.

இன்று ஜனாதிபதி மைத்திரிபால ஆட்சி அமைப்பதற்கு முழுமையாக ஆதரவு வழங்கிய கட்சி தான் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியாகும். அன்று மன்னாரில் தேர்தல் பிரசாரத்தை ஏற்பாடு செய்திருந்த எமது கட்சியின் தலைவர் ரிசாத் பதியுதீன் தலைமையில் மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டு பேசும்போது, முஸ்லிம்களின் தலைவராக அமைச்சர் ரிசாத் பதியுதீன் தான்அடையாளப்படுத்தப்பட்டுள்ளார். அவர் முன்னாள் அரசில் வகித்த பலமிக்க அமைச்சுப் பதவியைக் கூட தூக்கி எறிந்துவிட்டு எமது வெற்றிக்குப் பெரும் பங்களிப்புச் செய்துள்ளார் என்று கூறியதை நினைவுபடுத்த விரும்புகின்றேன். புதிய அரசை உருவாக்க எமது தலைவர் ரிசாத் பதியுதீனுக்கு அழைப்பு விடுத்த ரணில் விக்ரமசிங்க பிரதமராக வருவதற்கு ஆதரவு வழங்கியதும் எமது தலைமை என்பதை இங்கு கூறிக் வைக்க விரும்புகின்றேன்–என்றார். (த)

## 18 ஐ ஆதரித்தமைக்கு வருந்துகிறார் ஹக்கீம்



கொழும்பு, ஏப் 30
அரசமைப்பின் 18ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித் தமைக்கு மிகவும் மனம் வருந்துவதாகத் தெரிவித்துள்ளார் அமைச்சர் ரவூப் ஹக்கீம். நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற 19 ஆவது திருத்தம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

அரசமைப்பின் 18ஆவது திருத்துக்கு ஆதரவாக வாக்களித்ததன் மூலம் ஏற்பட்ட விளைவுகளையும் பலாபலன்களையும் அனுபவித்துவிட்டோம். அந்தச் சட்டத்துக்கு ஆதரவு அளித்த விடயம் தொடர்பில் இன்று மனம் வருந்துகின்றேன். அரசமைப்பின் 18 ஆவது திருத்தச் சட்டத்துக்கு வாக்களித்து அது நிறைவேற்றப் பட்டதன் மூலம் இன்றுவரை நாம் பல் வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றோம். ஊழல் மோசடிகள் மேற்கொள்ளப்பட்டன. மதச் சார்பான பிரச்சினைகள் தூண்டி விடப்பட்டன. தவறு இழைத்தவர்களுக்கு மேற்படி சட்டத்தின் ஊடாகப் பாதுகாப்பு வழங்கப்பட்டது. இவையே இன்று என்னைக் கவலையடையச் செய்கின்றன–எனக் குறிப்பிட்டார். (த-10)

# மக்களின் உரிமையும் தமிழின விடுதலையும் உறுதிப்படுத்தப்பட அணி திரள்வோம்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மே நாள் அறை கூவல்

யாழ்ப்பாணம், ஏப் 30
உழைக்கும் மக்களின் உரிமைகளும் தமிழின விடுதலையும் இந்த மே நாளில் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது மே தினச் செய்தியில் அறைகூவல் விடுத்துள்ளது.

இது குறித்துக் கூட்டமைப்பின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உலகத் தொழிலாளர் தினம் உலக நாடுகளிலும் இலங்கையிலும் மே முதல் நாளில் கொண்டாடப்படுகின்றது.

தொழிலாளர் வர்க்கம், பாட்டாளி வர்க்கம், உழைக்கும் வர்க்கம் என அழைக்கப்படடது. முதலாளி வர்க்கத்துக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிராக உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளுக்காக குரல் எழுப்பும் நாளாகவும் இந்த மே நாள் கொண்டாடப்படுகின்றது. இந்தத்தினம் அமெரிக்க நாட்டில் தொழிலாளர் உரிமைகளை வென்றெடுத்த நாளாக ஆரம்பிக்கப்பட்டது.

பின்னாளில் தொழிலாளர் வர்க்கம், விவசாயிகள்மற்றும்ஏனையஉழைப்பாளர்களையும் இணைத்து அத்தோடு மக்களின் அரசியல் உரிமைகள் மற்றும் மனித உரிமைகளுக்காகவும் போராடி வந்தது. இத்தகைய போராட்டங்கள் உலக நாடுகளில் முதலாளித்துவத்திற்கும், ஏகாதிபத்தியத்திற்கும் எதிராக, அந்தந்த நாடுகளில் ஆட்சிகளை மாற்றித்தொழிலாளர்பலம்கொண்ட ஆட்சிகளாக கார்ல்ஸ் மார்க்ஸின் பொருளாதார தத்துவத்தின் அடிப்படையில் பொதுவுடமைத் தத்துவ சோசலிசஆட்சிகளாக மாற்றமடைந்துள்ளன.

அத்தகைய நாடுகளில் ரஷ்யா, சீனா போன்ற நாடுகளை உதாரணமாகக் கூறலாம். பல நாடுகளில் தொழிலாளர் புரட்சிகள் ஏற்பட்டு வெற்றியடைந்து சுதந்திரமடைந்த நாடுகளாய் மலர்ந்தன.

இவ் வரிசையில் ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு எதிராக இலங்கையிலும் போராட்டங்கள் வெடித்தன.

தொழிலாளர் வர்க்கமும் கணிசமான பங்கை இலங்கையின் சுதந்திரத்துக்காக அர்ப்பணித்தது. ஆனால் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த போது அந்தச் சுதந்திரம் தமிழ் பேசும் மக்களுக்குக் கிடைக்கவில்லை. ஜனநாயக அரசியல் மற்றும் தொழிலாளர் உரிமைகள் அடக்குமுறைக்கும்ஒடுக்குமுறைக்குமுள்ளாக்கப்பட்ட நிலையே ஏற்பட்டுள்ளது.

பௌத்த, இராணுவ மயப்படுத்தப்பட்ட ஆட்சிகளாகவே இலங்கையில் வளர்ச்சியடைந்துள்ளது. ஒரு தேசிய இனம், தமிழ் பேசும் மக்கள், ஆட்சி உரிமையை மட்டுமல்ல தனது இன, மொழி, கலை, பண்பாடு, நிலஉரிமை ஆட்சிமுறை உள்ளிட்ட இனஅடையாளங்களையே அழிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இத்தகைய சூழ் நிலையில்தான் கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக இன விடுதலைக்கான ஜனநாயக வழிப் போராட்டங்களும், மனித உரிமைக்கும், உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளுக்கும் ஆன மக்கள், தொழிலாளர் போராட்டங்கள் நடைபெற்றன. இராணுவ அடக்கு முறைக்குள் இத்தகைய ஜனநாயகப் போராட்டங்கள் ஒடுக்கப்பட்டபொழுது முப்பதாண்டுகளுக்கும் மேலாக ஆயுதப் போராட்டமும் இடம்பெற்று இன்று தமிழர் தேசம் இராணுவ அடக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. இலங்கையில் ஜனநாயக உரிமைகள், மனித உரிமைகள் மீறப்பட்டு அதிகார துஷ்பிரயோகங்களும் போர்க்குற்றங்களும் உச்சமடைந்துள்ளன. இந்த நிலையில் அரசுகளது சர்வாதிகாரத்துக்கும் குடும்ப ஆட்சிக்கும் ஊழல் நிறைந்த கொள்கைகளுக்கும், தமிழின அழிப்புக்கும் எதிராக இலங்கையில் ஒரு ஜனநாயகப் புரட்சி 2015 ஜனவரியில் நடைபெற்று ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது.

100நாள்வேலைத்திட்டத்தைஆதரித்து சிங்கள மக்கள் பல எதிர்ப்புகளுக்கும் மத்தியில் குறிப்பாகத் தமிழ் பேசும் மக்கள் தற்போதைய ஆட்சியை உருவாக்கியுள்ளனர்.

இந்தச் சூழ்நிலைக்கு எதிராக, ஊழல் குற்றங்களை மறைக்கும் நோக்கில் தென்னிலங்கையிலும் நாடாளுமன்றத்திலும் கிளர்ச்சிகள் நடைபெறுகின்றன. தமிழ்–முஸ்லிம் மக்களுக்கெதிரான இன மத துவேசக் குரல்கள் தீவிரத்துடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையைச் சுட்டிக் காட்டவேண்டும். தற்போதய ஆட்சியை வீழ்த்தி ஊழல் குற்றங்களிலிருந்து தப்பிவிட ஊழல் அரசியல் சக்திகள் முயற்சிக்கின்றன.

இலங்கையில் ஆட்சி அதிகாரங்களைக்கைப்பற்றுவதற்குமேநாளில் அரசியல் சக்திகள் தங்கள் பலத்தைக் காட்டுவதற்கே முயல்கின்றன. வேறு நாடுகளிலும் இவ் வாறே மே நாள் பயன்படுத்தப்படுகிறது.

ஆனால் தமிழ் பேசும் மக்கள் பிரதேசங்களில் இராணுவ அடக்கு முறை தொடர்கின்றது. ஜனநாயக மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர், விவசாயிகள், மீனவர் வாழ்வுரிமை, நிலவுரிமை, மனித குலப் பாதுகாப்பு குறிப்பாக பெண்களின் வாழ்வுரிமைகள் பாதுகாப்பு கேள்விக்கும் அடக்கு முறைக்கும் உள்ளாகியுள்ளன.

அரசு, மக்களின் பறிக்கப்பட்ட நிலங்கள் விடுவிக்கப்பட்டு அந்த நிலங்களை உரிமையுள்ள மக்களிடம் கையளிக்கவும் மீள்குடியேற்றவும் வாழ்வாதாரத்தைத் கட்டி எழுப்பவும் 100நாள்திட்டத்தில்அரசுஉறுதிவழங்கியும், அவற்றை முழுமையாக நிறைவேற்றவில்லை. நிலவுரிமைகளுக்கு எதிராகவும் மீனவர் மற்றும் விவசாயிகள் வாழ்வுரிமைக்கெதிராகவும் இராணுவ ஆதிக்கம் தொடர்கின்றது. இராணுவம் மக்களின் நிலங்களில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. மக்களின் நிலங்களை கையளிக்க மறுக்கிறது. இந்தநிலைபெரும்சவாலாகஉள்ளது. இந் நிலையில் இராணுவம் தமிழர்களது நிலத்தில் விவசாயம்செய்து உற்பத்திகளை மக்கள் சந்தைக்குக் கொண்டு வந்துள்ளனர். சென்ற ஆட்சிக் காலத்தில் காணாமற்போனோர் பற்றிப் பதிலளிக்க இன்றைய அரசும் பொறுப்புக் கூறவில்லை. நீண்டகாலமாக நியாயமற்ற முறையில் கைதிகளாகவுள்ளோருக்கு மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

விவசாயிகள் தங்கள் உற்பத்திகளைச் சந்தைப்படுத்த வாய்ப்பில்லை. உற்பத்திச் செலவையே பெறமுடியவில்லை. பல இலட்சம் மக்கள் இன்னமும் அகதிகளாக இருபத்தைந்து ஆண்டுகளாக முகாம்களில் உள்ளனர். அவர்கள் மட்டுமல்ல தொழில் துறைகளில்லாமையாலும் வேலை வாய்ப்பு இல்லாமையாலும் இலட்சக் கணக்கான மக்கள் வறுமைக் கோட்டின் கீழேயே பட்டினியுடன் வாழ்ந்து வருகின்றனர். வாங்கும் சக்தியற்றவர்களாகிவிட்டனர். வாழ் விழந்த 80,000ற்கும் மேற்பட்ட பெண்கள் அநாதரவாகவும், கர்ப்பிணித் தாய்மார் குழந்தைகள் அங்கவீனர்கள் என உழைப்பற்று ஊட்டச்சத்து அற்று குற்றுயிராகி வருகின்றனர்.

போரினால் பேரழிவுக்குள்ளான தமிழ் மக்கள் பிரதேசங்களில் தொழிற்றுறையைக் கட்டியெழுப்பவும், சீர்குலைந்துள்ள சமுதாயத்துக்குப்புனர்வாழ்வளிக்கவும்வேலை வாய்ப்புக்களை உருவாக்கவும் அதன் மூலம் உற்பத்தியை பெருக்கவும் திட்டங்கள் வகுக்கப்படவில்லை. பெரு முதலாளிகளின் முதலீடுகளால், சிறுதொழில் வர்த்தகம் வீழ்ச்சியடைந்து வருகிறது.

பல்கலைக்கல்வியும், வேலைவாய்ப்பும் உலகமயமாக்கல், சந்தைப் பொருளாதாரம் எனும் புதிய பொருளாதாரக் கொள்கையை ஈடுசெய்யும் வகையில் திட்டமிடப்படவில்லை.

வாழ்க்கைச் செலவுக்கேற்ப சம்பள உயர்வு இல்லை எனும் போராட்டம் நடைபெறுகிறது. ஆனால் வடக்குக் கிழக்கு மக்கள் வறுமைக் கோட்டின் கீழும் வாங்கும் சக்தியற்றும் ஊட்டச்சத்தற்றும் சீர்குலைந்து வருகின்றபோது பொருளாதார வாழ்வும், வளமும்எங்கேஏற்பட்டிருக்கிறது.

எனவே மே 1ஆம் நாளில் அடக்குமுறைக்கும்ஒடுக்குமுறைக்கும்ஆளாகியுள்ள தமிழ் இனம் அழிக்கப்படும் நிலையிலிருந்து விடுதலை பெறவும், இந்நிலைக்குள் அடக்கப்பட்டுள்ள உழைக்கும் வர்க்கத்தின் வாழ்வுரிமையை நிலை நாட்டவும் நாம் ஒன்றுபட்டு அணிதிரள்வோம் என அறைகூவி அழைக்கின்றோம்– என்றுள்ளது.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** அயலில் உள்ளவர்களையும், சக ஊழியர்களையும் அனுசரித்துப் போகவும். நண்பர்களோ உறவினர்களோ சகோதர, சகோதரிகளோ எவரையும் முழுமையாக நம்பவும்வேண்டாம், விமர்சிக்கவும் வேண்டாம்.

**இடபம்:** உங்களுக்கு ஏற்றத்தையும், பொலிவையும் கொடுக்கும் நாளிது. வெளியூர் பயணங்களால் அனுகூலம் உண்டு. தாய் வழி உறவினர்களில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். உத்தியோகத்தில் முன்னேற்றம் ஏற்படும்.

**மிதுனம்:** எதிரிகளின் பலம் என்ன என்று உங்களுக்குத் தெரிய வரும். உடல்நலம் சிறப்பாக இருக்கும். பதவி உயர்வும் இடமாறுதலும் கிடைக்கும். பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும்.

**கடகம்:** நீங்கள் எடுத்த காரியம் ஜெயமாகும் நாளிது. பிள்ளைகள் தங்கள் சொற்படி கேட்டு நடப்பார்கள். அதனால் சமுதாயத்திலும், உறவினர் மத்தியிலும் உங்கள் மதிப்பு கூடும். ஆடை அணிகலன்கள் சேரும்.

**சிங்கம்:** புண்ணிய ஸ்தல பயணம், வெளிநாட்டு பயணம் தங்களைத் தேடி வரும், பயன்படுத்திக் கொள்ளுங்கள். அனுபவம் மிகுந்த வேலையாள்களைப் பார்த்து ஒப்படையுங்கள், வெற்றி வரும்.

**கன்னி:** கூட்டுத்தொழில் செய்பவர்கள் தொழில் கூட்டாளரை அனுசரித்துப் போங்கள். உத்தியோகத்தில் இருந்த தாமத நிலை மாறும். மேலதிகாரிகளின் பேராதவு கிடைக்கும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**துலாம்:** உங்களுக்கு நல்ல பலன்கள், நல்ல முறையில் வந்து சேரும். பொருளாதார முன்னேற்றம், வழக்கு விடயங்களில் வெற்றி என நற்பயன்கள் வந்து சேரும்

**விருச்சிகம்:** உத்தியோகத்தில் பதவிஉயர்வு, இடமாற்றம், பணியாளர்கள் ஆதரவு, மேல்மட்ட அதிகாரிகளின் ஆதரவு என நல்ல பலன்கள் ஏற்படும். சிறுசிறு பாதிப்புகள் வந்தாலும் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**தனுசு:** நீண்டநாள்களாக இருந்து வந்த இழுபறியான நிலை மற்றும் காரியத்தடை விலகும். சொத்துப் பிரச்சினை மற்றும் தாய் வழி சொந்தத்துடன் இருந்த தகராறு ஆகியவை நீங்கும்.

**மகரம்:** வீண் குழப்பம் கொடுத்த உறவினர்கள் மற்றும் நண்பர்களை விலக்குவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்திருந்த இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு தேடி வரும். தடைப்பட்டிருந்த கல்வியில் முன்னேற்றம் ஏற்படும்.

**கும்பம்:** வீண் விவாதங்களையும், சர்ச்சைக்குள்ளாகும் கருத்துக்களையும் முற்றிலும் தவிர்க்கப் பாருங்கள். இதுவரை இருந்து வந்த சொல்லமுடியாத மன உளைச்சல் நீங்கி மனதில் புதிய உற்சாகம் பிறக்கும்.

**மீனம்:** வீண் சந்தேகங்கள் நிவர்த்தியாகும். கொடுத்தவாக்கை காப்பாற்ற முடியாமல் போகலாம், எனவே வாக்கு கொடுக்கும் முன் சிந்தித்து செயற்படவும்.

# மீண்டும் சர்ச்சையில் ராதிகா

நடிகை ராதிகா ஆப்தே, நிர்வாணமாக நடித்த குறும்படத்தின் காட்சிகள் இணையத்தில் திருட்டுத்தனமாக வெளியிடப்பட்டுள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. நடிகை ராதிகா ஆப்தே எடுத்த செல்பி புகைப்படங்கள், ஏற்கெனவே வாட்ஸ் அப்பில் பரவி பெரிய பரபரப்பை ஏற்படுத்தின.

ஆனால், அந்த நிர்வாணப் படங்களில் தோன்றுவது நான் அல்ல. என்னைப் போல் வேறொருவர் என்று ராதிகா ஆப்தே அறிக்கை விட்டார். ஆனால், அந்த சர்ச்சை அடங்குவதற்குள், அவரே ஹொலிவூட் திரைப்படத்தில் தான் நிர்வாணமாக நடிக்கப்போவதாக அதிரடி அறிவிப்பையும் வெளியிட்டார்.

பொலிவூட் குறும்படம் ஒன்றில் அரை நிர்வாணமாக நடித்து சர்ச்சையை கிளப்பியுள்ளார் ராதிகா ஆப்தே. 20 நிமிடம் ஓடும் இந்த குறும்படத்தில் ராதிகா ஆப்தே தனது மர்ம உறுப்பை இன்னொருவருக்கு காண்பிப்பதுபோல் காட்சிப் படுத்தப்பட்டிருக்கும் குறும்படம், இன்னும் வெளியாகாத நிலையில், இவர் நடித்த அந்த காட்சி மட்டும் இணைய தளத்தில் திருட்டுத்தனமாக வெளியாகிவிட்டது.

இந்தக் காட்சியில் நடித்தது குறித்து ராதிகா ஆப்தே மௌனம் காத்து வருகிறார். இந்தக் காட்சியை வெளியிட்டவரை கண்டுபிடிக்கும்வரை தான் எந்தப் பதிலும் கூறப்போவதில்லை என்றும் கூறியுள்ளாராம்.






# தங்கத்தை தரும் ஏ.ரி.எம்.

ஐக்கிய அரபு எமிரேட்டின் தலைநகரான அபுதாபியில் உள்ள ஹோட்டலில் ஒரு ஏ.ரி.எம். இயந்திரம் அமைக்கப்பட்டுள்ளது. உள்நாட்டுப் பணமான திர்ஹம் நோட்டுகள் மற்றும் வங்கிகளின் டெபிட், கிரெடிட் கார்டுக்களை இந்த இயந்திரத்தில் செலுத்தினால் 10 கிராம் முதல் பல கிலோ எடை கொண்ட தங்கக் கட்டிகள் வரை 320 வகை அளவுகளில் தங்கத்தை வாங்கிக் கொள்ளலாம்.

ஒவ்வொரு 10 நிமிடமும் தங்கத்தின் மார்க்கெட் விலை நிலவரத்தை தெரிவிக்கும் இந்த இயந்திரத்தின் மேற்பகுதி முழுவதும் தங்கமுலாம் பூசப்பட்டுள்ளது.

ஜெர்மனியைச் சேர்ந்த ஒரு ஒன்லைன் வர்த்தக நிறுவனம், இந்த வணிகத்தை செய்து வருகின்றது. அங்கிருந்து தருவிக்கப்படும் சொக்கத்தங்கத்தில் ஹோட்டலின் அடையாள முத்திரை பொறிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிது என்பது குறிப்பிடத்தக்கது.

# கொஞ்சம் சிரிங்க பாஸ்....

'உணவே வாழ்க்கை என்று சொல்றீங்களே, எப்படி?'
'நான் ஹோட்டல் முதலாளிங்க'

'நீங்க உங்க மனைவிக்கு ரொம்ப பயந்து நடப்பவரா?'
'ச்சே, ச்சே... நடக்கிறப்போ அந்த பயத்தை வெளில காட்டிக்க மாட்டேன்.'




# மங்கி பேஸ் ஓர்கிட்

குரங்கு வடிவில் காட்சியளிக்கும் 'மங்கி பேஸ் ஓர்கிட்' பூக்கள் கடல் மட்டத்தில் இருந்து சுமார் 2 ஆயிரம் மீற்றர் உயர்ந்த பகுதிகளிலேயே காணப்படுகின்றன. குறிப்பாக ஈக்குவாட்டர், கொலம்பியா, பெரு போன்ற நாடுகளில் இந்த வகை பூக்கள் அதிகமாக காணக்கிடைக்கிறது.

இதன் அறிவியல் பெயர் டிராகுலா சிமியா. குரங்கு வடிவில் இவை காட்சியளித்தாலும் தோல் உறித்த ஆரஞ்சு பழத்தின் நறுமணத்தை பரப்பக்கூடியவை. இதில் இரும்புச் சத்துகள் நிறைந்துள்ளன. இந்தப் பூக்களை ஒரு சில நோய் எதிர்ப்பு சக்தி மருந்துகளில் பயன்படுத்துகின்றனர். இதன் பிறப்பிடமும், குரங்கு பூக்களை பூக்கும் மரங்களின் தன்மையையும் ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து வருகின்றனர்



ஓம் கணபதிதுணை




# பெரியவிளான் வடசேரி விக்கினேஸ்வரர் தேவஸ்தானம்

# வருடாந்த சப்பறத் திருவிழா சிறப்பிதழ்

## நாளை (01.05.2015) வெள்ளி







**எம்பெருமான் திருப்பெருந்துதி**

ஓம் என்ற பிரணவனே ஒளிவிளக்காய் நின்றவனே
ஓங்கும் புகழொடு இன்பம் கொண்டவனே- கலை
தேங்கும் பெரும் பதியாம் வட சேரியில் - உன்னை
தேடிவரும் அடியவர்க்காய் திருச்சப்பறம் மீது ஏறிடையா

**ஆலய பிரதம குருக்களின் ஆசிச் செய்தி**



சிவநேயச் செல்வர்களே! கனிவளம், வயல்வளம், நிலவளம் மூன்றும் ஒருசேர அமைந்த பெரியவிளான் வடசேரி எனும் இடத்தில் அருள் தலம் மீது பன்னெடும் காலம் எம்குல தெய்வமாய் வீற்றிருக்கும் ஸ்ரீ விக்கினேஸ்வர சித்திரவிநாயகப் பெருமானுக்கு மன்மத வருஷம் சித்திரைத் திங்கள் 18 ஆம் நாள் வெள்ளிக்கிழமை நன்னாளிலே புதிய சப்பறம் அமைக்கப்பெற்று அதில் எம்பெருமான் காட்சிதர நல் அருள் கிட்டியுள்ளது. இத் திருப்பணியில் பங்கு கொண்ட எம் அடியார்களுக்கு பூரணமான பலனாக துன்பதுயர் நீங்கி நோய் நொடி நீங்கி, விவசாய வியாபார கல்வி, உத்தியோகம், விவாகம், வீடு, வாகனம், குழந்தைச் செல்வங்கள் போன்றவையும் கிடைத்து விக்கினேஸ் வரப் பெருமான் அருள் கிடைக்கவும் வாழ்த்தி வாழ வாழ்த்துகிறேன்.

**தேர்த்திருவிழா 02.05.2015 சனி**
**தீர்த்தோற்சவம் 03.05.2015 ஞாயிறு**

ஆலய பிரதம குரு கிரியா நிதி கௌமாரபரஜாதுறந்தரர்
சிவஸ்ரீ ஜெகந்நாத் பாலசுப்பிரமணியக் குருக்கள்

**வாழ்த்துச்செய்தி**



யாழ்பாடிப் பரிசு பெற்ற ஈழத்தின் சிகரமென விளங்கும் யாழ்ப்பாண நன்நகரில் சீரோங்கும் சைவமும் தமிழ் சார்ந்த பெரியோர்களையும் விவசாயப் பெருங்குடி மக்களையும் தன்னகத்தே கொண்ட பெரியவிளான் மண்ணில் மூன்று வீதி நடுவே மூலப் பொருளாய் விளங்கும் வடசேரியம்பதி ஸ்ரீ சித்தி விநாயகப்பெருமான் மூன்று காலமும் மூன்று வேளையும் அருள்பாலித்தவண்ணம் உள்ளார்.

சீர்பொங்கும் எம்பெருமானுக்கு இவ் சிறப்பு மிக்க சித்திரை மாத நன்நாளிலே திருவிழா எடுத்து ஆண்டுதோறும் எம் அடியவர்களுக்கு அருள்பாலித்த வண்ணம் உள்ளார். அவ்வண்ணம் 9ஆம் திருவிழாவான சப்பற திருவிழாவை சிறப்புமிக்கதாக்குவதற்கு 9ஆம் திருவிழா உபயகாரர்கள் முழு மனதோட ஒன்றிணைந்து புதிதாக ஒரு எழில் பொங்கும் சப்பறம் ஒன்றை வடிவமைத்துள்ளார்கள். அந்தவகையில் இவ் வருடம் சப்பறத்தில் எம்பெருமான் வீதியுலா வருவதை எண்ணி ஆலய தர்மகர்த்தா ஆகிய நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மேலும் ஆண்டுதோறும் இவர்களின் பணி சிறப்புமிக்கதாகுவதற்கு எம்பெருமானின் அருள் கிடைக்க வேண்டும் என்றும் எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

க.செல்வராசா
ஆலய தர்மகார்த்தா, வடசேரி ஆலயம்.

**சப்பறத்திருவிழா உபயகாரர் சார்பான வாழ்த்துச் செய்தி**



எனது தந்தை கதிரேசு அப்பையா செய்து வந்த பணியினை எனது சமூக மக்களுடன் இணைந்து இன்று வரை சிறப்புற நிறைவுடன் செய்து வருகின்றேன்.

நீண்டநாள் குறையினைத் தீர்க்கும் வகையில் எனது சமூக மக்களின் உதவியுடனும், அர்ப்பணிப்புடனும் இவ்வருடம் புதிதாக வடிவமைக்கப்பட்ட சப்பறத்தில் எம்பெருமான் வீதி உலா வரவிருக்கும் காட்சி எம்மை மிகவும் உவகையடையச் செய்கின்றது.

இத்திருப்பணியில் பெரும்பகுதி வேலையினைப் பொறுப்பேற்று நிறைவேற்றிய சிவக் கொழுந்து குடும்பத்தினருக்கும் ஏனையோருக்கும் எல்லாம் வல்ல வடசேரி விக்கினேஸ்வரர் அருள்பாலிப்பாராக.

அ.சபாரத்தினம்
ஓய்வுபெற்ற காங்கேசன்துறை
சிமெந்துத் தொழிற்சாலை ஊழியர்.

## நிகழ்ச்சி நிரல்

காலை 9.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று எம்பெருமான் உள்வீதி வலம் வருதலுடன் பகல் திரு விழா நிறைவுபெறும். மாலை 5.00 மணியளவில் விசேட பூசைகள் இடம்பெற்று இரவு 6.00 மணியளவில் விசேட தவில் நாதஸ்வர கச்சேரிகளும் இடம்பெறும். இரவு 7மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெறும். 7.30 மணியளவில் பிரபல்யமான இசைக்குழுவினரின் கர்நாடக இசைநிகழ்வு இடம்பெறும்.

| | | |
|---|---|---|
| பாட்டு | : | **முதுமாணி செல்வி ஹம்சத்வனி சோமசுந்தரக்குருக்கள்.** |
| வயலின் | : | **நுண்கலைமாணி செல்வி காயத்திரி பத்மநாதன்.** |
| மிருதங்கம் | : | **கலாவித்தகர் குமாரசாமி ரவிசங்கர்.** |
| கெஞ்சிரா | : | **கலாவித்தகர் கந்தசாமி நந்தகுமார்.** |
| முகர்சிங் | : | **கலாவித்தகர் சிங்கராசா செந்தூரன்.** |

இரவு 9.00 மணிக்கு சுவாமி உள்வீதி, வலம் வந்து புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சப்பறத்தில் எம்பெருமான் வெளிவீதி உலாவரும் காட்சி இடம்பெறும். இரவு 10.00 மணியளவில் விசேட கலைநிகழ்வாக யாழ் ராகம்ஸ் இசைக்குழுவுடன் இணைந்து இந்திய திரைப்படப்பாடகர் T.M சௌந்தரராஜனின் புதல்வர் இசைச்சக்கரவர்த்தி T.M.S செல்வக்குமார் வழங்கும் இன்னிசை நிகழ்வு இடம்பெறும்.

**மகோற்சவ குரு** - சாகித்ய காணாம்ருதவித்தகர் கிரியா தத்துவநிதி சோமமாஸ்கந்த உமார்மணக்குருக்கள்.

**சிகரம் அமைப்பு** - க.வரதாசன் (மாவிட்டபுரம் மல்லாகம்)

**ஒலி,ஒளி அமைப்பு** - ※ விமல், ஜயனார்கோயிலடி, மல்லாகம், ※செல்வம், பண்டத்தரிப்பு, ※ ராஜன் சவுண்ஸ் மேகவர்ணன்.

★★★★★★★★★★★★★★★★★★விளம்பர அனுசரணை.★★★★★★★★★★★★★★★★★★

# விநாயகர் கட்டடநிர்மாணத் தொழிலகம்,
## பெரியவிளான்.

9ஆம் திருவிழா உபயகாரர்கள்.


## பெண்ணை தாக்கியவருக்கு மறியல்

தென்மராட்சி, ஏப்.30

வளவொன்றினுள் அத்துமீறி நுழைந்து, அங்கு நின்ற பெண்ணைத் தாக்கிய நபரை விளக்கமறி யலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் உத்தர விட்டுள்ளார்.

கொடிகாமம் பாலாவிப் பகுதியைச் சேர்ந்த பெண் கொடுத்த முறைப் பாட்டை அடுத்து, கொடிகாமம் பொலிஸார் அதே இடத்தைச் சேர்ந்த நப ரொருவரைக் கைது செய்துள்ளனர். குறித்த நபரை கடந்த ஞாயிற்றுக் கிழமை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியபோது எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது (வ-9)

## கண்ணீர்க் காணிக்கை



### சுப்பிரமணியம் செந்தில்நாதன்

(ஓய்வுபெற்ற யா/தொழில்நுட்பக்கல்லூரி அதிபர்,
தர்மகர்த்தா- அராலி அகாயக்குளம் விநாயகர் தேவஸ்தானம்,
அராலி ஆவரம்பிட்டி முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்)

தோற்றம் 1943.03.27 — மறைவு 2015.04.27

1974 முதல் 2003 வரை தொழில்நுட்பக் கல்லூரி கொக்குவிலில் விரிவுரையாளராகவும், உப அதிபராகவும் தொடர்ந்து அதிபராகவும் கடமையாற்றி இளம் மாணவர்களின் வாழ்வியல் கல்விச் செயற்பாடுகள் உயர்வு பெற அரும்பாடுபட்டு உழைத்தவர்.

தமது பரம்பரை ஆலயங்களான அராலி அகாயக்குளம் விநாயகர் தேவஸ்தானம், அராலி ஆவரம்பிட்டி முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம் என்பவற்றில் 1975முதல் தமது தந்தையோடு இணைந்து நிர்வாகச் செயற்பாடுகளை நடத்தி 1985 இல் தந்தையாரின் மறைவைத் தொடர்ந்து இரண்டு ஆலயங்களதும் தர்மகர்த்தாவாக இருந்து நல்ல முறையில் பரிபாலனம் செய்துவந்தார்.

1997 இல் அகாயக்குளம் விநாயகர் சன்னிதானத்தில் பாலஸ்தானம் செய்வித்து அடியார்களின் பேருதவியோடு 1999 இல் மஹாகும்பாபிஷேகம் செய்வித்து தொடர்ந்தும் அடியார்களின் ஒத்துழைப்போடு 2005 இல் பஞ்சமுக விநாயகப் பெருமானின் பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகமும் 2006 இல் முழுமையான சித்திரத்தேர் அமைப்பும் 2013 இல் நூதன வசந்த மண்டபத்தின் கும்பாபிஷேகமும் 2014 இல் சிற்ப வேலைப்பாடு களோடு கூடிய தேர்முட்டியை அமைப்பித்தும் 2015 இல் சிற்ப வேலைப்பாடு களோடு கூடிய யாகசாலையை அமைப்பித்தும் இறை தொண்டாற்றிய பெருந்தகை.

1947 இல் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி அடையாதிருந்த அராலி ஆவரம்பிட்டி முத்துமாரி அம்பாள் ஆலய கருங்கல் திருப்பணி வேலைகளை அடியார்களின் உதவியோடு நிறைவேற்றி 1993 இல் மஹாகும்பாபிஷேகம் செய்வித்து தொடர்ந்து 2011 இல் அம்பிகையின் நாவலடி சன்னிதானத்தில் திரிதள இராஜ கோபுரத்தை அமைப்பித்தும் கருங்கல் திருப்பணிகள் செய் வித்தும் இறைதொண்டு ஆற்றி சன்னிதான நித்திய பூசைகள் ஒழுங்காக நடைபெற பற்றுச்சீட்டு நடை முறையையும் தொடக்கி வைத்த பெருமைக்குரியவர்.

இறைபணியைப் போல் மக்களிற்கும் பல சேவைகள் செய்து அனைவருடைய மனதிலும் நீங்காத இடம் பிடித்த பெரியாருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விநாயக பெருமானையும் முத்துமாரி அம்பாளையும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

சிவாச்சாரியாரும்,
பரிபாலனசபையினரும், அன்னதான சபையினரும்,
சங்காபிஷேககுழுவினரும்,
அடியார்களும்
ஆவரம்பிட்டி முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்.

சிவாச்சாரியாரும்,
திருப்பணிச்சபையினரும்,
அன்னதான சபையினரும்,
அடியார்களும்,
அகாயக்குளம் விநாயகர் தேவஸ்தானம். (59296)(4.3.7)

# அராலி-வேலணை வீதியை புனரமைக்க முன்வருக

### வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் அரச அதிபருக்கு வேண்டுகோள்

மானிப்பாய், ஏப்.30

தீவகத்தையும் – வலிகாமத்தையும் இணைக்கும் அராலி – வேலணை ஊடான வீதியைப் (கடற்பாதை) புனரமைக்க யாழ். மாவட்டத்தின் புதிய அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் முன்வரவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வலி. மேற்கு பிரதேசசபை உறுப் பினர் சண்முகலிங்கம் சபேசன்.

கடந்த 5 ஆண்டு கால கோரிக்கை யான அராலி – வேலணை கடலுக்கு ஊடான வீதி புனரமைப்புக் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

தீவகத்தையும் – வலிகாமத்தையும் இணைக்கும் ஒரு வீதி ஊடான கடற்பாதை புனரமைப்புக் குறித்து கடந்த 5 வருடங்களாக கோரிக்கை விடுத்து வருகின்றோம்.

முன்னாள் அரச அதிபர் இதற் கான திட்டத்தை முன்நகர்த்த முன்வரவில்லை. அவருக்கு முன்பிருந்த அரச அதிபர் க.கணேஷ் பல நடவடிக்கைகளை முன் னெடுத்திருந்த வேளையில் இளைப்பாறியிருந் தார். தற்போது பொறுப்பேற்றிருக்கும் அரச அதிபர் அராலி – வேலணையை இணைக்கும் கடற் பாதை திட்டம் குறித்து மீள ஆராயவேண்டும்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்த வகையில் ஜப்பான் நாடு, 'ஜெய்கா' திட்டத்தின் கீழ் இதற்கான சாத்தியவள கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்து, மதிப்பீடு செய்துள்ளது. முன்னாள் அரச அதிபர் (க.கணேஷ்) இதற்கு முதலாண்டுக்கு 50 மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருந்தார்.

தற்போது வல்வை – தெல்லிப்பழை காப்பெற் வீதி புனர மைப்புப் பணி முடிவடைந்து, அராலித் துறைமுகத்துடன் முடிகின்றது. இந்த வீதி வலுப்பெற வேண்டுமாயின் அராலி – வேலணை கடற்பாதை முழுமை பெறவேண்டும். எனவே அரச அதிபர் முதற்கட் டமாக மேற்படி வீதியை திட்டமிடல் பணிப்பாளர் ஊடாகப் பெற்று இதனை மீளச் செயற்படுத்தி இந்த ஆண்டில் இதற்கு வலுச் சேர்க்க வேண்டும் என்று உறுப்பினர் சண்முகலிங்கம் சபேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை மேற்படி திட்டத்தை நிறைவேற்றுமாறு வேலணை பிரதேசசபை தவிசாளர் சி.சிவராசா, பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி, முன்னாள் செயலாளர் சு.புத்திசிகாமணி, பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கத் தலைவர் (முன்னாள்)சபை உறுப்பினர் த.நடனேந்திரன் ஆகியோர் அரசிடம் முன்னர் பல கோரிக்கைகளை முன்வைத்திருந்தமை இங்கு குறிப் பிடத்தக்கது. (வ-50)

## கண்ணீர்க் காணிக்கைகள்



### சுப்பிரமணியம் செந்தில்நாதன்

(ஓய்வுபெற்ற அதிபர்-
யாழ்.தொழில்நுட்பக்கல்லூரி)

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான தர்மகர்த்தாவாகிய சு.செந்தில்நாதன் அவர்களின் மறைவையொட்டி ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

8 ஆம் திருவிழா உபயகாரர்

அராலி ஆவரம்பிட்டி,
ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம், அராலி. (59325)(4.3.7)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 02.01.1949 — மறைவு 11.05.2014



தோற்றம் 05.09.1948 — மறைவு 15.06.2013

திதி : 30.04.2015

அமரர் பண்டாரி நடராசா — அமரர் பண்டாரி லீலாவதி

அன்பின் உறைவிடமே பாசத்தின் திருவுருவே
குடும்பக் குலவிளக்கே
கள்ளமில்லா உங்கள் வெள்ளையுள்ளம்
கரைந்து ஆண்டொன்றானாலும்
ஆறவில்லை எம் துயரம் - மறவோம்
நாம் உங்கள் நினைவுகளை.......!

கடந்த வருடம் எம்மைப் பிரிந்த எமது அன்புத் தெய்வங்களின் ஆண்டுத் திவச பிரார்த்தனை இன்று (30.04.2015) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த ஆண்டுத் திவச பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

தவசிக்குளம், கொடிகாமம். — குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### கயிலைலிங்கம் முருகதாஸ்

(முன்னாள் மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர்)

மலர்வு 30.08.1968

உதிர்வு 03.05.2012

திதி: துவாதசி (30.04.2015)

உங்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

4/4, இராமகிருஷ்ணா பாடசாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். — மனைவி, பிள்ளைகள்.

(59265)(4.6.3)

## நாளை விடுமுறை கடைகளுக்கு

தென்மராட்சி, ஏப். 30

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைக்கு உட்பட்ட வணிக நிலையங்கள் தொழிலாளர் தினமானமேதினத்தை முன்னிட்டு நாளை மூடப்பட்டிருக்கும் என்று மன்றத் தலைவர் ப.ஸ்ரீபிரகாஸ் அறிவித்துள்ளார். (வ-9)


## பொதுக் கூட்டம்

வலி.வடக்கு, ஏப்.30

அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் ஆலய தொண்டர் சபையின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தொண்டர் சபையின் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப் படுவதுடன், எதிர்கால அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடப் பட வுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.(வ-86)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



ஓம்

# கும்பாபிஷேகப் பெருவிழாவும் இறுவட்டு வெளியீட்டு விழாவும்



## கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேகப் பெருவிழா

## நாளை (01.05.2015) வெள்ளிக்கிழமை காலை: 8.55 தொடக்கம் 10.23 வரை

### பிரதம குருவின் ஆசியுரை



சொற்பதம் கடந்த அற்புதக் கந்தனின் பஞ்சதள இராஜகோபுரக் கும்பாபிஷேகம் காண்பது எமது முற்பிறவியில் செய்த நற்பலனேயாகும்.


திகழ் சரவணத்தோன் பிரவணமுரைத்தோன் வேல்கைக் கொண்டோன் வள்ளி மணவாளன் திருக் கோயிலின் உள்ளே இராஜகோபுர தரிசனத்துடன் கண்கண்ட தெய்வமாம் சூரிய பகவான் நிறைமதியாம் சந்திரனும், வீற்றிருக்க துவார பாலகரை வணங்கி ஆலயத்தினுட் பிரவேசம் செய்வது நாம் செய்த பாக்கியமே. ஆறுபடை வீடு கொண்ட முருக இராஜகோபுரத்தில் கந்தனின் திருவிளையாடல்களும் கந்த புராணவரலாறும் பக்தர்கள் தர்சனம் கோபுரவர்க்கச் சிற்பங்கள் தளவரிகள் அஷ்டதிக்பாலகர்கள் அமைத்திருப்பதும் எமது சமயத்தினூடாக வெளிப்படும் இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் கலை போன்றவை சித்திரிக்கப்பட்டிருப்பது பக்திப் பரசவத்தை மேலும் மேலும் மெருகூட்டுகின்றது. இக் கோபுரத்தை அமைத்துத்தந்த சிற்பாசாரியார்களும் ஏனைய அனுசரணையாளர்களும் பெருமைக்குரியவர்கள் ஆகின்றனர்.

பாலமுருகனாக முத்துக்குமரனாக சண்முகப்பெருமானாக வள்ளி மணாளனாகக் காட்சி தரும் வேலவனின் அற்புதத்திருக்கோயில் மேலும் பல திருப்பணிகள் நிறைவுற்று வன்னிப்பெருநிலப்பரப்பின் வரலாற்றுச்சிறப்பு மிக்க ஆலயமாகத் திகழ முருகப்பெருமான் திருத்தாள் பணிந்து அருளாசி கூறுகின்றேன்.

"ஆனா அமுதே அயில் வேல் அரசே
ஞானா கரனே நவிலத்தகுமோ
யானா கியான் னைவிழுங்கிவெறுந்
தானாய் நிலைநின் றதுநர் பரமே"

கும்பாபிஷேக பிரதம கிரியாநிதி சாகரம், கிரியா தத்வநிதி சிவஸ்ரீ கு. இரத்தினேஸ்வரக்குருக்கள் (பவாஜயா)

### துன்ப துயரங்களை நீக்கிடும் முருகன்



பசுமையும் செழிப்பும் மிகுந்த கிளிநொச்சி மாநகரில் பிரதான வீதியருகே மக்களின் துன்பங்களையும், துயரங்களையும் நீக்கி அருட்கடாட்சத்தை அள்ளி வழங்கும் ஆறுமுகப் பெருமானின் அருளாட்சியால் தீமைகளை யெல்லாம் களைந்து அகத்தும் புறத்தும் உள் ஒளி வீசும் தூய்மையான அடியார்களையும், பக்தர்களையும் ஒன்று சேர்க்கும் இப் பகுதியிலே "நாமார்க்கும் குடியல்லோம் யமனை அஞ்சோம் நரகத்தில் விடப்படோம்."

என்கின்ற பக்தி வைராக்கியத்தை உடைத்து சிதைவுற்று மீண்டெழும் இப் பதியிலே எந்த நெருக்கடிகளுக்குள்ளும் நாம் இறை பக்தியை கைவிடமாட்டோம் என்பதற்கு எடுத்துக்காட்டாக கிளிநொச்சி கந்தசுவாமி திருப்பதியில் சிறப்புடனும், செழிப்புடனும், பொலிவுடனும் கூடிய கும்பாபிஷேகம் காணும் எம் பெருமான் இம் மாவட்ட மக்களை மட்டுமன்றி தன்னை வழிபடும் அனைவரது இருளையும் துன்பத்தையும் போக்குவான் என்பதுடன் இப்பகுதி மக்கள் வாழ்வு பொலிவுற கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பதற்கு இணங்கவும் எனது தனிப்பட்ட வாழ்வியல் வட்டத்தில் இஷ்டதெய்வமாக மூன்று தசாப்த காலமாக இரண்டறக்கலந்திருக்கின்றார் என்பதுடன் யாமிருக்கப் பயம் ஏன் என்று வேல்கொண்டு வினைதீர்க்கும் முருகப்பெருமானை வேண்டி வழிபடும் அடியவர்களுக்கு எல்லாம் அருளும் சுபீட்சமும் செழிப்பும் கிடைக்க ஆறுமுகப்பெருமானை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**க.முருகவேல்**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**கிளிநொச்சி.**

### கிளிநொச்சி வட்டம் மிளிரும் இராஜகோபுரம்



கிளிநொச்சி மாநகரின் மையத்திலிருந்து அருளாட்சி பொழியும் தொன்மையும் சிறப்பும் கொண்ட அருள்மிகு கிளிநொச்சி கந்தசுவாமி தேவஸ்தானம் 100 அடிகள் கொண்ட 300 இற்கு மேற்பட்ட பாவைகளையும் கொண்ட நவீன சிற்ப வேலைகளுடனான இராஜகோபுரத்தை அமைத்து குடமுழுக்கு காணும் இந்நாள் இம் மாவட்ட வரலாற்றில் மறக்கப்பட முடியாத நன் நாளாகும். இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்னராகவே இரணைமடுக் குளத்தின் கீழ் மனிதன் வாழ்ந்த வரலாறு பல்வேறு சான்றுகளுடன் நிறுவப்பட்டுள்ள நிலையில் 1950 களினைத் தொடர்ந்து இடம்பெற்ற குடியேற்ற வரலாறு இம் மாவட்டத்தின் எழுச்சியை நிர்ணயித்த அடிப்படைக் காரணிகளில் ஒன்றாகும். 1934 இல் கணேசபுரத்தில் தொடங்கிய இந்த மனித குடியேற்றம் உருவாக்கிய முதன்மையான ஆலயங்களில் எம் கந்தன் ஆலயமும் ஒன்றாகும்.

யோகர்சுவாமிகளின் பாதம்பட்ட இந்த புனித மண்ணில் முதலாவது இராஜகோபுரத்தைக் கொண்ட ஆலயம் என்ற பெருமையை இன்று இவ்வாலயம் எமது மாவட்ட வரலாற்றில் பதிவு செய்திருக்கிறது. மீள்குடியேற்றத்துக்கு பின்னராக வான் உயர வளர்ந்த கட்டடங்களினால் எம் பெருமானது ஆலய கோபுரம் தாழ்ந்து சிறுமைப்பட்டுப் போனதை உணர்ந்த இன்றைய ஆலய அறங்காவலர் சபையினர் உடனடியாக ஆற்றிய அறப்பணி இன்று கைகூடி இம் மாவட்டத்தின் வளர்ச்சிக்கு மேலும் சுட்டியம் கூறி நிற்கிறது. இப்பணியில் முழுமையாக ஈடுபட்ட சபை முதல்வர் ஸ்ரீ கௌரிபாலா, செயலாளர் பத்மநாதன் பொருளாளர், கஜேந்திரனையும் நான் நன்றியோடு பாராட்டுகின்றேன். இந் நிர்மாணப் பணியை தம் பணியாக ஏற்று நிறைவு செய்யப்பாடுபட்ட எந்திரிகளான சுதாகரன், கடம்பசீலன் ஆகியோருக்கும் என் நன்றிகள். இது ஒரு கூட்டுமுயற்சி.நல்ல தலைமையிலும் சிறப்பாந்த நிபுணத்துவ வழிகாட்டலுடனும் செவ்வனே நிறைவேறி எம் மாவட்டத் துக்கு ஆன்மீக பலத்தையும் திடத்தையும் அனைத்துத் தரப்பினருக்கும் சௌபாக்கியத்தையும் வழங்கும் இக்குடமுழுக்கு நாளில் எல்லாம் வல்ல முருகப் பெருமான் எமக்கு அனைத்தையும் வழங்குவார். அந்த அருளாட்சி எம் எல்லோரையும் நன்றே வாழவைக்கும்.

**அமரசிங்கம் கேதீஸ்வரன்**
**(கிளி/ மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர்)**

### கிளிநொச்சியின் சைவசமயக் குறியீடு இராஜ கோபுரம்

கிளிநொச்சியின் ஆன்மிகச் செயற்பாடுகளிலும், வழிபாடுகளிலும் கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் உன்னதமானது. தமிழ்க் கடவுளாம் முருகப்பெருமானின் அருளாட்சி கிளிநொச்சி மக்களுக்கு பல சிறப்புக்களை நல்கி வருகின்றது.

யாழ்ப்பாணத்தின் சைவசமயக்குறியீடாக நல்லூர் கந்தசுவாமி கோயில் விளங்குவது போன்று கிளிநொச்சியின் சைவசமயக்குறியீடாக கந்தசுவாமி கோயில் விளங்கும் அளவிற்கு முருகப்பெருமானுக்கு ராஜகோபுரம் சிறப்பாக அமைந்திருக்கின்றது.

கிளிநொச்சியின் ஆலய ராஜகோபுர வரலாற்றில் கந்தசுவாமி கோயிலின் ராஜகோபுரமும் முக்கியம் பெறுகின்றது. ராஜகோபுர நிர்மாணம் என்பது பாரிய பணி. அத்தகைய பாரிய பணியினை மக்களினுடைய ஒத்துழைப்போடு இந்த நிர்வாகம் நிறைவேற்றி இருப்பது கிளிநொச்சி பிரதேசத்திற்கே நிழல் கொடுப்பதாக அமையும். இப்பணியினை செவ்வனே நிறைவேற்றிய ஆலய நிர்வாகத்தினருக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ராஜகோபுர கும்பாபிஷேகத்தில் அனைவரும் ஒன்றிணைந்து முருகப்பெருமானின் அருளினைப் பெறுவோமாக.

**கோ.நாகேஸ்வரன்,** பிரதேசசெயலர் பிரதேசசெயலகம் கரைச்சி




## புங்குடுதீவு கிழக்கு கண்ணகை புரம் அருள்மிகு கண்ணகை அம்மன் என வழங்கும்

## ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்





## வருடாந்த மஹோற்சவ பெருவிழா
## சிறப்பு உற்சவங்கள் - 2015

### சித்திரத்தேர் வெள்ளோட்டபெருவிழா

**2015.05.01 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெறவுள்ளது.**

**விநாயகப்பெருமான் முருகப்பெருமான் ஆகியோருக்கான புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு தேர்களின் வெள்ளோட்டம் இடம்பெறும்.**

**இரதோற்சவம்:** 2015.05.02 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு விநாயகப்பெருமான் அம்பாள், முருகப்பெருமான் ஆகியோர் அழகிய சித்திரத் தேரினில் பவனி வரும் திருக்காட்சி இடம்பெறும்.

**தீர்த்தோற்சவம்:** 2015.05.03 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சமுத்திர தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

**சிறப்பு மஹோற்சவ பெருவிழா நிகழ்வுகள் யாவும் சிவன் T.V. யிலும், ஓம் T.V. யிலும் ஒளிபரப்பு செய்யப்படவுள்ளது.**

**தொலைக்காட்சி ஒளிபரப்பு நேர்முக வர்ணனையை**

வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் நிகழ்த்தவுள்ளார்.

அம்பாளின் அருள்பெற

அனைவரும் வாரீர் வாரீர்

ஆலய பரிபாலன தர்மகர்த்தா சபை,

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம், புங்குடுதீவு.

## கூட்டெரு தயாரிக்க கொள்கலன்கள் வவுனியா நகர சபை வழங்கியது

மக்கள் மத்தியில் கூட்டெரு தயாரிப்பை ஊக்கு விப்பதற்கு வவுனியா நகர சபையினர், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் தேசிய திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தினின் உதவியுடன் கழிவு சேகரிக்கும் கொள்கலன்கள் கையளிக்கும் செயற்பாட்டை அண்மையில் மேற்கொண்டனர்.

வவுனியா நகரசபைச் செயலாளர் க.சத்தியசீலன் தலைமையில் 100 குடும்பங்கள் தமது வீட்டில் எஞ்சும் கழிவுப் பொருள்களைச் சேகரித்து கூட்டெருவைத் தயாரித்து அதனை வீட்டுதோட்டத்துக்கு அல்லது விற்பனை செய்து இலாபம் ஈட்டும் சுயதொழில் செயற்றிட்டத்தை மேற்கொள்ள தலா ஒருவருக்கு ஒரு கொள்கலன் வீதம் 100 கொள்கலன்கள் அண்மையில் வவுனியா நகரசபையினால் வழங்கப்பட்டன. (வ-402)


### பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் அதிபர்

த.ஞானப்பிரகாசம்

S.L.P.S.-1

அவர்கள் அதிபர் சேவை

1 ஆம் வகுப்பிற்கு பதவியுயர்வு பெற்றதையிட்டு

மனமகிழ்ந்து வாழ்த்துவதுடன், மேலும் அவரது பணி சிறக்க இறையருளை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:

பாடசாலைச்சமூகம்,

பா.கோப்பாய் மகாவித்தியாலயம்.

(59323)(4.3.6)



### இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் பாபு சாஸ்திரி ஸ்ரீமுருகன் ஜோதிடம்

[illegible]

தொடர்புகளுக்கு:

077 595 0463

HOTEL LOVUSI, இலக்கம் 584, வைத்தியசாலை வீதி, இலங்கை வங்கி அருகில், யாழ்ப்பாணம்.


## ஸ்ரீ முருகன் வி.கழகத்தின் ஆண்டு நிறைவு விழா இன்று

தென்மராட்சி,ஏப்.30

உசன், மிருசுவில் ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகத்தின் 55 ஆவது ஆண்டு நிறைவு விழா வும் மைதானத் திறப்பு விழாவும் முதுசம்' நூல் வெளியீடும் இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு கழக மைதானத்தில் இடம்பெறும்.

கழகத் தலைவர் சி.செல்வரூபன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந் தினராக வடமாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ் வரன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக நாடா ளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கு.பாலசண்முகம், கவிஞர் கு.வீரா ஆகியோரும் கலந்து கொள்வர்.

ஆண்டு விழாவை ஒட்டி நடத் தப்பட்ட போட்டிகளில் வெற்றி யீட்டியவர்களுக்குவெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்படவுள்ளன. (வ-9)

## தோட்டத்தில் வேலை செய்தவர் மயங்கி வீழ்ந்து சாவு

வலி.வடக்கு, ஏப்.30

தோட்டத்தில் வேலை செய்து கொண்டு இருந்த குடும்பஸ்தர் திடீரென மயங்கி வீழ்ந்த நிலை யில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வேளையில் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 6.30 மணிய ளவில் இடம் பெற்ற இந்த சம்பவத்தில் உயிரிழந் தவர் உடுவிலைச்சேர்ந்த பொன்னையா வனசீலன் (வயது-52) என்பவராகும்.

தெல்லிப்பழை ஆதார மருத்து வமனைக்கு அவசர அவசரமாக மயக்கமுற்ற நிலையில் எடுத்து வரப்பட்ட போதிலும் அவர் மருத்துவமனைக்கு கொண்டு வந்த வேளையில் இறந்து காணப் பட்டுள்ளார்.

குறித்த நபரின் சடலம் தெல்லிப்பழை ஆதார மருத்துவ மனை பிரேத அறையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைக் கப்பட்டுள்ளது. சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (வ-86)

## கைப்பை கண்டெடுப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.30

யாழ். போதனா வைத்தியசா லையின் கதிர்வீச்சு படம் எடுக்கும் இடத்தில் ஒரு கைப்பை சிறு தொகைப் பணத் துடன் கண்டெடுக்கப்பட் டுள்ளது. இதனை அலுவலக நேரத் தில் காரியாலய காசா ளரிடம் அடையாளம் காட்டிப் பெற் றுக் கொள்ளலாம் என்று பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## மன்னாரில் நாளை தந்தை செல்வாவின் நினைவுதின நிகழ்வு

மன்னார், ஏப்.30

ஈழத்துக் காந்தி என்று அழைக் கப்படும் தமிழ்த் தேசியத் தலைவர் அமரர் தந்தை எஸ்.ஜே.வி செல்வநாயகத்தின் 38 ஆவது நினைவு நாள் அஞ்சலியும், சொற்பொழி வுகளும் நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு மன்னார் மாவட்ட செயலகத் துக்கு முன்பாக அமைந்தி ருக்கும், தந்தை செல்வாவின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்வுகளுடன் ஆரம்பமாகும்.

இதுதொடர்பான சிறப்புரை களும், சமயத் தலைவர்களின் ஆசியுரைகளும் இடம்பெறும். இந்த நிகழ்வில் சகல அரசியல் தலைவர்களும், மாகாணசபை, பிரதேசசபை, நகர சபை உறுப் பினர்களும், பொதுமக்களும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (வ)

## திருவிழா ஆரம்பம்

மூளாய் வதிரன் புலோ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கொடியேற் றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. இரவுத் திருவிழா நாள்களில் உள்ளூர் கலை ஞர்கள் ஒரு மணி நேரம் இன்னிசைக் கச்சேரி நிகழ்வை நடத்தி வருகின்றனர். இதற்கு மக்கள் நல்லாதரவு வழங்கி வருகின்றனர். (வ-28)


### வேலைவாய்ப்பு

கப்பலில் விமானத்தில் வேலை செய்ய விருப்பமா? துறைமுகம் விமான நிலைய வேலைக்கு ஆண்/பெண் உடனடியாகத் தேவை. உயர் சம்பளத்துடன் (பின்னர் வெளிநாட்டு துறைமுகம்/விமான நிலையங்களில் தேவை.) இப்போதே தொடர்பு கொள்ளுங்கள்.

077 292 6935

(59330)(4.3.7)

### வேலைவாய்ப்பு

மஞ்சி, மலிபன், நெஸ்லே, ஏமாஸ், ரிஸ்பரி தொழிற்சாலைகளுக்கு ஆண்/பெண் தேவை. 18-35, 35000/= உயர் சம்பளம். இப்போதே தொடர்பு கொள்ளவும்.

077 292 6468

(59328)(4.3.7)

### வேலைவாய்ப்பு

துறைமுகம் விமான நிலையத்திற்கு மென்ரக/கனரக சாரதிகள்/கண்டேனர் சாரதிகள்/சாரதி உதவியாளர்கள் நாடு முழுவதிலும் வேலைக்கு அனைத்து பிரதேசங்களுக்கும் தேவை. 35000-45000 உயர்ந்த சம்பளம். (OT உட்பட விசேட சலுகைகள்)

077 292 6732

(59329)(4.3.7)

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.நகரிலிருந்து 5 கி.மீற்றருக்குள் வீடு அல்லது அனெக்ஸ் வாடகைக்குத் தேவை. முற்பணம் வழங்கப்படும்.

076 616 3975

(59327)(4.3.7)

### காணி விற்பனைக்கு

சுதுமலை கலாமந்திரா வீதி, அருகில் 4½ பரப்புக் காணியும் வீடு வளவும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 187 6600

(59312)(4.3.7)

### வேலை வெற்றிடம்

சிட்டை எழுதுநர் (பெண்) தேவை

எமது நிறுவனத்தில் பணியாற்ற சிட்டை எழுதுநர் (பில்கிளாக் Bill Clerk) தேவை. ஆர்வமுள்ளவர்கள் நேரில் வரவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

வினஸ் பார்ம்,

6 ஆம் ஒழுங்கை, [illegible] கஸ்தூரியார் வீதி, திருநெல்வேலி.

தொ.பே: 077 844 8300 (59301)(4.3.7)

### ALL OUT Pest Control Service

கறையான் தொல்லையா?

உங்கள் கட்டடங்களை உத்தரவாதத்துடன் பாதுகாத்துக் கொடுக்க நாங்கள் இருக்கின்றோம்.



தொடர்புகளுக்கு:

ந.ரூபகாந்த்

077 151 5897, 021 499 3200





சண்டிலிப்பாய் சீரணி

அருள்மிகு சீரணி நாகபூசணி அம்பாள் தேவஸ்தான

### மஞ்சத்திருவிழா உற்சவம்

மன்மத வருஷம் சித்திரை மாதம் 18 ஆம் நாள் [01.05.2015] வெள்ளிக்கிழமை மாலை அழகிய திருமஞ்சத்தில் அம்பாள் எழுந்தருளி வாண வேடிக்கைகள் சகிதம் வெளி வீதியுலா வரும் வேளையில்

இலங்கை, இந்திய புகழ் பூத்த தவில் நாதஸ்வர கலைஞர்களின்

இன்னிசை மழை நிகழ்வு இடம்பெறும்.

கிளார் நெற் தவில் நாத சங்கமம்

இந்தியாவில் இருந்து வருகை தரும் அகில உலக கிளார் நெற் எவரெஸ் சங்கீத கலாநிதி கலைப்பேரறிஞர் திருச்சி A.K.C நடராஜன் அவர்கள்

உடன் வாசிப்பவர் நாதஸ்வர கலைஞானமணி காளாஸ்திரி V.முனிக்குமார்

சிறப்புத் தவில்கள்

இந்தியாவில் இருந்து வருகை தரும் தவில் இசை மாமுரசு கலைமாமணி மன்னார் குடி M.R.வாசுதேவன் அவர்கள்

அகில உலக தவில் மாமேதை லயஞான விவகாரவித்வமணி இணுவையூர் N.R.சின்னராசா அவர்களின் புதல்வன் லயஞான இளவரசன் N.R.S.சுதாகரன் அவர்கள்

ஆலயமங்கல வாத்திய குழுவினர் சுதுமலையூர் கோபி குழுவினர்.

நாதஸ்வர வித்துவான்கள்

நாதஸ்வர இசையரசு கலாபூஷணம் அளவையூர் M.P.பாலகிருஷ்ணன்
நாதஸ்வர இசை அருவி கலாபூஷணம் கோண்டாவில் V.K. பஞ்சமூர்த்தி
நாதஸ்வர கானமணி அளவையூர் A.சுகந்திரன்
நாதஸ்வர இசைவேந்தன் வழக்கம்பரை R.சிவகுமார்
நாதஸ்வர இளவரசு சுழிபுரம் P.S. பாலமுருகன்
நாதஸ்வர இளவரசன் கோண்டாவில் V.K.P.குமரேசன்
நாதஸ்வர இளந்தென்றல் கோண்டாவில் R.வசந்தன்
நாதஸ்வர ஸ்வரஞானமணி கோண்டாவில் K.நாகதீபன்
நாதஸ்வர இன்குழல் வேந்தன் உடுப்பிட்டி P.மயூரன்
நாதஸ்வர இசையருவி வட்டுக்கோட்டை R.சனா
நாதஸ்வர கானவேந்தன் இந்தியா தமிழ்நாடு M.சேதுபதி
நாதஸ்வர இன்னிசை வேந்தன் இணுவையூர் K.S.தேவதாஸ்

தவில் வித்துவான்கள்


தவில் இசைமாமுரசு கலைமாமணி மன்னார்குடி M.R.வாசுதேவன்
தவில் லயஞான இளவரசன் இணுவையூர் N.R.S சுதாகரன்
தவில் நாத சொற்சுவை வேந்தன் பருத்தித்துறை S.சதீஸ்குமார் [குட்டி]
தவில் ஞான கலாவித்தகன் சுதுமலை N.பிரசன்னா
தவில் நாத நந்தீஸ்வரன் இணுவையூர் B.நர்மதன் [மது]
தவில் நாத சொற்சுவை சொரூபன் சுழிபுரம் P.S செந்தில்நாதன்
தவில் நாகமணி வட்டுக்கோட்டை R.சிலன்
தவில் இளம் சுடர்ஒளி இணுவையூர் N.பிரதீபன்
தவில் இசைநாதமணி இணுவையூர் R.S ராமதாஸ்

KAY FARM (Pvt) Ltd

சண்டிலிப்பாய், பளை 021 320 4233

இராசரத்தினம் குடும்பம், சண்டிலிப்பாய்.

# கூகுள் கிளாஸின் புதிய பதிப்பு விரைவில்



கூகுள் நிறுவனம் கூகுள் கிளாஸ் எனும் சாதனத்தை உருவாக்கி தொழில்நுட்ப உலகில் பெரியபுரட்சி ஒன்றை மேற்கொண்டிருந்தது. பல அம்சங்களை ஒருங்கே கொண்டு வடிவமைக்கப்பட்டிருந்த இந்தச் சாதனம், மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெற்றிருந்த போதிலும், விற்பனை வரையறுக்கப்பட்டே இருந்தது.

இந்த நிலையில் விரைவில் கூகுள் கிளாஸின் புதிய பதிப்பு அறிமுகம் செய்யப்படவுள்ளதாக இத்தாலியை சேர்ந்த பிரபல கண்ணாடி விற்பனை நிலையமான Luxottica இன் தலைமை அதிகாரி Massimo Vian தெரிவித்துள்ளார்.

இதேவேளை தற்போது பாவனையிலுள்ள கூகுள் கிளாஸை தொடர்ந்தும் உற்பத்தி செய்வதை கடந்த ஜனவரி மாதம் முதல் கூகுள் நிறுவனம் நிறுத்தி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வேற்று கிரகவாசிகளை தேடும் நாஸா!

வேற்றுகிரகவாசிகளை தேடும் திட்டத்தை நாஸா அதிகாரப்பூர்வமாக தொடங்கியுள்ளது.

நாஸாவின் இந்த புதிய திட்டத்தின் மூலம், பூமியை தவிர மற்ற கிரகங்களில் உயிர்கள் இருப்பதற்கான வாய்ப்பு உள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்யப்படும்.

நாஸா அமைந்துள்ள இந்தக் குழுவில், உலகம் முழுவதிலுமிருந்து 12 பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களை சேர்ந்த விஞ்ஞானிகள் இடம்பெற்றுள்ளனர்.

நாஸாவின் விண்வெளி தொலைநோக்கி கெப்லர் இதுவரை, 1,000 இற்கும் மேற்பட்ட வேற்றுக் கிரகங்களை கண்டறிந்துள்ளது. இவற்றில் அளவில் பூமி போன்று உள்ள 5 கிரகங்களில் உயிர்கள் வசிக்கக் கூடிய சாத்திய கூறுகள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

மேலும், இந்தக் கிரகங்களைக் கடந்து வரும் ஒளிக் கதிர்களை ஆராய்வதன் மூலம் அந்தக் கிரகங்களைபற்றி தெரிந்து கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.



# இறைவனிடம் மட்டும் கூலி பெறுவதே முஸ்லிம் அரசியல்வாதிக்கு முதற்தகுதி

## மூதூர் பீஸ் ஹோம் அமைப்பின் கருத்துக்கணிப்பு கூறுகிறது

மூதூர், ஏப்.30

செய்யும் தொழிலுக்கு இறைவனிடம் மட்டும் கூலியை எதிர்பார்க்கும் உளத் தகுதியே அரசியல் அதிகாரத்துக்கு வரும் முஸ்லிம் ஒருவருக்கு வேண்டிய தகைமை என்று கருத்துக் கணிப் பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூதூர் பீஸ் ஹோம் அமைப்பானது பிரதேச சபையை மையப்படுத்தி அரசியல் அதிகாரத்துக்கு வரும் முஸ்லிம் ஒருவருக்கு அவசியமான தகைமைகள் எவையென நூறு முக்கியஸ்தர்களிடம் கருத்துக் கேட்டது. இதன்போது 99 வீதமானோர் மேற்கண்ட பதிலை வழங்கியுள்ளனர்.

மேலும் மேற்படி கருத்துக் கணிப்பில் அரசியல் அதிகாரத்துக்கு வரும் முஸ்லிம் ஒருவருக்கு கல்வித் தகைமையாக க.பொ.த உயர்தரத்தில் சித்தி அல்லது பல் கலைக் கழகப் பட்டம் அவசியம் இருத்தல் வேண்டும் என்று 91 வீதமானோரும் க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி அவசியம் இருத்தல் வேண்டும் என்று 9 வீதமானோரும் தெரிவித்துள்ளனர். அத்துடன் தமிழ், சிங்களம்,ஆங்கிலம் ஆகிய மும்மொழி அறிவு அவசியம் இருத்தல் வேண்டுமென 76 வீதமானோரும், தமிழ், சிங்களம் ஆகிய இருமொழி அறிவு அவசியம் இருத்தல் வேண்டும் என்று 24 வீதமானோரும் தெரிவித்துள்ளனர்.

குறைந்தது க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தி அடையத் தவறியவர்களும் இரண்டாம் மொழியில் தேர்ச்சியற்றவர்களும் இஸ்லாம் கூறும் ஒழுக்க விழுமியங்களுக்கும் பண்பியலுக்கும் எதிரானவர்களும் அரசியல் அதிகாரத்துக்கு வருவதற்கு எந்தவகையிலும் தகுதியற்றவர்கள் என்றும் சமூக சேவையில் அனுபவமும் அக்கறையும் இருத்தலும் தனக்கு தெரியாத விடயத்தில் துறை சார்ந்தவர்களிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ளும் மனபக்குவத்துடன் முக்கியமான விடயங்களில் துறை சார்ந்தவர்களோடு கலந்துரையாடி முடிவு எடுப்பவராக இருக்க வேண்டும் என்று 100 வீதமானோர் தெரிவித்துள்ளனர்.

சேவை மனப்பாங்கு, பொறுப்புக் கூறுபவராக இருத்தல், இஸ்லாம் கூறும் ஒழுக்க விழுமியங்களுக்கு இசைந்து நடப்பவராகவும், சமூகத்தில் நன்மதிப்பைப் பெற்றவராகவும் இருத்தல், தொழுகை உள்ளிட்ட அடிப்படை கடமைகளில் அதிக முக்கியத்துவம் கொடுத்து செயற்படுபவராக இருத்தல், நேர காலமின்றி சேவை புரியத் தக்கவாறு உடல் தகுதியை பெற்றிருத்தல் அதிகமான நேரத்தை மக்கள் பணிக்கு ஒதுக்கத் தக்கவாறு வேறு வேலைப்பளு இல்லாதவராகஇருத்தல்போன்றகாரணிகளும் பெரும்பாலும் கூறப்பட்டுள்ளது.

மேலும் பொது அறிவு, தேடல், சிறந்த தொடர்பாடல் திறன், பேச்சாற்றல், தலைமைத்துவம், குழப்பமானநிலைமைகளைசமாளிக்கும் ஆற்றல், துணிவு, ஹராம் ஹலால் வரம்புகளை மீறாதிருத்தல். பெருமையையும் ஆடம்பரத்தையும் வீண் விரயத்தையும் வெறுப்பவராக இருத்தல், தகவல் தொழில் நுட்ப அறிவு உள்ளவராக இருத்தல் போன்ற விடயங்களும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. (வ-40,10)

# சைவப் புலவர் தேர்வுகள்

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் நடத்தும் சைவப் புலவர் தேர்வுகள் நாளை, நாளை மறுதினம் மற்றும் 4ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். குறித்த தினங்களில் யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, லண்டன் ஆகிய இடங்களில் தேர்வுகள் நடைபெறும் என்றும்– அனுப்பப்பட்ட தேர்வு அட்டைகள் கிடைக்காதவர்கள் சங்கத் தலைவருடன் தொடர்பு கொள்ளுமாறும் மேலும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (வ-10)








ஜப்பானின் மூன்றாவது பெரிய தீவான கியூவில் உள்ள எரிமலைப் பகுதிகளில் இருந்து எடுத்து வரப்படும் ஈரமண்ணைக் கொண்டு அங்குள்ள மக்கள் மண் குளியல் போடுகின்றனர்.இங்கு சிறப்பு அம்சமாகக் கருதப்படும் இந்த மண் குளியலுக்காக எரிமலைப் பகுதிகளில் இருந்து ஈரமண்ணை எடுத்து வருகின்றனர். (14)

## ஈராக்கில் ஐ.நா. அதிகாரி கடத்தல்

பாக்தாத்,ஏப்.30

ஈராக் மற்றும் சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகள் பணயக்கைதிகளாகப் பிடித்து பலரது தலையைத் துண்டித்துக் கொடூரமாகக் கொலை செய்து வருகிறார்கள். தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் படைவீரர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். தீவிரவாதிகளின் தாக்குதலில் பாதிக்கப்படும் மக்களுக்கு சேவை செய்யும் பணியில் ஐ.நா. ஊழியர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். இந்த நிலையில் தலைநகர் பாக்தாத்தின் வடகிழக்கு பகுதியில் உள்ள தியாலா மாகாணம் பாகியூபாவில் ஐ.நா.வின் தொடர்பு அதிகாரி ஒருவரை மர்மநபர்கள் கடத்திச்சென்றுள்ளனர். தொடர்ந்து பல்வேறு கடத்தல் சம்பவங்களில் ஈடுபட்டு வரும் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு அதில் தொடர்பு இருக்கலாம் என்று கூறப்படுகிறது. (14)

## உயிரிழப்பு 10 ஆயிரத்தை எட்டும் நேபாள பிரதமர் அதிர்ச்சித் தகவல்

காத்மண்டு,ஏப்.30

நேபாளத்தில் நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்தை எட்டும் என்று அந்த நாட்டின் பிரதமர் சுஷில் கொய்ராலா கவலை தெரிவித்துள்ளார்.



நேபாளத்தில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தால் தலைநகர் காத்மண்டு உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. அடுத்தடுத்து பலமுறை நில அதிர்வுகள் தொடர்வதால், மக்கள் திறந்தவெளி இடங்களிலேயே உணவு, குடிநீர் கிடைக்காமல் பலரும் அவதிப்பட்டு வருகின்றனர்.

இமயமலை அடிவாரத்தில் உள்ள பின்தங்கிய கிராமப்பகுதிகளில் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. ஆனால் அங்கு செல்லும் வீதிகள் துண்டிக்கப்பட்டுள்ளதாலும், மீட்பு உபகரணங்கள், மீட்புக் குழுவினர் பற்றாக்குறையாலும் எந்த பணிகளும் மேற்கொள்ள முடியவில்லை என அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். தலைநகர் காத்மண்டு, சிந்துபால்சவுக்,நுவாகோட் உட்பட 9 மாவட்டங்களில் அதிக உயிரிழப்பு ஏற்பட்டிருப்பதை நேபாள அரசு உறுதி செய்துள்ளது. இதுவரை 5 ஆயிரத்து 57 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், 10 ஆயிரம் பேர் காயமடைந்திருப்பதாகவும் நேபாள பொலிஸார் தெரிவித்துள்ளனர். நிலநடுக்கத்தால் நேபாளத்தில் 50 ஆயிரம் கர்ப்பிணிகள், சிறுமிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐநா தகவல் தெரிவித்துள்ளது. கட்டட இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்டுள்ள கர்ப்பிணிகளுக்கு கர்ப்ப கால மருத்துவ சேவைகள் வழங்குவதற்கான வசதிகளும், பாதுகாப்பாக குழந்தையை பெற்றெடுப்பதற்கான வசதிகளும் மிகவும் குறைவாகவே இருப்பதாகவும் கூறியுள்ளது. இதனால், குழந்தைபேறு கால சாவுகள் அதிகரிக்கவும் வாய்ப்புகள் இருப்பதாக கவலை தெரிவித்துள்ளது. (14)

## ஆப்கானில் மண் சரிவு 52 பேர் பரிதாபச் சாவு



காபூல்,ஏப்.30

ஆப்கானிஸ்தான் நாட்டில், பதக்ஷான் மாகாணம், மிகவும் ஏழ்மையான மாகாணம். வளர்ச்சியே இல்லாத அந்த மாகாணத்தில் அடிக்கடி நிலச்சரிவுகள் நடந்து வருகின்றன.

இந்த நிலையில், அங்கு தஜிகிஸ்தான் எல்லையில் உள்ள கவஹான் மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெரும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. அந்த நிலச்சரிவில் சிக்கி 52 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். நிலச்சரிவு ஏற்பட்ட பகுதி, ஏற்கனவே நாட்டின் இதர பகுதிகளில் இருந்து துண்டிக்கப்பட்டுள்ளது. அங்கு செல்வதற்கு வீதி வசதிகள் கிடையாது. ஹெலிகொப்டரில் மட்டுமே செல்ல முடியும். எனவே மீட்புப் பணியில் தாமதம் ஏற்பட்டுள்ளது. கடந்த வருடம் மே மாதம், இதே மாகாணத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 350 பேர் உயிரோடு புதைந்தமை நினைவுகூரத் தகுந்தது. (14)

## தென்கொரியாவில் 295 பேர் சாவு கப்பல் கப்டனுக்கு வாழ்நாள் சிறை

சியோல்,ஏப்.30

தென்கொரியாவில் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் பயணிகள் கப்பல் ஒன்று கடலில் மூழ்கிப் பெரும் விபத்து நேரிட்டது. அதில் 295 பேர் உயிரிழந்தனர். அது தொடர்பாக கப்பலின் கப்டன் லீ ஜுன் கியாக் உள்ளிட்டவர்கள் மீது நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

அதில் லீ அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் நடந்து கொண்ட குற்றச்சாட்டின் பேரில் 36 வருடங்கள் சிறைத்தண்டனை விதித்து கடந்த வருடம் நவம்பர் மாதம் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் அவர் மீது கொலைக் குற்றச்சாட்டு சுமத்தி தண்டனை வழங்க வேண்டும் என்று அரச சார்பில் மேல் முறையீடு செய்யப்பட்டது. அந்தமேல்முறையீட்டுவழக்கை விசாரித்த நீதிமன்றம் லீக்கு வாழ்நாள்சிறைத்தண்டனைவிதித்துநேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளது. (14)



## உதவிக்கரம் நீட்டுகிறது அமெரிக்கா

வொஷிங்டன்,ஏப்.30

நிலநடுக்கத்தால் நிலைகுலைந்துள்ள நேபாளத்துக்கு 5 ஆயிரத்து 600 கோடி ரூபாய் (இந் திய) நிதி உதவியை அமெரிக்கா வழங்கவுள்ளது. நேபாளத்தில் நிகழ்ந்த நிலநடுக்கத்தின் மீட்பு பணிகளுக்காக ஏற்கனவே பல உதவியை வழங்கியுள்ளதை குறிப்பிட்டுள்ள அமெரிக்கா தற்போது, மேலும், 5 ஆயிரத்து 600 கோடி ரூபாய் (இந்திய) வழங்க முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்களது நாட்டு விமானங்கள், ஹெலிகொப்டர்கள் மற்றும் மீட்புக் குழுக்கள் நேபாளத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதையும் அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது. அதில் மருந்து பொருள்கள், கூடாரங்கள், தண்ணீர், உணவு ஆகியவையும் சேர்த்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளது.(14)

## ஜேர்மன் ஆசிரியர்கள் போராட்டத்தில்

பெர்லின்,ஏப்.30

ஜேர்மனில் உள்ள மழலையர் பாடசாலையின் ஆசிரியர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளனர்.

ஜேர்மனியில் உள்ள ஒட்டுமொத்த மழலையர் பாடசாலை ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சராசரி ஊதியத்தை 10 சதவிகிதமாக அதிகரித்து வழங்க வேண்டும் என பொதுச் சேவைகள் தொழிற்சங்க ஆசிரியர்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். ஐந்து கட்டமாக நடந்த அந்தப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, தேசிய அளவில் ஆசிரியர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக அறிவித்துள்ளனர்.

எதிர்வரும் மே மாதம் நடைபெற உள்ள இந்த வேலைநிறுத்தப் போராட்டம் மற்றும் அதன் நடைமுறைகள் குறித்து ஆசிரியர்களிடம் விரைவில் வாக்கெடுப்பு நடத்தப்படும். அதன் பின்னர் நாடு முழுவதும் சுமார் 2 லட்சத்து 40 ஆயிரம் ஆசிரியர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் இந்த வேலை நிறுத்த போராட்டத்தில் கலந்துக் கொள்வார்கள். (14)

## திருநங்கையின் ஆசை

லண்டன்,ஏப்.30

லண்டனைச் சேர்ந்த நாதன் ஓப்ரியென் பிறக்கும்போது ஆண் குழந்தையாகப் பிறந்தவர் பின்னர் வளர வளரஅவரதுஉடலில்ஆண்இயல்பை மீறிய ஒரு மாற்றம் உருவாகத் தொடங்கியது.

இதையடுத்து, வீட்டைவிட்டு வெளியேறிய நாதன், உரிய சிகிச்சைகள் மூலம் முழுமையாகப் பெண்ணாக மாறினார். அதனால், தனது பெயரை மோர்கன் நவோமி கிளார்க் என மாற்றிக்கொண்டு மாடலிங் துறையில் அடியெடுத்து வைத்துள்ள அவருக்கு தற்போது 23 வயது.

தற்போது இங்கிலாந்தில் நாடு தழுவிய அளவில் நடைபெறும் திருநங்கையர்க்கான அழகிப் போட்டியில் பங்கேற்க முடிவு செய்துள்ளார். நிச்சயமாகஅதில்நான்முதல்இடத்தை அடைவேன் என்று நம்பிக்கையுடன் தெரிவித்துள்ளார். (14)

## தீவிரவாதிகளிடமிருந்து 300 பேர் மீட்பு

மைதுகுரி,ஏப்.30

போகோ ஹராம் தீவிரவாதிகளிடமிருந்து 300 சிறுமிகள் மற்றும் பெண்களை நைஜீரியா இராணுவத்தினர் மீட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நாட்டின் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ள சாம்பிசா வனப் பகுதியில் போகோ ஹராம் தீவிரவாதிகளுடன் நடந்த சண்டை யின் போது 3 முகாம்களில்அடைத்து வைக்கப்பட்டிருந்த 300 சிறுமிகள் மற்றும் பெண்களை இராணுவத்தினர் மீட்டுள்ளனர். அவர்களில் 200 சிறுமிகளும் 93 பெண்களும் அடங்குவர்.



மீட்கப்பட்டவர்களில் எவரும், கடந்த ஏப்ரல் மாதத்தில் சிபோக் என்ற நகரின் கிறிஸ்தவ உண்டு உறைவிட பள்ளியிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட, 219 சிறுமியர் இல்லை எனத் தெரியவந்துள்ளது. எனவே கடத்தி செல்லப்பட்ட சிறு மிகளின் நிலை பற்றி தெரியவில்லை. அவர்கள் இன்னும் பயங்கரவாதிகள் பிடியில் தான் உள்ளதாகக் கருதப்படுகிறது. (14)

# போதைப்பொருள் கடத்தல் 8 பேருக்குச் சாவுத் தண்டனை

## இலங்கைத் தமிழர் மயூரன் உள்ளடங்குவார்









ஜகார்தா,ஏப்.30
இந்தோனேசியாவில் போதைப் பொருள் கடத்தல் வழக்கில் குற்றவாளிகள் 8 பேருக்கு அந்த நாட்டு அரசு சாவுத்தண்டனையை நிறைவேற்றியுள்ளது. பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த பெண் குற்றவாளியின் சாவுத் தண்டனை தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இந்தோனேசியாவில், போதைப்பொருள் கடத்தல் கடுமையான குற்றமாகக் கருதப்படும் நிலையில், அந்தக் குற்றம் புரிபவர்களுக்குச் சாவுத் தண்டனை விதிக்கப்படுகிறது. அண்மையில் ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருள் கடத்தியதாக ஆஸ்திரேலியா, பிரான்ஸ், நைஜீரியா, பிரேஸில் மற்றும் பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த10 பேர்கைதுசெய்யப்பட்டனர். குற்றம் நிரூபிக்கப்பட்ட நிலையில், 10 பேருக்கும் சாவுத்தண்டனை விதித்து பாலி நீதிமன்றம் உத்தரவிட்டது. அதில், ஆண்ரூ சான், இலங்கைத் தமிழர் மயூரன் சுகுமாரன் ஆகியோரை விடுவிக்க ஆஸ்திரேலியா விடுத்த கோரிக்கையை, இந்தோனேசிய அரசு நிராகரித்துள்ளது. பிரான்ஸ் நாட்டு குற்றவாளியின் மேல்முறையீட்டு மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டன. அதனைத்தொடர்ந்து தண்டனையை நிறைவேற்றப்படுவதற்காக, குற்றவாளிகள் 10 பேரும் பாதுகாப்பு நிறைந்த நுசகம்பங்கள் தீவில் உள்ள சிறைக்கு கடந்த 10 ஆம் திகதி மாற்றப்பட்டனர்.


மேரி ஜெனி விலோசோ உட்பட 10 பேரின் சாவுத் தண்டனையை நிறுத்தக்கோரி சுயாட்சி பெற்ற ஹொங்கொங்நாட்டில்போராட்டங்கள்நடைபெற்றன. இதேபோன்று இந்தோனேசியாவுக்கு வந்திருந்த ஆஸ்திரேலியர்களும் சாவுத் தண்டனைக்கு எதிராக முழக்கமிட்டனர்.

இதனிடையே, சாவுத் தண்டனை கைதிகளிடம் பேசி ஆறுதல் கூற மத குருமார்கள், துப்பாக்கியால் சுட்டு சாவுத் தண்டனையை நிறைவேற்றும் தொழிலாளிகள், சுட்டுக் கொன்ற பின்பு கைதிகளின் சாவை உறுதிப்படுத்த மருத்துவர்கள் தயார் நிலையில் இருக்கும்படி இந்தோனேசிய அரசு உத்தரவிட்டது. ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூன், விடுத்த கோரிக்கையையும் நிராகரித்த இந்தோனேசிய அரசு,போதைப் பொருள் கடத்திய குற்றத்திற்காக 8 பேருக்குசாவுத்தண்டனையைநிறைவேற்றியுள்ளது. பிலிப்பைன்ஸ் நாட்டு பெண் குற்றவாளியான மேரி ஜெனி விலோசோவுக்கு மட்டும் தண்டனை தற்போது நிறைவேற்றப்படவில்லை.










சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட முன்னர், மயூரனும், சானும் தமது பூதவுடல்கள் ஆஸ்திரேலியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு இறுதிக் கிரியைகள் நிறைவேற்றப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தார்கள். அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற இந்தோனேசிய அரசு இணங்கியதாக இந்தோனேசிய சட்டமா அதிபர் அலுவலகத்தின் பேச்சாளர் ரோனிஸ்பொன்டானா தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தல் குற்றவாளிகளுக்கு நிறைவேற்றப்பட்ட சாவுத் தண்டனைக்குப் பதிலாக மாற்று வழியில் தண்டனையை வழங்கி இருக்கலாம் என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. சர்வதேச அளவில் இந்தோனேசிய அரசிடம் சாவுத் தண்டனையை ரத்துச் செய்யுமாறு கேட்டபோதிலும் இந்தோனேசிய அரசு குறிக்கப்பட்ட நாளில் குற்றவாளிகளுக்கான தண்டனையை வழங்குவோம் என உறுதியாகத் தெரிவித்திருந்தது. இவ்வாறு இந்தோனேசிய அரசு தனது உறுதியில் இருந்து சற்றும் தளராது தண்டனையை நிறைவேற்றியமை என்பது மனித உரிமை மீறல் செயலே என்று தென்கிழக்கு ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்துக்கான சர்வதேச மன்னிப்புச் சபையின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

போதைபொருள் கடத்தல் என்பது தண்டனைக்குரிய குற்றமாக இருப்பினும் அதற்கான தண்டனை சாவுத் தண்டனை என்பது கொடூரமான தண்டனையே. குற்றவாளிகள்சிறைவாசம் இருந்தபோதில் அவர்களுக்கென வாதாடிய சட்டத்தரணிகள் தெரிவித்த கருத்துக்களை இந்தோனேசிய அரசு செவிமடுக்கத் தயார் நிலையில் இல்லாது அவர்களுக்கான தண்டனையை நிறைவேற்றுவதிலேயே குறியாக இருந்தது.

மேலும் இக்குற்றவாளிகளுள் ஒருவரான நைஜீரியாவைச் சேர்ந்த ரொட்ரிகோ குலார்தே என்பவர் மனநிலை பாதிக்கப்பட்டவராக இருந்த போதிலும் அவருக்கும் சாவுத் தண்டனையை விதித்தமை இந்தோனேசிய அரசின் மனித உரிமை மீறல் செயல் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

## வேற்றுக் கிரகவாசிகளைத் தேடும் நாசாவின் புதிய திட்டம்

வொஷிங்டன்,ஏப்.30
வேற்றுக் கிரகவாசிகளைத் தேடும் புதிய திட்டத்தை நாசா அதிகாரபூர்வமாகத் தொடங்கியுள்ளது. அந்தப் புதிய திட்டம் மூலம் பூமியைத் தவிர ஏனைய கிரகங்களில் உயிர்கள் இருப்பதற்கான வாய்ப்பு உள்ளதா என்பது பற்றி தீவிரமாக ஆய்வு செய்யபடும். அதற்காக அமைக்கபட்டுள்ள குழுவில் உலகம் முழுவதிலுமிருந்து 12 பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களைச்சேர்ந்தவிஞ்ஞானிகள் இடம் பெற்றுள்ளனர்.

நாசாவின் விண்வெளி தொலைநோக்கி கெப்லர் இதுவரை, ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேற்றுக் கிரகங்களை கண்டறிந்துள்ளது. அவற்றில் அளவில் பூமி போன்று உள்ள 5 கிரகங்களில் உயிர்கள் வசிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாகக்கூறப்படுகிறது.மேலும்



அந்தக் கிரகங்களைக் கடந்து வரும் ஒளிக் கதிர்களை ஆராய்வதன் மூலம் அந்தக் கிரகங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. (14)

## 44 வருடங்களாக நடைபெற்ற பன்றிச் சண்டைக்குத் தடை

வொஷிங்டன்,ஏப்.30
பிராணிகள் நல ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களின் கடும் எதிர்ப்பால் பன்றிச் சண்டை நிகழ்ச்சியை அமெரிக்க தேவாலயம் ரத்துச் செய்துள்ளது. அமெரிக்காவில் பலவருடங்களாக ஒரு விநோதமான விடயம் அரங்கேறி வருகிறது. ஸ்டீபன்ஸ்வில்லியில் உள்ள புனித பேட்ரிக் கத்தோலிக்க தேவாலயம் சார்பில் வருடந்தோறும் பன்றிச் சண்டை என்ற விழா நடைபெறும். இரத்தம் தெறிக்கும் அந்த விழாவில்இளைஞர்கள் பலர் ஒன்று சேர்ந்து ஒரு பாவப்பட்ட பன்றியை



தாக்குவர். அதனால் வெறியாகும் பன்றியும் திரும்பத் தாக்கும். இந்த வருடத்துக்கான பன்றிச்சண்டை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடைபெறவிருந்தது. கடந்த சில வருடங்களாகவே அந்த நிகழ்ச்சிக்குப் பிராணிகள் நல ஆர்வலர்களிடமிருந்து கடும் எதிர்ப்புகள் இருந்து வந்த நிலையில், இந்த வருடம் போராட்டம் உச்சக்கட்டத்தை எட்டியது. 80 ஆயிரத்துக்கும்மேற்பட்டோர் இணையம் மூலம் தமது எதிர்ப்பைப் பதிவு செய்ததையடுத்து, இந்த வருடம் பன்றிச்சண்டையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாக சேற்றுக் கால்பந்துப் போட்டியை நடத்த இருப்பதாக பேட்ரிக் தேவாலயம் அறிவித்துள்ளது. இது வருடந்தோறும் பன்றிச்சண்டையை பார்க்க வரும் லட்சக்கணக்கான ரசிகர்களுக்கும், பங்குபெறும் வீரர்களுக்கும் ஏமாற்றத்தை அளித்துள்ளது. (14)

நேச– வித்யாசாகர்,
*கிளிநொச்சி*

# அறியாத ஆபத்து



28 ஆண்டுகளுக்கு முன்பு எமது அயல் நாடான இந்தியாவிலிருந்து இந்தியப் படை வந்ததுடன் இந்த ஆபத்தும் அவர்களுடனே வந்து விட்டது. இந்த இந்தியப் படையினர் தமது உணவுத் தேவைக்காகக் கொண்டு வந்த ஆடுகளில் ஒட்டி வந்ததே இந்த ஆபத்து.

இதைப் பாதீனியம் என நாம் அழைக்கிறோம். தற்காலத்தில் இதன் வளர்ச்சி ஏனைய பயிர்களை விட அதிகமாகவே காணப்படுகிறது. மேலும் இந்தச் செடிகள் வடக்கு மாகாணத்தில்தான் அதிகமாகக் காணப்படுகின்றன. இதை ஒழிப்பதற்கு வடக்கு மாகாண சபையால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் இந்த நடவடிக்கைகளுக்கு மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்காததால் அது முழுமையாக நிறைவேறவில்லை இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் சமூக ஆர்வலர்கள் இணைந்து ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 6 மணி தொடக்கம் 7 மணி வரை பாதீனிய ஒழிப்பில் ஈடுபடுகின்றனர். இதில் வயது முதிர்ந்தோர், இளைஞர்கள், சிறார்கள், பெண்கள் எனப் பலரும் பங்கெடுத்து வருகின்றனர்.

பாதீனியச் செடிகளை ஒழிப்பதற்கு அனைவருக்கும் விருப்பம் தான். ஆனால் இதைப் பிடுங்குவதைப் பார்த்தால் யாராவது கேலியாக நினைப்பார்கள் எனச் சிலர் எண்ணுகிறார்கள். அதேவேளை யாராவது இதில் ஈடுபட்டால் அனைவரும் ஒன்று சேர்கிறார்கள். சில பிரதேசங்களில் அரச அலுவலகங்களுக்கு முன்பாகவும் காணிகளுக்குள்ளும் இந்தச் செடிகளைக் காண முடிகின்றது. இது சிறியதாக இருக்கும் போது தக்காளிச் செடியைப் போன்று காட்சியளிக்கின்றது.

முதியோர், இளையோர், சிறியோர், பெண்கள், பாடசாலை மாணவர்கள், அரச மற்றும் தனியார் நிறுவன ஊழியர்கள் இணைந்தால் பாதீனியத்தை ஒழித்து எமது மண்ணையும் மக்களையும் காப்பாற்றிக் கொள்ள முடியும்.

ஒரு பாதீனியச் செடியானது அண்ணளவாக 15 ஆயிரம் செடிகளை உருவாக்கிவிடும் என்பது அதிர்ச்சித் தகவலாகும்.

இந்தச் செடியானது மனிதர்களின் உடலில் படும்போது தீமையான விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றது. மிருகங்கள் இந்தச் செடிகளை உண்ணும் போதும் அவற்றுக்குத் தீமை ஏற்பட்டு விடுகின்றது.

இந்தச் செடியினால் ஏற்படக் கூடிய தீமைகள் தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் இன்னமும் போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவில்லையெனவே தெரிகின்றது. ஏனென்றால் இந்தச் செடிகளை அழிப்பதில் அவர்கள் இன்னமும் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

டெங்கு நுளம்புகள் பெருகுவதற்குக் காரணமாக இருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதுபோன்று பாதீனியச் செடிகள் வளர்ந்து காணப்படும் காணி உரிமையாளர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பதன் மூலமாகவே இந்தச் செடிகளை முற்றாக அழித்து ஒழிக்க முடியும்.

பொதுமக்களின் பங்களிப்பு இல்லாமல் எந்தக் காரியத்தையும் முற்றாக நிறைவேற்றி வைக்க முடியாது என்பதுதான் உண்மை நிலையாகும்.

# ஜோன் கீல்ஸ் நிறுவனத்தின் மென்திறமைகள் செயலமர்வு

இறுதிப்படி மென்திறமைகள் செயலமர்வுகளின் வரிசையில் மற்றுமொரு வெற்றிகரமான செயலமர்வு கடந்த 2015 ஏப்ரல் 7 முதல் 9 வரை கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் பட்டதாரி மாணவர்களுக்காக ஜோன் கீல்ஸ் தொண்டு நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முகாமைத்துவ மற்றும் நிதியியல் பாடத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் தினசரி 160 இற்கும் மேற்பட்ட பட்டதாரி மாணவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

ஜோன் கீல்ஸ் தொண்டு நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இறுதிப்படி மென்திறமைகள் செயலமர்வு எனது மென்திறமைகளை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. ஒவ்வொரு ஆலோசனை அமர்விலும் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்கள் மிகவும் ஆழமான அறிவை வழங்கியதுடன், புதிய விடயங்கள் சார்ந்த அறிவை வெளிக்கொணரவும் உதவின என்று மனித வள முகாமைத்துவ பீடத்தின் இறுதியாண்டு மாணவரான ரங்க யுதார குறிப்பிட்டார்.



இலங்கை பல்கலைக்கழகங்கள் மத்தியில் தொடர்ந்து பன்னிரண்டாவது தடவையாகவும் வெற்றிகரமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வின் பிரதான நோக்கம், உள்நாட்டிலுள்ள பட்டதாரி மாணவர்களுக்கு இலங்கையில் காணப்படுகின்ற தொழில்வாய்ப்புக்கள் தொடர்பான யதார்த்தபூர்வமான தோற்றப்பாடுகளை எடுத்துக்கூறி நாட்டின் பிரதான தொழில்வழங்குநராகக் காணப்படுகின்ற தனியார்துறையின் எதிர்பார்ப்புக்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் அவர்கள் தம்மை சிறந்த முறையில் தயார்செய்ய உதவி, அவர்களது தொழில்வாய்ப்புக்களை மேம்படுத்திக் கொள்ள வழிசமைப்பதாகும்.

இரண்டரை நாள்களாக இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஐந்து தொடர் செயலமர்வுகள் அடங்கியிருந்ததுடன், தொழில்தருநரின் எதிர்பார்ப்புக்கள், அணிக் கட்டமைப்பு மற்றும் தலைமைத்துவ ஆற்றல்கள், ஆளுமை அபிவிருத்தி மற்றும் தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்புதல், வர்த்தகத்துறையின் சூழலுக்கு தம்மை இசைவாக்கிக் கொள்ளுதல் ஆளுமை வளர்ச்சி மற்றும் வர்த்தகத்துறை உபசரிப்புப் பண்புகள்அடங்கலாக பல்வேறு விடயங்கள் இதில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

ஜோன் கீல்ஸ் தொண்டு நிறுவனத்தின் தலைமைத் தொழிற்பாட்டு அதிகாரியான கார்மலீன் ஜெயசூரிய இதில் கலந்துகொண்டவர்கள் மத்தியில் உரையாற்றுகையில் ஜோன் கீல்ஸ் நிறுவனத்தின்வர்த்தகசமூகநலன்புரிமுன்னெடுப்புக்களின் இலட்சியம் எதிர்காலத்தைப் பிரகாசிக்கச் செய்வதற்கு தேசத்தை ஆளுமைப் படுத்துவதாகும். எதிர்காலத் தலைவர்களாக விளங்கவுள்ள உங்களைப் போன்ற இளம் பட்டதாரி மாணவர்களை ஆளுமைப்படுத்தி பணியுலகின் எதிர்பார்ப்புக்களுக்கு நீங்கள் சிறப்பாக முகங்கொடுக்க உங்களை வழிநடத்துவதில் நாம் தீவிர அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம். எமது பட்டதாரிகள் எந்த இடத்திலும் வெற்றியடைவதற்குத் தேவையான அறிவையும், திறமையையும் கொண்டுள்ளனர் என நான் நம்புகின்றேன். ஆயினும் அவர்கள் ஒரு படி மேலே செல்வதற்கு அவர்களது மென்திறமைகள் மேம்படுத்தப்படவேண் டும். இவ்வாறான செயலமர்வுகளின் மூலமாக மாணவர்கள்தமதுதிறமைகளைமுற்றுமுழுதாக வெளிக்கொணர உதவி, எதிர்காலத்தில் தொழிலில் அவர்கள் வெற்றிகரமாக செயற்படுவதற்கு ஆளுமைப்படுத்தும் விடயங்களை அவர்களுக்கு வழங்கமுடியும் என நாம் நம்புகின்றோம்.

எமது பட்டதாரி மாணவர்கள் தமது கல்வி சார்ந்த கற்கையைப் பூர்த்திசெய்து வெளியேறி, தமது வாழ்வின் அடுத்த கட்ட மாக உள்ள பணியுலகில் காலடியெடுத்து வைப்பதற்கு இது வழிகாட்டுவதால் நாம் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு இறுதிப்படி எனப் பெயரிட்டுள்ளோம் என்று குறிப்பிட்டார்.

2006 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த இந்நிகழ்ச்சித்திட்டமானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் குறிப்பிட்ட பல்கலைக்கழகங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுவருகின்றது. (த)



இலங்கை வங்கி வாடிக்கையாளரான சிறுவர்களில் 2014 புலமைப் பரிசில்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்குப் பரிசளிப்பு வைபவம் வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தில் இலங்கை வங்கியின் வன்னி பிராந்திய முகாமையாளர் ந.சதானந்தம் தலைமையில் நடைபெற்றது. வவுனியா கல்வியற்கல்லூரி பீடாதிபதி எஸ்.சிதம்பரநாதன் மற்றும் அதிதிகள் வரவேற்கப்படுவதையும் பீடாதிபதி மாணவன் ஒருவருக்குப் பணப்பரிசில் வழங்குவதையும் படத்தில் காணலாம். (த–402)

# நீயும் - நானும் கடல் சவாரி வெற்றிகரமாக நிறைவு

இலங்கையின் முதற்தர மூலிகை அழகு சாதன வர்த்தக நாமமான நேச்சர்ஸ் சீக்ரட்ஸ் ஏற்பாடு செய்த நீயும்–நானும் எனப்படும் அழகிய கடலில்விநோதசவாரிசெயற்றிட்டம்வெற்றிகரமாக அண்மையில் நிறைவடைந்தது.

இம்முறை கொண்டாடப்பட்ட சர்வதேச மகளிர் தினம் மற்றும் காதலர் தினத்துக்கு இணைவாகவே இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதற்கமைய நேச்சர்ஸ் சீக்ரட்ஸின் அன்பார்ந்த பாவனையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஆயிரக்கணக்கான விண்ணப்பங்களிலிருந்து 60 ஜோடியினருக்கு கடல் சவாரி செய்ய சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. ஜோடியினருக்கு வயது வேறுபாடின்றி, விவாகமானவர், விவாகமாகாதவர் என்ற வேறுபாடின்றி குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு இந்தப் போட்டியில் கலந்துகொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தமை விசேட அம்சமாகும்.

இச் சவாரிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 60 ஜோடியினரும் பல்வேறு வயதுப் பிரிவை சேர்ந்தவர்களாவர். இலங்கையின் தூரப்பிரதேசமான அனுராதபுரம்,பொலன்னறுவை, மொனராகலை, இரத்தினபுரி உள்ளிட்ட பகுதிகளிலிருந்தும் பலர் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை கடற்படைக்கு சொந்தமான கப்பல் மூலம் இவர்கள் ஆழ்கடலுக்கு அழைத்துச் செல்லப்பட்டு 5 மணித்தியாலயங்கள் வரை விநோதமாக தமது பொழுதைக் கழிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

காலி தெற்கு கடற்படை முகாம் தலைமையகத்திலிருந்து ஆரம்பமான இப் பயணம், ஆழ் கடலில் அழகிய டொல்பின்களை மிக அருகில் சென்று பார்வையிடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியது.

அத்துடன் இராட்சத திமிங்கிலங்களை பார்வையிடுவதற்கான அரிய சந்தர்ப்பத்தை ஜோடிகளுக்கு வழங்கியதுடன், அவற்றை புகைப்படம் எடுத்து மகிழவும் அவர்கள் தவறவில்லை.



இந்த கப்பல் சவாரியை ஒருபோதும் தாம் மறக்க போவதில்லை என்றும் இது புது அனுபவத்தைத் தமக்கு வழங்கியதாகவும் தெரிவித்த ஜோடியினர், இச்சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுத்த நேச்சர்ஸ் சீக்ரட்ஸ் நிறுவனத்திற்கு தமது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்தனர். (த)

## அரச உத்தியோகத்தர்களின் பாராமுகம்

அண்மையில் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டுச் செயற்பாடு என சுகாதார உத்தியோகத்தர்கள், பொலிஸார், இராணுவம் அடங்கிய டெங்கு ஒழிப்புக் குழுவினர் வீடு வீடாகச் சென்று வீட்டுச் சுற்றாடல்கள் தரிசிக்கப்பட்டு நீர் தேங்கக்கூடிய பொருள்கள் காணப்படின் அவற்றை அகற்றுவதற்கான ஆலோசனை வழங்கியதுடன் டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வுப் பதாகைகளையும் வழங்கி அறிவூட்டிச் சென்றனர். இந்தச் செயற்பாடு எனக்குத் தெரிந்த மட்டில் 5 வருடத்துக்கு மேலாகக் கிரமமாக நடைபெற்று வருகின்றது. வரவேற்கத்தக்க விடயமாகும். இந்தச் செயற்பாட்டின்போது குப்பைகள் மற்றும் நீர்தேங்கிக் காணப்படின் அவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படுவதும் பத்திரிகையில் அவதானிக்கப்படுகின்ற விடயமாகும்.

கண்டி வீதிக்கருகிலுள்ள ஜே/309 கைதடி நுணாவில் கிராம சேவகர் பிரிவில் அதிகளவு டெங்கு நோயாளர் இனங்காணப்படுவதாக யாழ். சுகாதாரத் திணைக்களத்தினால் அடிக்கடி புகையூட்டல் செய்யப்படுவதுடன் அடிக்கடி வீடுகளும் தரிசிக்கப்படுவதும் வழமை. அண்மையில்கூட சில பியர்ரின்கள் வீதியோரமாக இருந்ததாக குடியிருப்பாளர் ஒருவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாக அறியமுடிந்தது.

ஆயினும் நுணாவில் குளம் அம்மன் கோயிலுக்கு அருகிலுள்ள சுமார் 2 ஏக்கர் பரப்பளவுடைய காணி நீண்டகாலமாக பற்றைக்காடாகவும் நுளம்பு பெருகக்கூடிய குப்பைகள் நிறைந்தும் காணப்படுவதுடன் கலாசார சீர்கேடுகளும் அங்கே நடந்தேறுகின்றன. பாம்புகள், விஷ ஜந்துகளின் நடமாட்டமும் காணப்படுகின்றது. பஸ் போக்குவரத்துக்கு கைதடி நுணாவில் கிராமத்தை இணைக்கும் பாதையோரமாக இந்தப் பற்றைக்காணி காணப்படுவதால் பெண்கள், பாடசாலை மாணவர்கள், சிறார்களின் பிரயாணத்துக்கு அச்சுறுத்தலாகக் காணப்படுகின்றது.

இது தொடர்பாக பலமுறைப் பாடுகள் கொடுக்கப்பட்டும் நீதித்துறையைச் சார்ந்தவர்க்குச் சொந்தமான காணி என்பதால் அரச உத்தியோகத்தர்கள் துப்புரவு செய்ய நடவடிக்கை எடுக்காது பாராமுகம் காட்டி வருகின்றனர். இது தொடர்பாக சுற்றாடல் பொலிஸார், சுகாதாரத்துறையினர் உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுத்து கைதடி நுணாவில் கிராமத்தின் ஆரோக்கியத்துக்கும் அபிவிருத்திக்கும் உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*கைதடி நுணாவில் வாசி.*

## வாசகர் திருமுகம்

## கிராமத்தின் அவலம் தீருமா?

ஊரியான் காடு, கைதடி தெற்கு என்னும் முகவரியில் வசிக்கும் மக்கள் குடிதண்ணீர் பிரச்சினையை எதிர்கொண்டு வருகின்றனர். இங்குள்ளகிணறுகளில் உவர்நீர் காணப்படுவதே இதற்கான காரணமாகும். மழை காலத்தில் வீடுகளைச் சுற்றி நீர் நிரம்பிக் காணப்படுகின்றது. அதனால் வீதிகளின் குறுக்காக வாய்க்கால் வெட்டுவதால் வாகனங்கள் செல்வது சிக்கலாக மாறியுள்ளது. மேலும் இங்கு வசிக்கும் மக்கள் தினமும் பயன்படுத்தும் சிறு வீதிகளும் குண்டும் குழியுமாகக் காணப்படுகின் றன. அதனால் அருகில் இருக்கும் கடைகளுக்கு சுற்றிச் செல்லவேண் டியுள்ளது.

இந்த நிலையில் 100 நாள் வேலைத் திட்டத்தில் கிராம அபிவிருத் திக்காக பத்து லட்சம் ரூபாவாக ஒதுக்கப்பட்டுள்ளது. கைதடி தெற்கு சனசமூக நிலைய மைதானத் துக்கு மண்போடுவதற்காக இந்த நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

வாசிகசாலை ஏற்கனவே இடிக்கப்பட்டு வெளிநாட்டு உதவியுடன் மேல்மாடியாகக் கட்டப்பட்டு வருகின்றது. ஆகவே கிராம மக்களின் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் நிதியை எமது கிராமத்துக்கு ஒதுக்கித் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். *மு.நிசாந்தன்.*

## நெடுந்தீவுக்கான படகுகளின் நேரத்தை தீர்மானிப்பது யார்..?

நெடுந்தீவுப் பிரதேசத்துக்கான கடற்போக்குவரத்தில் அரச, தனியார் படகுகள் வரையறைக்குட்பட்ட ஒரு நேர அட்டவணைக்கமைவாக சேவையில் ஈடுபடுகின்றன. ஆனால் பயணிகள் படகுகளில் ஏறுவதற்கு துறைமுகம் வந்தால் அந்த நேரத்தில் படகுகள் சென்றுவிடும்... இந்த நிலை தனியார் படகுகளில்தான் காணப்படுகின்றது.

இதேவேளை – நேர அட்டவணைகள் நெடுந்தீவு பிரதேச செயலரின் கையெழுத்துடன் பொதுமக்கள் பார்வைக்கென ஒட்டப்பட்டு உள்ளதுடன் சமூக வலைத்தளங் களிலும் அதனைச் சில ஆர்வாலர்கள் வெளியிட்டும் உள்ளனர். இந்த வகையில் சிலதனியார் படகோட்டிகள் தாங்கள் நினைத்தாற் போல் படகு நேரத்தை மாற்றுவதனால் சில சமயங்களில் உரிய கடமைகளை மேற்கொள்ள முடியாத அளவுக்கு காலதாமதம் ஏற்படுகின்றது. அல்லது குறிகாட்டுவானிலோ, நயினாதீவிலோ தங்கி நின்று மறுநாள் செல்லும் நிலை காணப்படுகின்றது. அல்லது வாடகைக்கு படகு அமர்த்தி பெரும் நிதிச் செலவில் பயணம் செல்ல வேண்டும்.

இது தொடர்பாக படகோட்டிகளுடன் கதைத்தால் நியாயமான பதில் கிடைப்பதில்லை "எம்மைவிட்டால் யார் நெடுந்தீவுக்கான படகு சேவையினை செய்வது" என்பது போன்ற பதில்கள்தான் கிடைக்கின்றன. இதனால் பொதுமக்கள்தான் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே தனியார் படகு உரிமையாளர்களை வழிப்படுத்தி நெறிப்படுத்த வேண்டிய அரச அதிகாரிகள் இதனைக் கருத்தில் கொண்டு சீரான சேவைபெற ஆவன செய்வார்களா?

*ஊரவன்.*

### கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

## வரலாற்று வெற்றி

பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த அரசமைப்பின் 19ஆவது திருத்தம் 211 வாக்குகளால் நிறைவேறியது. இதன்படி ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரங்கள் சில வெட்டிக்குறைக்கப்பட்டு பிரதமருக்கு சில அதிகாரங்கள் பகிரப்படவுள்ளன.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களைக் குறைத்தல், சுயாதீன ஆணைக்குழுக்களை அமைத்தல் உள்ளிட்ட சில மறுசீரமைப்புகள் 19ஆவது திருத்தத்தில் கொண்டுவரப்பட்டுப் பிரதமர் ரணில் விக்ரம சிங்க நாடாளுமன்றத்தில் கடந்த மார்ச் மாதம் 24 ஆம் திகதி சமர்ப் பித்தார்.

இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் பெரும் எதிர்ப்புக்களும் நெருக்கடிகளும் அரச தரப்புக்கு ஏற்பட்டிருந்தன. இரண்டு தடவைகள் குறித்த சட்டத்தின் மீதான விவாதங்கள் பின்தள்ளப்பட்டன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் குழுவொன்று இந்தத் திருத்தத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கவிடாமல் செய்வதற்கான கைங்கரியங்களில் ஈடுபட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியிருந் தன. அத்துடன் இந்தத் திருத்தம் நாடாளுமன்றில் தோல்வி கண்டால் நாடாளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தலை நடத்த ஜனாதிபதி திட்டமிட்டிருந்தார் என்றும் கூறப்பட்டது.

ஆயினும் யாரும் எதிர்பார்க்காத வகையில் பல அதிசயங்களுடன் இந்தத் திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது. வாக்கெடுப்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் மகனான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆதரவாக வாக்களித்துள்ளார். தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ அவைக்குச் சமுகமளிக்கவில்லை.

இதனைத் தவிர, பிரேமலால் ஜயசேகர, ஜானக பிரியந்த பண்டார, கலாநிதி ஜகத் பாலசூரிய, கெஹெலிய ரம்புக்வெல்ல, சுசந்த புஞ்சிநிலமே, எல்லாவல மேதானந்த தேரர் ஆகியோர் சபைக்கு சமுகமளிக்கவில்லை.

இதனைத்தவிர நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர மட்டும் இந்த திருத்தச் சட்டத்துக்கு எதிராக வாக்களித்தார். எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால சில்வா உள்ளிட்ட நாடாளுமன்றின் 215 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

19ஆவது திருத்தச் சட்டம் தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய ஆணைக்கு ஏற்ப கொண்டுவரப்பட்டதாகும். நிறைவேற்றதிகாரத்தை ஒழிப்பதும் தேர்தல் மறுசீரமைப்பை ஏற்படுத்துவதும் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளில் மிக முக்கியமானதாகும். இதில் 20 ஆவது திருத்தமாகச் சமர்ப்பிக்கப்படவுள்ள தேர்தல் திருத்தத்துக்கு அரச தரப்பு ஆதரவு வழங்குமெனத் தெரிவிக்கப்பட்ட உத்தரவாதத்துக்கு அமைய சுதந்திரக் கட்சி 19 க்கு முழுமையான ஆதரவு வழங்க முன்வந்ததாகக் கூறப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஜே. வி. பி.யும் 19ஆவது திருத்தத்தை முழுமையாக ஆதரித்ததோடு சபையில் பாராட்டும் தெரிவித்தன. நிறைவேற்றதிகாரத்தை ஒழிக்க 19 ஆவது திருத்தம் முழுமையாக வழி வகுக்காவிட்டாலும் ஓரளவேனும் ஜனநாயகத்தை வலுப்படுத்த முயற்சித்துள்ளது என இரு கட்சிகளும் சபையில் கூறியுள்ளன.

1978 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்த அரசமைப்புக்கு இதுவரை 18 திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்தப் 18 திருத்தங்களிலும் 13 ஆவது 17ஆவது திருத்தங்களைத் தவிர (இரண்டையும் தவிர) ஏனைய திருத்தங்கள் யாவும் நிறைவேற்று அதிகாரத்துக்கு வலுச் சேர்ப்பதாகவே உள்ளன. அவை ஜனாதிபதிக்கான அதிகாரங்களை அதிகமாகக் கொண்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவினால் கொண்டுவரப்பட்ட 18 ஆவது திருத்தம் நிறைவேற்று அதிகாரத்தை மேலும் பலப்படுத்தி நாட்டில் சர்வாதிகாரத்தை ஏற்படுத்தியது. ஜனநாயகம் என்ற போர்வையில் சர்வாதிகாரத்துக்கு மகுடம் சூட்டியதே 18 ஆவது திருத்தமாகும். ஆகவே 19 ஆவது திருத்தம் என்பது கடந்த 37 ஆண்டுகளாக இந்த நாட்டு மக்கள் அனுபவித்த சர்வாதிகார ஆளுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் திருத்தமாகும். அதேநேரம் நிறைவேற்று அதிகாரத்தின் கோரப்பிடியை தகர்த்து மக்களுக்குப் பலம் சேர்க்கும் என்றும் நம்பலாம். கடந்த 37 வருடங்களுக்கு மேலாக முன்னெடுக்கப்பட்டு வந்த போராட்டம் வெற்றி பெற்றுள்ளது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் 19 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய சகல தரப்பினருக்கும் தனது நன்றியை ஜனாதிபதி தெரிவித்துள்ளார். கடந்த ஐந்து ஜனாதிபதித் தேர்தல்களிலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதாக வாக்குறுதிகள் அளிக்கப்பட்டும், அதனை நடைமுறைப்படுத்த இந்த சந்தர்ப்பத்திலேயே முடிந்துள்ளது. இந்தச் வெற்றி இன்றுள்ளவர்களை விட பிறக்கப்போகும் பிள்ளைகளுக்குத் தான் பயனுள்ளதாக இருக்கும் எனவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார்.

பத்தி எழுத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## உண்மையான ஜனநாயகம் மேலெழுந்து உயர்வதற்கு...

அப்பாடா! ஒப்பேறுமா அல்லது சறுக்கி விழுந்துவிடுமா என்ற சந்தேகத்துக்கு உரியதாக ஊசலாடிக் கொண்டிருந்த ரணில் - மைத்திரியின், அரசமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தம், மூன்றில் இரண்டு வாக்குப் பலத்துடன் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் (28.04.2015 இல்) நிறைவேற்றப்பட்டுவிட்டது.

நாட்டில், ஜனநாயகத்தையும், மக்களுக்கான அது சார்ந்த பிரதான உரிமைகளில் பலம் மிக்கவற்றைத் தக்க வைப்பதிலும், இப்போதைய (புதிய) அரசு வெற்றி கண்டு விட்டது என்றும் கருதலாம்; கொள்ளலாம்.

பத்தொன்பதாவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியதன் ஊடாக, மக்களின் ஜனநாயக உரிமைகளையும் தேசிய அரசு பாதுகாத்து உள்ளதும் சிலாகிக்கப்பட வேண்டியதே.

பத்தொன்பதாவது திருத்தத்தை (புதிய) எதிர்க்கட்சி, தோற்கடித்து விடுமோ என்ற மக்களின் அச்சமும் தூசாகிப் பறந்துவிட்டது.

அரசமைப்புச் சபையின் அங்கத்தவர்களின் எண்ணிக்கையைப் பத்தாக மட்டுப்படுத்தி இருப்பதும், ஒரு சிறப்பான ஏற்பாடாகும்: அது வரவேற்கத்தக்க ஒன்றே.

கடந்த செவ்வாயன்று அரசமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தம் தோற்கடிக்கப்பட்டு விடுமோ என்ற 'பதற்ற' நிலை நீங்கியமை, நாடாளுமன்றப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்த வாக்காளர்களுக்கு மட்டுமன்றி, மக்களில் பெரும்பாலோனோருக்கும் திருப்தியை அளித்துள்ளது.

வரலாற்று நிகழ்வெனக் கொள்ளத்தக்க 19 ஏ யின் நிறைவேற்றம், நாட்டின் சகல இன மக்களுக்கும், அவர்களின் வாழ்வியல் பிரச்சினைகளை சீராக்க உதவ வேண்டும். அவர்கள் வேண்டுவதும் அதுவே.

ஆட்சி அதிகாரத்தில் தோய்ந்து விட்டோம் என்ற இறுமாப்புடன் ஆட்சி நடத்தாமல், மக்கள் எல்லோரும் தமக்குரிய பிரிக்கப்படமுடியாத உரிமைகளை அனுபவிக்க வகை செய்வதே மிக இன்றி அமையாதது.

எந்த ஒரு விடயத்திலும், விவகாரத்திலும் எதிர்ப்பு அல்லது ஆட்சேபம் தெரிவிப்பது மிக இலகுவானது. அதேவேளை, அடுத்தவர்களின் உரிமைகளைப் பறிப்பதிலும் மறுப்பதிலும் ருசி கண்ட நிலையை, நீட்டிச் சென்று ஆட்சி நடத்துவது அரசியல் தர்மம் அன்று. அது முழுக்க முழுக்க சர்வாதிகாரத்தின் ஓர் வடிவமே.

அதனை மனங்கொள்ளாமல், ஜனநாயக வர்ணத்தைப் பூசிக்கொண்டு, சிறுபான்மையினரின் உரிமைகளை ஒடுக்க விழைவது, அதன் பால் தடம் பதிக்க முனைவது பாவ மன்னிப்புக்குள் அடங்கமாட்டாது.

தென்னிலங்கையின் அரசியல் தலைவர்கள், தமிழ் மக்களை இந்த நாட்டின் சகோதரப் பிரஜைகள் என்று மதித்து, தமது (சிங்கள) மக்களுக்கு உள்ள, உரிமைகள், தமிழ் மக்களுக்கும் உரித்தானவை என்ற நல்லாட்சித் தடத்தில் கால் பதிக்காமல் --

இனவாதத்தில் -- இனப்பாகுபாட்டில் -- மூழ்கித் திமிர் காட்டும்வரை, இந்த நாட்டில் உண்மையான ஜனநாயகமும் நல்லாட்சியும் வெறும் வாய்ப்பந்தல்களே!.

தமிழ் மக்கள் மற்றும் சிறுபான்மையினரின் ஜனநாயக உரிமைகளை, அவர்களுக்குப் பாதகமற்ற வடிவில் வழங்கும் நாள் வரை, இலங்கை நாட்டில் உண்மையான ஜனநாயகம் மேலெழுந்து உயரும் என்று எதிர்பார்க்க இயலாதே...!

# குழப்பங்களின் களமான மஹிந்த ராஜபக்ஷ

சேரலாதன்



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சமீபகால நடவடிக்கைகளும், அவர் அடிக்கடி வெளியிடுகின்ற அறிக்கைகளும் குழப்பத்தை ஏற்படுத்துவனவாக அமைந்துள்ளன.

அவர் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் 'சோதிடர்களால் நான் மோசம் போய் விட்டேன். ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்தியது நான் விட்ட பெரிய தவறு' எனக் கூறியுள்ளார். அதே வேளை எனது அமைச்சரவையில் அங்கம் வகித்த சிலர் தவறு செய்ததை அறிந்து கொண்ட பின்னரும் அதைத் தடுத்து நிறுத்தாததும் தற்போதைய நிலைக்கு ஒரு காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இதன் மூலமாகத் தனது அரசில் இடம்பெற்ற தவறுகளை அவர் ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் வேறொரு இடத்தில் தம்மீதும், தம்மைச் சார்ந்தவர்கள் மீதும் மைத்திரி அரசு திட்டமிட்டுப் பழி வாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் கூறியிருக்கிறார். இது அவரது கருத்துக்களில் உள்ள முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டுகின்றன.

தமது தம்பியாரான பஸில் ராஜபக்ஷ விடயத்தில்கூட அவர் குழப்பகரமான கருத்துகளை வெளியிட்டுள்ளார். பஸில் நாட்டுக்குத் திரும்பியதும் இது தொடர்பாக அவரிடம் கேட்டபோது, 'பஸில் வந்து விட்டாரா? எனக்கு அவர் தொடர்பாக எதுவுமே தெரியாது'.என்று பதிலளித்திருக்கிறார். ஆனால் பின்னர் அவர் கூறிய கருத்துக்கள்தான் முன்னுக்குப் பின் முரண்பாடாக உள்ளன. பஸில் வந்தது தொடர்பாகத் தனக்குத் தெரியாது எனக் கூறிய அவர் –பின்னர் பஸிலுக்கும் தமக்கும் தொலைபேசியூடான தொடர்புகள் இருந்ததாகக் கூறுகிறார். தாம் பஸிலுடன் தொடர்பு கொண்டு நாட்டுக்குத் திரும்பி வந்தால் அவர் கைது செய்யப்படுவாரெனத் தெரிவித்ததாகவும் கூறுகிறார். இந்த நிலையில் பஸிலின் வருகை தொடர்பாகத் தாம் அறிந்திருக்கவில்லையென அவர் கூறியமை அவர் மீது நம்பிக்கையீனத்தை . ஏற்படுத்தியுள்ளது.

இன்னமும் இரண்டு ஆண்டுகள் ஜனாதிபதிப் பதவியில் அமர்ந்திருந்து முழு நாட்டையும் ஆட்டிப் படைக்கும் அதிகாரங்களை வீணாக இழந்து வெறும் மனிதராக அம்பாந்தோட்டையில் உள்ள தமது வீட்டில் முடங்கிக் கிடக்கும் மஹிந்தருக்கு மனதில் கவலைகளும், குழப்பங்களும் ஏற்படாமல் இருக்க முடியாது. ஆனால் அவர் தாம் குழம்பியதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாது பிறரையும் குழப்பத்தில் ஆழ்த்தி வருவதுதான் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

> தமது தம்பியாரான பஸில் ராஜபக்ஷ விடயத்தில்கூட அவர் குழப்ப கரமான கருத்துகளை வெளியிட்டுள்ளார். பஸில் நாட்டுக்குத் திரும் பியதும் இது தொடர்பாக அவரிடம் கேட்டபோது, 'பஸில் வந்து விட்டாரா? எனக்கு அவர் தொடர்பாக எதுவுமே தெரியாது' என்று பதில ளித்திருக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த தோல்வியடைந்தபோது அவர் அரசியலில் இருந்து நிரந்தரமாகவே ஒதுங்கி விடுவாரெனப் பலரும் எண்ணினார்கள். ஆனால் அவ்வாறு இருப்பதற்கு அவரது ஆதரவாளர்கள் அவரை அனுமதிக்கவில்லை. மஹிந்தவை எந்த நேரமும் சூழ்ந்து கொள்ளும் அவர்கள் பதவி ஆசையை ஊட்டிக் கொண்டே இருந்தனர். இவர்களில் மஹிந்த அரசில் அங்கம் வகித்த மைத்திரி அரசினால் குற்றஞ்சாட்டப்பட்ட பலரும் அடங்குவர். ஏற்கனவே தம்மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்களால் கலங்கிப் போயிருந்த மஹிந்தரும் தமது அரசியல் மறுபிரவேசம் குறித்து மெல்ல மெல்ல சிந்திக்க ஆரம்பித்தார். இந்த நிலையில்தான் பொதுத் தேர்தல் ஒன்று இடம் பெற்றால் நான் நிச்சயமாக வெற்றி பெறுவேன் என அவர் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். இது வெறுமனே அவரது உதட்டிலிருந்து வெளிவந்த வார்த்தைகள் அல்ல. அவரது அடி மனதிலிருந்தே இவை வெளிவந்துள்ளன.

எழுபது வயதான மஹிந்த ராஜபக்ஷ கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றிருந்தால் 2020 ஆம் ஆண்டு வரை அவரே ஆட்சியில் அமர்ந்திருக்கக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கும். ஆனால் சோதிடர்களின் ஆலோசனையைக் கேட்டு புத்தியைப் பேதலிக்க விட்டதால் தேர்தலில் தோல்வியைத் தழுவியது மட்டுமல்லாது தொடர வேண்டிய ஆட்சியை இடை நடுவில் இழக்க வேண்டியதாயிற்று. அது மட்டுமல்லாது பதவியில் இருக்கும் போதே தோற்கடிக்கப்பட்டவர் என்ற இழி சொல்லுக்கும் இவர் உள்ளானார். இத்தகையதொரு நிலையில் அவர் அரசியலிலிருந்து ஓய்வுபெற்றுத் தம்மீது சுமத்தப்பட்டுள்ள களங்கத்தை துடைத்தெறிவதற்கான முயற்சிகளில் [illegible]பட்டிருக்க வேண்டும். அப்போது தான் அவர் தாம் குற்றமற்றவர் என்பதையும் நிரூபிக்க வாய்ப்பிருந்திருக்கும். ஆனால் தாம் ஊழல், மோசடிகளில் ஈடுபடவில்லையெனவும், தம்மீது அபாண்டமாகப் பழி சுமத்தப்படுவதாகவும் மக்கள் மத்தியில் திரும்பத் திரும்பக் கூறுவதன் மூலமாக நாட்டு மக்களது அனுதாபத்தைச் சம்பாதிக்கவே முயல்கின்றார். தமது எதிர்கால அரசியல் நடவடிக்கைகளுக்கு இதையொரு மூலதனமாக அவர் பயன்படுத்தப் போகின்றார் என்பதும் தெளிவாகத் தெரிகின்றது. மேலும், பிறரைக் குழப்புவதன் மூலமாக தம்மீதும் தமது அரசில் அங்கம் வகித்தவர்கள் மீதும் புதிய அரசினால் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுபட முடியுமென்ற தந்திரத்தையும் அவர் நன்கறிந்து கொண்டிருப்பார் என்பதையும் மறுக்க முடியாது.

அரசியல் சாணக்கியமும் – தந்திர புத்தியும் கொண்ட மஹிந்தவின் எண்ணங்களைப் புரிந்து கொள்வதென்பது இலகுவான காரியமல்ல. அவர் சொல்வது, ஒன்று செய்வது ஒன்று என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதால் அவரை ஆழம் பார்த்து விடுவதென்பது இலகுவான காரியமல்ல. எது எப்படியோ மஹிந்த தமது நோக்கங்கள் நிறைவேறும் வரை தாமும் குழம்புவதுடன், பிறரையும் குழப்பத்தில் ஆழ்த்தியே வருவார் என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து
ரெங்கன்



# அரசின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் வாரம் இது

அரசியல் நிச்சயமின்மையானது இலங்கை நாட்டை உறுதியின்மையை நோக்கி நகர்த்திக் கொண்டிருந்த நாள்கள், அடுத்த வாரம் அளவில் நன்றாக அல்லது மிக மோசமாக முடிவடையவிருக்கின்றன.

நன்றாக என்று கூறும்போது 19 ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேறி சில வாரங்களுக்குள் 20 ஆவது திருத்தம் நாடாளுமன்றத்துக்கு வருவதைக் குறிப்பிடுவதாகும். மோசமாக என்பது, முதலில், ஜனாதிபதி சிறிசேனவின் தேர்தல் வாக்குறுதியான நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்கும் திருத்தம் தோற்கடிக்கப்படுவது. இரண்டாவது, புதிய தேர்தல் திருத்தங்களுக்கான 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்படுவதற்கான முயற்சிகளும் முறியடிக்கப்படுமானால் அரசுக்கு இரட்டை அடி விழுந்ததாக இருக்கும்.

இவ்வாறான ஒரு சாத்தியக்கூறு பற்றிய பயம் அதிகரித்த வண்ணம் இருக்கின்றது. இதில் முன்னாள் ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் ... நகர்த்தல்களை வேகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இரு திருத்தங்களையும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு ஏகமனதாக ஆதரிப்பதென்று முடிவெடுத்திருந்தாலும், ராஜபக்ஷ ஆதரவாளர்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாமல் செய்ய வேண்டும் என்பதில் குறியாக இருக்கிறார்கள். அவர்களின் மிகப் பிந்திய நிலைப்பாடு என்னவென்றால் 19 ஆவது திருத்தத்துக்கு மேலும் திருத்தங்கள் கொண்டு வருவதாகும். அதில் ஒன்று என்னவென்றால், உத்தேச அரசமைப்புப் பேரவையானது முற்றிலும் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கவேண்டும். இந்தத் திருத்தத்தைச் சேர்க்கும் முயற்சியை ராஜபக்ஷ ஆதரவாளர்கள் முன்னின்று மேற்கொள்கின்றார்கள்.

நாங்கள் இன்னமும் விடயங்களை ஆராய்வதில் ஈடுபட்டிருக்கிறோம். இது முடிவுற்றதும் இறுதி முடிவு எடுப்போம் என்று பத்திரிகையாளர்களிடம் கூறினார் எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா.

இந்தப் பின்புலத்தில், பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்காவும் அரசும் இரண்டுவிதமான இறுதி நிலைப்பாடு எதற்கும் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்வதில் இறங்கியிருக்கிறார்கள். இரண்டு திருத்தங்களையும் நிறைவேறச் செய்வதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தம்மாலியன்ற எல்லா முயற்சிகளையும் செய்து வருகின்றார். இல்லையென்றால் நாடாளுமன்ற தேர்தல்களை நடத்துவதைத் தவிர வேறு வழியில்லையென்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. நாடாளுமன்றம் கலைக்கப்படும் பட்சத்தில் இடைக்கால பொறிமுறையொன்றை செயற்படுத்துவது குறித்து ஆட்சியில் இருக்கும் அமைப்புக்கள் ஆலோசித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

19 ஆவது திருத்தம் நிறைவேற்றபடமாட்டாது என்று தெளிவாகத் தெரியும்பட்சத்தில் உடனடியாக நாடாளுமன்றம் வெசாக் உற்சவத்தையடுத்து பெரும்பாலும் மே 5 ஆம் திகதி கலைக்கப்பட்டுவிடும் என்று அதிகாரமுள்ள அரச வட்டாரம் ஒன்று கூறியுள்ளது. அவ்வாறாயின் ஜூன் பிற்பகுதியில் தேர்தல் நடைபெறும். அதுவும் தேர்தல் சீர்திருத்தமின்றி முன்னைய விகிதாசார முறையிலேயே நடைபெறுவதாய் இருக்கும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உத்தேச தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பாக எடுத்துள்ள முடிவின்படி நாடாளுமன்றத்தில் 255 ஆசனங்களை உருவாக்குவதற்கு அவர்கள் விரும்புகின்றனர். இந்த முடிவு ஏற்கனவே தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான 4 பேர் அடங்கிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குழுவினால் பரிந்துரைக்கப்பட்டதாகும். இதன் பிரகாரம் சுமார் 170 ஆசனங்களுக்கு உறுப்பினர்கள் பழைய நேரடி தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்படுவார்கள். அதே சமயம் 60 ஆசனங்களுக்கு மாவட்ட விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் தெரிவாவார்கள். எஞ்சியுள்ள 25 ஆசனங்களுக்கும் தேசிய விகிதாசார பிரதிநிதித்துவ முறைப்படி அதாவது தேசியப் பட்டியல் மூலம் தெரிவாவார்கள்.

**ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உத்தேச தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர் பாக எடுத்துள்ள முடிவின்படி நாடாளுமன்றத்தில் 255 ஆசனங்களை உருவாக்குவதற்கு அவர்கள் விரும்புகின்றனர். இந்த முடிவு ஏற்கனவே தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான 4 பேர் அடங்கிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குழுவினால் பரிந்துரைக்கப் பட்டதாகும். இதன் பிரகாரம் சுமார் 170 ஆசனங்களுக்கு உறுப்பினர் கள் பழைய நேரடி தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்படுவார்கள்.**

முன்னைய அரசு பதவியிலிருந்த காலத்தில் இடம்பெற்றதாகக் கருதப்படும் இலஞ்சம், ஊழல் மற்றும் நிர்வாகச் சீர்கேடுகள் தொடர்பான புலன் விசாரணைகள் தொடர்பாக ஆட்சி செய்யும் முத்தரப்பு தலைவர்களான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியவர்கள் தொடர்ச்சியாக விவாதித்து வருகிறார்கள் என்பது தெரிந்த விடயம். பல அதிமுக்கிய விடயங்களில் அவர்கள் கவனம் செலுத்தியுள்ள அதே நேரம், முன்னைய ஆட்சியாளர்கள் தொடர்பான இலஞ்சம், ஊழல் தொடர்பான வழக்குகள் காலம் தாழ்த்தப்படலாகாது என்பதை உறுதி செய்து கொள்ளத் தீர்மானித்துள்ளார்கள். இது அவர்களின் வரப்போகும் தேர்தலையொட்டிய உபாயமாக இருக்குமோ என்பது தெளிவாகத் தெரியவில்லை. சில அதிமுக்கிய பாரதூரமான வழக்குகள் நிலுவையில் வைக்கப்பட்டு அடுத்து என்ன செய்வது என்று ஆய்வாளர்கள் திகைத்துக் கொண்டிருக்கும் நிலையில், வெவ்வேறு தலைவர்கள் வெவ்வேறு காரணங்களைக் கூறிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையில் முன்னைய நிர்வாகத்தின் மிக முக்கிய உயர் மட்ட அதிகாரி ஒருவர், இன்னொரு நிறுவனத்தின் தலைவராகப் பதவி வகித்த ஒருவர் மற்றும் மதகுருமார்களில் ஒருவர் ஆகியோர் வரும் நாள்களில் கைது செய்யப்பட இருக்கிறார்கள் என்று தெரிகின்றது. இது அரசுக்குரிய பல மில்லியன் ரூபா பணம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருப்பது தொடர்பாகவாகும். இந்தக் குற்றச் சாட்டுத் தொடர்பான ஆதாரங்கள் அளவுக்கு அதிகமாகக் காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது.



இதனால்தான், ஜனாதிபதி சிறிசேன நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் ஊழல் மற்றும் இலஞ்சம் பற்றி மீண்டும் மீண்டும் குறிப்பிட்டிருந்தார் என்பது புலப்படுகின்றது. அவரோ, அரசோ இந்தப் போராட்டத்தை கைவிடப்போவதில்லை என்பதில் உறுதியாக் இருப்பதையே அவர் அழுத்திக் கூற விரும்பினார். மக்களின் சுயாதீனம் மற்றும் ஜனநாயகத்தை விசேஷமாக பாதுகாக்கவும், பலப்படுத்தவும் சாத்தியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க விரும்புகிறேன். ஊழல் மற்றும் மோசடிகளை இல்லாதொழிப்பதன் மூலம் மக்களின் நியாயமான உரிமைகளைப் பாதுகாக்க விரும்புகிறேன் என்றார் ஜனாதிபதி. அமெரிக்காவில் அடிமைத்தனம் ஒழிக்கப்பட்ட பின்பும் அடிமைகளாகவே இருக்க விரும்பியவர்கள் போன்றுதான், ஊழல் நடைமுறையை விரும்புகிறவர்களைத் தாம் பார்ப்பதாகவும் அவர் கூறினார். ஊழல் மோசடிகளை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டபோது அவர்கள் மக்களைத் தவறாக வழிநடத்தினார்கள் என்றார்.

அவ்வாறு தவறான வழிநடத்தலுக்கு தமது அரசு தகவல் வெளிப்பாடுகளை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாமையே காரணம் என்பதையும் அவர் முக்கியமாகக் குறிப்பிட்டார். விரிவான ஊடக வசதியிருந்தும் தாம் அதனை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தால், இந்தநிலைமையை எளிதாக வெற்றிகொண் டிருக்க முடியும் என்றார். தமது கூட்டாட்சியிலுள்ளவர்களுக்கும் இந்தப் பொறுப்பு இருக்கிறது என் றார்.

தம்மை வலுவில்லாதவன், பலவீனமானவன் என்று கூறுகிறவர்களுக்கு பதிலளிப்பதுபோல் சிறிசேன மேலும் கூறுகையில், கடந்த 100 நாள்களிலும் எனது செயற்பாடானது எனக்கிருக்கும் எல்லையற்ற அதிகாரங்களை பயன்படுத்துவதில்லை என்ற நோக்கமாக இருந்துள்ளது. ஏன்? அந்த அதிகாரங்களை பகிர்ந்து வழங்குவதற்காகவே என்னை நீங்கள் தெரிவு செய்தீர்கள். அந்த நோக்கத்தில் தான் நானும் வந்தேன். நிறைவேற்று ஜனாதிபதியிடமிருந்த அதிகாரங்களை நீக்குவதற்காக நான் வந்தேன் என்று குறிப்பிட்டார்.

**இயற்கையை அவதானிப்பதிலிருந்து நாம் பெறக்கூடிய படிப்பனை யாது?**

இயற்கையே இறைவனது ஆடை. இயற்கையை அவதானிப்பதன் மூலம் நாம் பெறக் கூடிய படிப்பனை "கிரிய சீலதா", அதாவது ஒருவர் தனது கடமையில் ஊக்கமுள்ளவராக இருக்க வேண்டும் என்பதாகும்.

## சாயி சிந்தனை



## சளித்தொந்தரவுக்கு வீட்டு வைத்தியம்

குழந்தைக்கு நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக இருப்பதால், அடிக்கடி தடிமனும், சளித் தொந்தரவும் ஏற்படுகிறது. வீட்டு வைத்தியத்தில் இதற்கு வழி இருக்கிறதா? சுக்கை நன்றாக நசுக்கி, அதை ஒரு கப் தண்ணீரில் போட்டு கொதிக்க வையுங்கள். அது கால் கப் ஆக வரும் வரை கொதிக்க விடவும். பிறகு அந்தத் தண்ணீரை வடிகட்டி, சம அளவு பால் கலந்து, அரைத் தேக்கரண்டி வெள்ளை கற்கண்டு பவுடர் கலந்து கொடுக்கலாம். வாரம் 2 அல்லது 3 நாள் என ஒரு மாதம் குடித்தால் சளி, தடிமன், தலைவலி என எந்தப் பிரச்சினையும் நெருங்காது. சிலர் கசப்பான பொருள்களை நாக்கில் படாமல் அப்படியே விழுங்குவார்கள். இனிப்பான பொருள்களை மட்டும் ருசித்துச் சாப்பிடுவார்கள். இது தவறான பழக்கம். எல்லா ருசியும் நாக்கில் படவேண்டும். அப்படி இருந்தால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகமாகும். அறுசுவை களையும் குறைவில்லாமல் சரியான விகிதத்தில் சாப்பிட்டால் நோய் எதிர்ப்புச் சக்தி குறைபாடு ஏற்படாது.

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 50 | 30 | 30 | 20–30 | 60 | 40–50 |
| கத்தரி | 60 | 50 | 60 | 50 | 40–50 | 60 | 40–50 |
| கரட் | 120 | 100 | 120 | 100 | 100–120 | 120 | 120–140 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 50 | 30–40 | 80 | 45–60 |
| பயிற்றை | 60 | 50 | 50 | 50 | 60–70 | 40 | 80 |
| பாகல் | 90 | 80 | 100–150 | 80 | 70–80 | 80 | 100–120 |
| கருணைக்கிழங்கு | 80 | – | 60 | 80 | 50–60 | 120 | 80–100 |
| பெ.வெங்காயம் | 90 | 100 | 100 | 100 | 80–85 | 100 | 100 |
| சி.வெங்காயம் | 60 | 50–80 | 50–100 | 80 | 50–80 | 80 | 100 |
| பூசணி | 40 | 30 | 40 | 30 | 25–30 | 40 | 50–60 |
| தக்காளி | 30 | 50 | 30–40 | 40 | 35–40 | 40 | 60–70 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 40 | 40 | 60 | 60–80 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 20–30 | 40 | 35–40 |
| பொன்னாங்காணி | 20 | – | 30 | 30 | 20–30 | 40 | 15 |
| பச்சை மிளகாய் | 40 | 40 | 30 | 40 | 30–40 | 60 | 80 |
| புடோல் | 40 | 50 | 60 | 50 | 40–60 | 30 | 60–70 |
| கோவா | 30 | 40 | 40 | 30 | 30–40 | 60 | 60–70 |
| வெண்டி | 70 | 50 | 60–90 | 60 | 80–120 | 40 | 60–70 |
| போஞ்சி | 170 | 120 | 120–180 | 140 | 120–140 | 160 | 120 |
| லீக்ஸ் | 160 | 160 | 140 | 160 | 100–140 | 180 | 120–140 |
| தேங்காய் | 60 | 25–45 | 60 | 60 | 40–50 | 60–70 | 35–50 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 90 | 90 | 85–90 | 100 | 100 |
| தேசிக்காய் | 160 | 130 | 140 | 120 | 140–160 | 180 | 120–160 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30–40 | 20 | 20 |
| கறிமிளகாய் | 80 | 70 | 60 | 60 | 60–80 | 80 | 80 |
| இராசவள்ளி | 120 | – | 140 | 100 | 80–120 | 140 | 120 |

## நாளை

**சித்திரை-18**
**வெள்ளிக்கிழமை**
**01.05.2015**

திதி: திரயோதசி முழுவதும்
நட்சத்திரம்: அத்தம் முழுவதும்
சுபநேரம்: 05.57-07.27 வரை
இராகுகாலம்: 10.27-11.57 வரை
பிரதோஷ விரதம்

## மழைக்கால பாதம் பராமரிப்பு

மழைக்கால பாதம் பராமரிப்பு சிலருக்கு மழைக் காலத்தில் நீரில் நடப்பதால் பாதங்களில் சேற்றுப் புண் வரவும் வாய்ப்புள்ளது. மழை நீரில் கண்டதும் கலந்து வருவதால், அதில் நடக்கும் போது அவை நம் பாதங்களைப் பதம் பார்க்கலாம். பூஞ்சைத் தொற்றுக்கள் ஏற்படலாம். இந்த மழைக் காலத்தில் நம் பாதங்களைப் பாதுகாப்பதற்கான வழிகளை இப்போது பார்க்கலாம்..

பூஞ்சைத் தொற்றுக்களிலிருந்து தப்பிக்க, உங்கள் பாதங்களை எப்போதும் சுத்தமாக வைத்திருங்கள். ஒவ்வொரு முறை வெளியில் சென்றுவிட்டு வீடு திரும்பியதும், கால்களை நன்றாக சோப்புப் போட்டுக் கழுவவும். பிறகு, கால்களை ஈரம் போக நன்றாகத் துடைக்கவும் வேண்டும்.

கால் நகங்களில் எப்போதும் அழுக்கு சேர்வ[illegible] இயல்பு தான். ஆனால் மழை நீரில் நடக்கும் போது, அந்த அழுக்கே பூஞ்சைத் தொற்றாக மாற வாய்ப்புண்டு. எனவே கால் நகங்களை வெட்டி விடவும். இதனால் அழுக்கு சேராது.

காலணிகள் போட்டு மழையில் நனையும் போதோ அல்லது மழை நீரில் நடக்கும் போதோ, காலணிகளுக்குள் நீர் இறங்கி நோய்த் தொற்று ஏற்பட வாய்ப்புண்டு. எனவே மழைக் காலத்தில் கேன்வாஸ் காலணி மற்றும் ஹை–ஹீல்ஸ் போடுவதைத் தவிருங்கள். எளிதில் காலில் நீர் புகாத காலணிகளைப் பயன் படுத்துவது நலம்.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### சாதிக்கலாம் வாங்க

மகத்தான செயல்களைச் செய்யவே கடவுள் நம்மைப் படைத்திருக்கிறார். அவற்றைச் சிறப்பாக செய்து முடிப்போம்.இல்லை என்றோ என்னால் இயலாது என்றோ ஒருநாளும் சொல்வது கூடாது. முயற்சி இருந்தால் சாதிக்க முடியும்.

தேவையான எல்லா வலிமையும், உதவியும் உங்களுக்குள் குடி கொண்டிருக்கின்றன. சரியான வழியில் செலுத்தப்பட்ட மனம் ஒருவனைக் காப்பதோடு, விடுதலை பெறவும் துணை நிற்கும்.

உண்மை எங்கே இழுத்துச் சென்றாலும் அதைப் பின்பற்றிச் செல்லுங்கள். கோழையாகவும், கபடதாரி ஆகவும் இருக்காதீர்கள்.

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 600 | 800 | 600 | 600 |
| நண்டு | 300 | 400 | 400 | 300 | 200 | 450 |
| கணவாய் | 550 | 500 | 500 | 500 | 600 | 500 |
| பாரை | 600 | 500 | 500 | 450 | 600 | 360 |
| சுறா | 600 | 500 | 600 | 600 | 700 | 500 |
| சீலா | 300 | 400 | 400 | 450 | 450 | 350 |
| விளை | 650 | 400 | 400 | 400 | 400 | 350 |
| முரல் | 300 | 350 | 400 | 300 | 400 | 300 |
| கும்பிளா | 400 | 300 | 300 | 350 | 400 | 300 |
| கிழாக்கன் | 550 | 600 | – | 400 | – | 70 |
| ஓரா | 400 | 400 | – | 300 | – | – |
| திரளி | 200 | 250 | 250 | 250 | 200 | – |
| நகரை | 200 | 250 | – | 350 | – | – |
| சூடை | 150 | 150 | 100 | 120 | 100 | 100 |
| ஒட்டி | 250 | 150 | 200 | 300 | – | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 250 | 200 | 130 |
| பாலை | 400 | 250 | – | 400 | 300 | – |
| வாளை | 100 | 150 | – | 300 | – | 250 |
| கொய் | 100 | 150 | 50 | 120 | 100 | – |
| மதனம் | 150 | 250 | 220 | 240 | 300 | 250 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள். இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறி முகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 3 | 2 | 7 | 9 | 4 | 6 | 5 |
| 6 | 7 | 9 | 1 | 4 | 5 | 8 | 2 | 3 |
| 2 | 4 | 5 | 8 | 6 | 3 | 7 | 9 | 1 |
| 5 | 9 | 1 | 7 | 2 | 6 | 3 | 8 | 4 |
| 3 | 8 | 7 | 4 | 9 | 1 | 6 | 5 | 2 |
| 4 | 6 | 2 | 3 | 5 | 8 | 1 | 7 | 9 |
| 9 | 5 | 8 | 6 | 3 | 4 | 2 | 1 | 7 |
| 7 | 3 | 6 | 5 | 1 | 2 | 9 | 4 | 8 |
| 1 | 2 | 4 | 9 | 8 | 7 | 5 | 3 | 6 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | 7 | | | 9 | | 2 | |
| 3 | | | | 2 | 1 | 7 | 6 | 8 |
| 5 | 2 | | 4 | | 6 | | | |
| 8 | | | | | | | 9 | 7 |
| | | 5 | | | | 3 | | |
| 9 | 4 | | | | | | | |
| | | | 9 | | | | 7 | 1 |
| 2 | 5 | 9 | 7 | 1 | | | | 3 |
| | 3 | | 8 | | | 9 | 5 | |

# மன்மத வருட பலன்கள்

## மீனம்

இந்த ஆண்டில் உங்கள் குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். சரளமான பண வரவால் சந்தோஷம் அடைவீர்கள். நம்பிக்கையுடன் உங்கள் பணிகளில் ஈடுபடுவீர்கள். நண்பர்களுக்கும் உற்றார், உறவினர்களுக்கும் தேவையான உதவிகளைச் செய்து மன நிறைவு அடைவீர்கள். புதிய முதலீடுகளில் தைரியத்துடன் ஈடுபடுவீர்கள். அதில் உங்களின் முழுத் திறமையை வெளிப்படுத்தி வெற்றி பெறுவீர்கள்.

பழைய கடன்களும் வசூலாகும். உங்கள் எதிரிகளின் பலம் குறையும். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். தர்ம காரியங்களில் ஈடுபடுவீர்கள். மன அழுத்தம் மறையும். சிந்தனையில் தெளிவு உண்டாகும். இந்த ஆண்டு சகோதர, சகோதரிகள் மற்றும் நண்பர்கள் மூலமாக நன்மை அடைவீர்கள். புதிய சொத்துக்களை வாங்குவீர்கள். ஆன்மிகப் பெரியோர்களைச் சந்தித்து அவர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். உங்கள் தோற்றத்தில் பொலிவு உண்டாகும். புத்திசாலிகளின் நட்பைப் பெற்று பயனடைவீர்கள். மன உறுதி உண்டாகும். கவலைகள் மறைந்து மகிழ்ச்சி பிறக்கும். ஏற்றுமதி – இறக்குமதி வியாபாரங்கள் சூடுபிடிக்கும். தூர தேசத்திலிருந்து மகிழ்ச்சி தரும் செய்திகளைக் கேட்பீர்கள். வெளிநாட்டுப் பயணங்களைச் செய்வீர்கள். சேமிப்பு விடயங்களில் முன்னேற்றத்தைக் காண்பீர்கள். வெளி வட்டாரத்தில் உங்கள் செல்வாக்கு உயரும்.



உங்களைப் பற்றி அவதூறாகப் பேசியவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு உண்மை நிலையைப் புரிய வைத்து, நட்பைத் தக்க வைத்துக் கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படும். பெற்றோர் மற்றும் நண்பர்கள் வழியில் ஏற்பட்ட மன வருத்தங்களை முற்றிலும் நீக்குவார். குறைந்த அளவு முதலீட்டிலும் அதிகலாபத்தை அள்ளுவீர்கள். எண்ணங்களுக்குத் தகுந்த செயல் வடிவம் கொடுப்பீர்கள். எதிரிகளால் தொல்லைகள் ஏற்படாது. உடல் உபாதைகள் ஏதேனும் இருப்பின், இக்கால கட்டத்தில் தீரும். வீண் வழக்குகளிலிருந்து விடுபடுவீர்கள். அலைச்சல்களுடன் நடந்த செயல்கள் நல்லபடியாக முடிவடையும். வெளியில் கொடுத்திருந்த பணம் திரும்பவும் கை வந்து சேரும். சென்ற இடத்திலெல்லாம் பிரச்சினையை சந்தித்தவர்கள்கூட இந்தக் கால கட்டத்தில் விரும்பி வரவேற்கப் படுவார்கள்.



சிலர் மனம் விரும்பிய வீட்டுக்குக் குடிபெயர்வார்கள். தக்க சமயத்தில் உயர்ந்தவர்களின் நட்பைப் பெற்று, கௌரவக் குறைவு ஏற்படாமல் காக்கப்படுவீர்கள். உறுதியின்றிச் செய்த வேலைகளில் ஒரு பிடிப்பு ஏற்பட்டு அவை மளமளவென்று நடந்தேறும். என்ன நடக்குமோ?' என்று பயந்த விடயங்கள்கூட மகிழ்ச்சிகரமாக முடிவடையும்.

**உத்தியோகத்தர்களுக்கு**

உத்யோகத்தர்களுக்கு பதவி உயர்வு தேடி வரும். வருமானம் சீராக இருக்கும். விரும்பிய இடமாற்றங்களும் கிடைக்கும். மேலதிகாரிகளின் அன்பும், ஆதரவும் கிடைக்கும் என்றாலும் அவர்களிடம், மரியாதைக்குரிய தொலைவில் இருந்து பழகுவது நல்லது. சக ஊழியர்களுடன் நல்ல நட்பு தொடர்வதால் உங்களின் வேலைகள் குறித்த காலத்துக்குள் நிறைவேறிவிடும். உங்களின் வேலைத் திறனைக் கூட்டிக்கொள்ள புதிய அலுவலகப் பயிற்சிகளை மேற் கொள்வதற்கான வாய்ப்புகள் கிடைக்கும்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையினர் படிப்படியான வளர்ச்சியைக் காண்பீர்கள். வருமானம் நன்றாக இருப்பதால் ரசிகர்களுக்காகச் செலவு செய்வீர்கள். சக கலைஞர்களால் நன்மை அடைவீர்கள். புதிய வாகனங்களை வாங்கும் வாய்ப்பும் கிடைக்கும்.

**பெண்களுக்கு**

குடும்பத்தில் அமைதி நிலவும். வெளியூர் மற்றும் வெளிநாட்டிலிருந்து இன்பகரமான செய்திகள் வந்து சேரும். கணவரிடம் அனுசரித்து நடந்து கொள்வீர்கள். கணவரின் உறவினர்களோடு வீண் வாக்குவாதங்களில் ஈடுபட வேண்டாம்.

**மாணவர்களுக்கு**

மாணவமணிகள் படிப்பில் வெற்றி வாகை சூடுவீர்கள். மேலும் உங்கள் ஞாபக சக்தியும், அறிவாற்றலும் பெருகும். அதேநேரம் விளையாடும் நேரங்களில் கவனமாக இருக்கவும். பெற்றோர்களின் ஆதரவுடன் உங்களின் எதிர்காலக் கல்வித் திட்டங்களைச் செவ்வனே நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

அதிர்ஷ்ட எண்கள்: 2, 6, 9
அதிர்ஷ்ட திசைகள்: மேற்கு, தெற்கு
அதிர்ஷ்ட கிழமைகள்: திங்கள், வெள்ளி
அதிர்ஷ்ட மாதங்கள்: ஆடி, கார்த்திகை, பங்குனி
கவனமாக இருக்க வேண்டிய மாதங்கள்: ஐப்பசி, மாசி

# தலைமுறை தாய்மார்களுக்கான குழந்தை வளர்ப்பு

## குழந்தைக்காக இருங்கள்

இன்றைய உலகம் ஒரு சுயநலம் மிக்க உலகமாகவே மாறிவிட்டது. பெரும்பாலானோர் அவர்களை பற்றி மட்டும் தான் எண்ணுகிறார்கள். 'தான்' என்று வரும் போது, தங்களுக்குப் பிடித்தவர்களைப் பற்றிக் கூட அவர்கள் கவலைப்படுவதில்லை. ஆனால் குழந்தை என்று வந்துவிட்டால், அவர்களைத் தவிர இந்த உலகத்தில் முக்கியமானது என்று வேறு எதுவுமே இல்லை. அவர்கள் நலனுக்காக தான் இப்படி வேலை செய்கிறேன் என்று சொல்வதெல்லாம் ஏற்றுக் கொள்ள கூடியது அல்ல. உங்கள் குழந்தைக்கென எப்போதும் நீங்கள் இருக்க வேண்டும். இது அவர்களுக்கும் உங்களுக்குமான இறுக்கத்தை அவர்களின் மழலை பருவத்தில் இருந்தே அதிகரித்துவிடும்.

## குடும்பத்துக்கான நேரம்

ஒவ்வொருவரும் தங்கள் குடும்பத்துடன் குறைந்தது 3 மணி நேரமாவது ஒன்றாக செலவிட வேண்டும். எவ்வளவு வேலை பளு இருந்தாலும் கூட, இதனை செய்ய தவறக் கூடாது. இன்றைய தாய்மார்களும் தந்தைமார்களும் தங்கள் குழந்தைகளுடன் போதிய நேரத்தை செலவிடுமாறு பார்த்துக் கொள்ளுங்கள். வாழ்க்கையின் அடிப்படையை பற்றி குழந்தைக்கு சொல்லி கொடுக்க தாய் மற்றும் தந்தை என இருவருமே தேவை.

திருமணத்துக்குப் பின்னர் ஓர் ஆண்டு காலம் வரை தம்பதிகளுக்கு நடுவில் அன்னியோன்னியமும், காதலும் அளவுக்கு அதிகமாக இருக்கும். அவர்கள் வசிக்கும் வீடே அன்பால் காதலால் நிறைந்திருக்கும். ஆனால் உங்கள் வீடு குழந்தைகளால் நிறைந்திருக்கிறது என்றால், வீட்டின் ஒட்டு மொத்த சூழலும் மாறிவிடும். அப்போது வீட்டில் இருந்த சந்தோஷம் மேன்மேலும் அதிகரித்து ஆனந்தம் பெருகும். குழந்தைகள் துருதுருவென செய்யும் சேட்டைகளால் தான் நம் வீட்டுக்கே வெளிச்சம் உண்டாகிறது. அவர்கள் செய்யும் ஒவ்வொரு செயலும், மன நிறைவையும் மன நிம்மதியையும் அளிக்க தவறாது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளவும், வளர்க்கவும் தங்களின் பெற்றோர்களின் உதவியை நாடியது எல்லாம் அந்தக் காலம். பேரக் குழந்தைகளை நல்லபடியாக பார்த்துக் கொண்டு, அவர்களிடம் அதீத அன்பை பொழிவதே தாத்தா பாட்டிமார்களின் தலையாய கடமையாக இருந்தது. ஆனால் இப்போது காலம் மாறி விட்டது. இன்றைய தாய்மார்களோ, தங்கள் வேலைகளில் எப்போதும் மூழ்கி போய்விடுவதால், தங்கள் குழந்தைகளை வளர்ப்பதில் கோட்டை விட்டு விடுகிறார்கள். அதனால் இந்தப் பிரச்சினையைப் போக்க, இன்றைய தாய்மார்களுக்கு குழந்தை பராமரிப்பு பற்றிய சில ரிப்ஸ்களை நாங்கள் அளிக்க உள்ளோம். அவைகளை பார்த்து பின்பற்றி, உங்கள் பிரச்சினையை கொஞ்சம் கொஞ்சமாக நீங்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

## பணத்தின் முக்கியத்துவம்

பணத்தின் அருமை மற்றும் முக்கியத்துவத்தை பற்றி ஒவ்வொரு குழந்தையும் தெரிந்து கொள்ள வேண்டும். இன்றைய தாய்மார்கள் தங்கள் குழந்தைக்கு நாணயம் மற்றும் ரூபாயின் மதிப்பைப் பற்றி சொல்லி கொடுக்க வேண்டும். ஒவ்வொரு வயதை அடைந்ததும் தான் உண்ணும் சாக்லெட்டின் விலையை பற்றி கண்டிப்பாக குழந்தை தெரிந்து கொள்ள வேண்டும். இப்போதே இதை பற்றி உங்கள் குழந்தை கேட்கிறதா?

## சமுதாயத்தோடு ஒன்றி இருத்தல்

இன்றைய தலைமுறை தாய்மார்கள் விசேட தினங்களுக்குச் செல்லவும், நண்பர்களுடன் பொழுதை கழிக்கவும் அதிகமாக விரும்புகின்றனர். இருப்பினும் விருந்துக்குச் செல்லும் போது, குழந்தைகள் நிறைந்துள்ள விருந்துக்கே செல்ல வேண்டும். அதனால் மற்ற குழந்தைகளுடன் எப்படிப் பழகி நண்பர்கள் ஏற்படுத்தி கொள்ள வேண்டும் என்பதை உங்கள் குழந்தைகள் கற்றுக் கொள்வார்கள்.



## பெரிய கனவாக காணுங்கள்

பெரிதாக ஆன பின்பு என்னவாக ஆகப்போகிறாய் என்று உங்கள் 3 வயது குழந்தையைக் கேட்கும் போது, அதற்கு அவர்கள் அளிக்கும் பதில் கண்டிப்பாக உங்கள் முகத்தில் புன்னகையை உண்டாக்கும். இன்றைய தலைமுறை தாய்மார்களுக்கு குழந்தை வளர்ப்பதற்கான முக்கிய விசேட செய்தி இது. உங்கள் குழந்தையை பெரிதாக கனவு காண விடுங்கள். அந்த கனவு நிறை வேற அவர் களுக்கு அனைத்து விதத்திலும் பக்க பலமாக இருங்கள்.


திலகம்

## குழந்தைகளை ஊக்கப்படுத்துங்கள்

குழந்தைகளை ஊக்கப்படுத்துவது நீங்கள் பின்பற்ற வேண்டிய ஒரு முக்கியமானது குழந்தை வளர்ப்பு விசேட செய்தியாகும். இன்றைய தாய்மார்கள் தங்கள் குழந்தையை அதன் சின்ன வயதிலு ருந்தே ஊக்கப்படுத்த தொடங்க வேண்டும். இந்த ஊக்கம் அவர்களுக்குள் தன்னம்பிக் கையை வளர்த்து, அவர்க[illegible] சுய மதிப்பை வளர்த்துவிடும். இவ்வ[illegible] தான் குழந்தை வளர்ப்பு என்றில்லை. [illegible] னமும் கூட தாய்மார்கள் பின்பற்ற வே[illegible] டிய சில விசேட செய்திகளாக இருக்கத்[illegible] செய்கிறது. மேற் கூறிய விசேட செய்திக[illegible] பின்பற்றினால், உங்கள் குழந்தை [illegible] ஆரோக்கியமான மனநிலையுடன் வள[illegible]

# வர்ணம் தீட்டலாம் வாங்க...





# நம்பினால் நம்புங்கள்!

இரையைத் துரத்தும் சிறுத்தை, தரையில் கால் படாது காற்றில் இருக்கும் நிலையிலேயே, தன் திசையை மாற்றிக்கொள்ளும் திறமை படைத்தது.

சில ராணித்தேனீக்கள் வயதானவர்களைப் போல பிதற்றிக்கொண்டே இருக்கும்!

இங்கிலாந்திலுள்ள ஒரு நூலகத்தில் 288 ஆண்டுகள் கழித்து, அபராதம் செலுத்தி, ஒரு புத்தகம் திருப்பியளிக் கப்பட்டது. இது கின்னஸ் சாதனையாகவும் பதிவானது.

பிரமிடு போன்ற வடிவத்தில் கூட, ஜப்பானில் தர்ப்பூசணி பழங்கள் விளைவிக் கப்படுகின்றன.

தாய்லாந்து தலைநகர் பாங்காக்கின் அதிகாரபூர்வமான பெயரை ஆங்கிலத்தில் எழுதினால் 167 எழுத்துகள் வரும்!

ஒரே இரவில் வௌவால் 3 ஆயிரம் பூச்சிகளைக்கூட தின்னும்.



# கண்ணால் காண்பதும் பொய் காதால் கேட்பதும் பொய்

சீனாவில் ஓர் ஊரில் பத்து விவசாயிகள் இருந் தார்கள். ஒரு நாள் அவர்கள் தத்தம் நிலங்களில் உழவு வேலை செய்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது வானம் இருட்டிக் கொண்டு வந்தது. பயங்கர மின்னலுடன் இடி இடித்தது. பயந்து போன அவர்கள் பக்கத்தில் இருந்த ஒரு பாழடைந்த மண்டபத்தில் ஓடி ஒளிந்து கொண்டனர். வெகுநேரமாகியும் மின்னல் வெட்டுவதும் இடி இடிப்பதும் நிற்கவில்லை. அவற்றின் உக்கிரம் வேறு அதிகரித்துக் கொண்டே போனது. பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்த விவசாயி களில் ஒருவன் 'நம்மிடையே ஒரு மகாபாவி இருக்கிறான். அவனைக் குறி வைத்துத்தான் கடவுள் இடியையும் மின்னலையும் ஏவியிருக்கிறார். அந்தப் பாவியை வெளியே அனுப்பிவிட்டால் மற்றவர்கள் பிழைத்துக் கொள்ளலாம்' என்று சொன்னான். மற்றவர்கள் இதனை ஆமோதித்தார்கள். இத்தனை பேரில் அந்தப் பாவியை எப்படி அடையாளம் கண்டு கொள்வது என்று விவாதம் நடந்தது. விவாதத்தின் முடிவில் தீர்ப்பைக் கடவுளிடமே விட்டு விடுவது என்று முடிவாயிற்று. அதன் படி அனைவரும் தத்தம் தொப்பிகளைக் கையில் பிடித்துக் கொண்டு தொப்பியை மழையில் நீட்டுவது என்று முடிவாயிற்று. அனைவரும் தத்தம் தொப்பி களை மழையில் நீட்டினர். பயங்கரமான இடி முழக்கத்துடன் ஒரு மின்னல் வெட்டியது. அதில் ஒரு விவசாயியின் தொப்பி மட்டும் எரிந்து சாம்பலாகியது. மற்ற ஒன்பது விவசாயிகளும் 'இவன்தான் பாவி. இவனை முதலில் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளு' என்று கத்திக் கொண்டே அவன் மேல் பாய்ந்தனர். அந்த விவசாயி கெஞ்சிக் கதறி தான் அப்பாவி என்று மன்றாடினான். மற்றவர் யாரும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அவனை பலவந்தமாகக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி னர். அவன் கதறிக் கொண்டே மழையில் ஓடினான். அப்போது அதி உக்கிரமாக ஒரு மின்னல் தாக்கி இடி இடித்தது. ஓடிக்கொண்டிருந்த விவசாயி அதிர்ச்சியில் உறைந்து நின்று விட்டான். சற்று நேரத்தில் நிலைக்குத் திரும்பி மண்டபத்தைத் திரும்பிப் பார்த்தான். மண்டபத்தில் இடி விழுந்து நொறுங்கிக் கிடந்தது. ஒரு புண்ணியவானின் புண்ணிய பலத்தில் தப்பித்திருந்த ஒன்பது விவசாயிகளும் அவனை வெளியே தள்ளிப் பாதுகாப்பை இழந்து பரிதாபமாகக் கருகிச் செத்துப் போய் விட்டனர். கண்ணால் காண்பதும் பொய். காதால் கேட்பதும் பொய். தீர விசாரித்துத் தெளிவதே மெய்.


## திருமண எழுத்து வாழ்த்துக்கள்



நீதிராசா ரேணுகா
(B.B.A Special) (B.Sc)

வைகுந்தநாதன் நீதிராசா (B.B.A Special முன்னாள் பல்கலைக்கழக பட்டதாரியும் தற்போது பிரான்சில் கடமையாற்றுபவரும்) வர்ணகுலசிங்கம் - ரேணுகா (BSc Chemistry பட்டதாரியும்) இருவருக்கும் சென்னையிலுள்ள அம்பிகா இம்போரியம் திருமணமண்டபத்தில் கடந்த (08.04.2015) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் திருமண எழுத்து நிறைவேறியது.

எனது மகனுக்கு யாழ்ப்பாணத்திலுள்ள திருமண இயக்குநர்கள் பல வருடகாலமாகப் பாடுபட்டும் திருமணம் பொருந்தவில்லை எனினும் குறிப்பாக சர்வதேச திருமணசேவை இயக்குநர் தட்செணாமூர்த்தி அவர்கள் மிகவும் எனது மகனுக்காகப் பாடுபட்டவர். முன்னாள் திருமண சேவையில் பணியாற்றிய சுஜாதா, கார்த்திகா, தர்மகுலசிங்கம் தனம்செயம் எல்லோருக்கும் எனது இதயம் கனிந்த நன்றியை நானும் எனது மகனும், மருமகளும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அத்துடன் எனது மகனின் திருமணத்தில் கலந்து கொண்ட எல்லோருக்கும் தொலைபேசி மூலம்வாழ்த்துத் தெரிவித்தவர்களுக்கும் திருமணசேவையில் உள்ளவர்கள் அனைவருக்கும் எங்களுடைய மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**புத்தர், இயேசு, சாமி ஆசிபெற்று வாழ**

**வாழ்த்துபவர்கள்**

**இருவீட்டாரும்.**

வர்ணகுலசிங்கம் கனகேஸ்வரி
புதுக்கோட்டை,
திருச்சி.

வைகுந்தநாதன்
(அரச ஓய்வு பெற்ற ஓய்வூதியர்)
இலங்கை சமாதான நீதவான்
வடமராட்சி, கரவெட்டி, இலங்கை


# மிகப் பெரிய மிருகக்காட்சி சாலை



உலகிலேயே மிகப் பெரிய மிருகக்காட்சி சாலை தென்னாபிரிக்காவில் 'டிரான்ஸ்வா' என்ற இடத்தில் இருக்கிறது. இதன் பெயர் க்ருகர் நேஷனல் பார்க் என்பதாகும். இது 12,442 சதுர கி.மீ.பரப்பளவு கொண்டது. இதில் சுமார் ஆயிரம் யானைகளும், 250 ஒட்டகங்களும், 600 காட்டெருமைகளும் 500 சிங்கங்களும் இருக்கின்றன. மேலும் பலவகையான 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விலங்குகள் இருக்கின்றன. இந்த மிருகக்காட்சி சாலையைச் சுற்றி 448 கி.மீ. நீளத்திற்கு வாகனங்கள் போகக் கூடிய அளவிற்கு அகலமான சாலைகள் அமைக்கப் பட்டுள்ளன. இந்த மிருகக்காட்சி சாலையில் மிருகங்கள் எவ்வித இயற்கை சூழ்நிலையில் இருந்தனவோ அதே மாதிரி இருக்கும் படியாக சூழலை உருவாக்கி யிருக் கிறார்கள். அனேக விலங்குகள் சுதந்திரமாக சுற்றி வரும்படி திறந்த வெளியில் விட்டிருக்கிறார் கள். இவை பார்வையாளர்களை எந்த விதத்திலும் தீங்கு செய்யாத வண்ணம் வடிவமைத்திருக் கிறார்கள்.

## காணிகள்விடுவிப்பு கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 30
வலி.வடக்கின் அடுத்த கட்டக் காணி விடுவிப்பு தொடர்பில் யாழ்.மாவட் டச் செயலகத்தில் நேற்று நடைபெற விருந்த கூட்டம் ஒத்திவைக்கப்பட் டுள்ளது. இந்தக் கூட்டம் காரணம் எதுவும் குறிப்பிடப்படாமல் இரண்டாவது தடவையாகவும் ஒத்திவைக் கப்பட்டுள்ளது.
வலி.வடக்கின் அடுத்த கட்ட காணி விடுவிப்பு மற்றும் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் புனர்வாழ்வு நடவடிக் கைகள் தொடர்பில் ஆராய்வதற்காக, மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் மற்றும் மீள்குடியேற்ற அதிகார சபையின் தலைவர் ஆகி யோர் பங்கு பற்றும் கூட்டம் மாவட் டச் செயலகத்தில் நேற்றையதினம் நடைபெற ஏற்பாடாகியிருந்தது.
ஆனாலும் குறித்த கூட்டம் ஒத்தி வைக்கப் பட்டுள்ள தாகத் தெரிவிக் கப்படுகின்றது. ஒத்தி வைக்கப்பட்டமைக்கான காரணம் குறித்து எதுவும் தெரிவிக் கப்பட வில்லை.
இதேவேளை, இந்தக் கூட்டம் முதலில் கடந்த 27 ஆம் திகதி திங்கட்கிழமை மாவட் டச் செயலகத்தில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டு பின்னர் அது ஒத்திவைக்கப் பட்டு நேற்று நடைபெற இருந்தது.
இந்த நிலையிலேயே இரண்டாவது தடவையாகவும் குறித்த கூட்டம் ஒத்தி வைக்கப் பட்டுள்ளது. காணி விடுவிப்பு தொடர்பில், முப்படைத் தளபதிகளுடன் கொழும்பில் கலந் துரையாடல் அண்மையில் இடம் பெற்றிருந்தது. இதில் அடுத்த கட்ட விடுவிப்பு தொடர்பில் பேச்சுக்கள் இடம்பெற்றிருந்தன.
இதேவேளை, குறித்த கலந்துரை யாடலில் யாழ்.மாவட்டத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்க வேண்டும் என்பதாலேயே ஒத்தி வைக்கப்பட்டதாக, நம்பத்தகுந்த வட்டா ரங் கள் தெரிவித்தன. (த-5)

## வெதுப்பகங்களில் தராசு கட்டாயம்

கொழும்பு, ஏப் 30
பேக்கரி மற்றும் பேக்கரி உற்பத்தி செய்யும் இடங்களில் தின்பண்டங் களின் நிறையை நுகர்வோர் அறிந்து கொள்வதற்காக அவ்வாறான இடங்களில் தராசு வைக்கப் படுவது கட்டாயமாகும் என்று நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்துள்ளார்.
இந்தச் சட்டம் பேக்கரி உற்பத்திப் பொருள் களை விற்பனை செய்யும் நடமாடும் நிலையங்களுக்கும் கட்டாயமாக்கப்படும் என் றும் அவர் தெரிவித்தார்.
பல்வேறான நிறைகளில் பாண் விற்பனை செய்யப்படுவதனால் அதற்கேற்றவகையில் விலைகளை நிர்ணயிக்குமாறு நுகர் வோர் கோரிக்கை விடுத்துள்ளனர் என் றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
நாட்டில் நடைமுறையில் இருக் கின்ற சட் டத்தின் பிரகாரம் ஒரு இறாத்தல் பாணின் நிறை 450 கிராம் ஆகும் என்பதுடன் அதன் விலை 54 ரூபாவாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். (த)

## சிவஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்களின் மறைவுக்கு முதலமைச்சர் அஞ்சலி

காரைநகர் மூதறிஞர் சிவஸ்ரீ கணபதீஸ் வரக் குருக்களின் இழப்பு சைவ உலகத் திற்கு பேரிழப்பு என வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித் துள்ளார். கணபதீஸ்வரக் குருக்களின் இழப்புத் தொடர்பில் அவர் வெளியிட் டுள்ள அஞ்சலி அறிக்கையிலேயே மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும் அந்த அறிக்கையில்,
கணபதீஸ்வரக் குருக்கள் எண்ணற்ற நூல் களின் ஆசிரியர். அரிய பல நூல்களை அழிய விடாது அச்சில் பதிப்பித்த ஆஜா னுபாவர். அளவற்ற அறப் பணிகளில் ஈடு பட்ட அன்புமனம் படைத்த அறிஞர் திரு வாசகத்தின் மீது ஆழ்ந்த அறிவையும் பக்தி யையும் கொண்டிருந்தவர். பலருக்கு வழி காட்டியாகவும் வளந்தரு அறிவுரை கள் வழங்கிய வல்லவராகவும் திகழ்ந்து இறை யடி சேர்ந்துள்ளார்' எனக் குறிப்பிட்டுள் ளார். (த-10)

## வடக்கு - இராமேஸ்வரம் கப்பல் சேவை வேண்டும்

### கோருகிறார் அமைச்சர் டெனீஸ்வரன்

யாழ்ப்பாணம், ஏப். 30
இலங்கையின் வடபகுதிக்கும் – இந்திய இராமேஸ்வரத்துக்கும் இடையே கப்பல் சேவை ஆரம்பிக் கப்பட்டால் வடக்கு மாகாணம் நன்றாக வளர்ச்சி அடையும். வேலைத் திட்டங்கள் எதிர்காலத்தில் வளர்ச்சி யடையும். எனவே அதற்கு இந்தப் பாதை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று வடமாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.
வடமாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் கிராம அபி விருத்தித் திணைக்களத்தைச் சேர்ந்த 27 பேருக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு யாழ்.பொது நூலகத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் அதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்:–
கப்பல் சேவை மாத்திரமன்றி ஏனைய சேவைகளும் ஆரம்பிக்கப்படுமாக இருந்தால் வடக்கு மிக விரைவில் வளர்ச்சியடையும். அதற்கு திணைக் களத் தலைவர்களிடமும் அரசியல் வாதிகளிடமும் ஒற்றுமை ஏற்பட வேண்டும். கடந்த காலத்தில் பல இழப்புக்களைச் சந்தித்திருக்கிறோம். இனிமேல் பிரச்சினைகள் இன்றி ஒற்றுமையாகச் செயற்படவேண் டும். சமய, இனப் பிரச்சினைகள் ஏற்படுமாக இருந்தால் அடுத்த தசாப் தங்கள் வரை தொடர வாய்ப்புள் ளது. ஆகவே தூர நோக்கில் அனை வரும் செயற்படவேண்டும்.
அரச சேவையில் உள்ளவர்கள் அரச சொத்துக்களைப் பராமரிப்ப தில் உள்ள குறைபாடுகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அரச சொத்துக் களைப் பராமரிப்பதில் நாம் எடுக் கின்ற கவனம் குறைவாக உள்ளது. ஏனோ அது பொதுச் சொத்து என்ற அடிப்படையில் அவற்றை உதா சீனம் செய்யப்படுகிறது. அல்லது முறையற்ற விதத்தில் பராமரிக்கப் படுகிறது.
சொத்துக்கள் அனைத்தும் அரச சொத்துக்களாக இருப்பினும் அது எமது வரிப்பணத்தில் இருந்து கொள்வனவு செய்யப்படுகின்றன என்பதனை நாம் அனைவரும் ஞாப கத்தில் வைத்திருத்தல் வேண்டும். அவற்றுக்கான வரி மீண்டும் எம்மை நோக்கி வருகிறது. நியமனம் பெறு பவர்களில் அநேகமானோர் சாரதி களாகவும் பொறுப்பு மிக்கவர்களா கவும் உள்ளனர். ஆகவே அரச சொத்துக்களை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும். அதனூடாக திணைக்களத்துக்கும், வடமாகா ணத்துக்கு முன்னுதாரணமாக இருக்கவேண்டும்.
விருப்பமில்லாமல் வேலை செய்வ தனால் எதனையும் சாதிக்க முடி யாது. எனவே திணைக்களத்துக்கு விசுவாசமாகப் பணி புரிய வேண் டும். பிரதம செயலாளரின் அர்ப் பணிப்பு, அரச சேவை மீதான விருப்பம் அவரை இந்தப் பதவிக்கு உயர்த்தியுள்ளது. எமது மாகாணம் பின்னோக்கிய நிலையில் காணப் படுகிறது. எதிர்காலத்தில் இந்த நிலை மாற வேண்டும் என்று தெரி வித்தார். (த-4)

## அம்பாந்தோட்டை மேயர் எராஜ் பெர்னாண்டோ கைது

கொழும்பு, ஏப். 30
அம்பாந்தோட்டை மேயர் எராஜ் பெர்னாண்டோ கைது செய்யப் பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரி வித்துள்ளார்.
2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக் கப்பட்டிருந்த ஒருவரைத் தாக்க முயற்சி செய்த குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
எராஜ் பெர்னாண்டோ அம்பாந் தோட்டை நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறி னார்.
மஹிந்தவின் ஆட்சியின்போது, அம்பாந்தோட்டைக்குச் சென்ற ஐக்கிய தேசியக் கட்சியினரை நோக்கித் துப்பாக்கியுடன் ஓடிவந்து எராஜ் பெர்னாண்டோ அச்சுறுத்தல் விடுத்திருந்தார்.
எனினும் அது விளையாட்டுத் துப்பாக்கி என மேயர் எராஜ் பெர் னாண்டோ தெரிவித்திருந்தார் என் பது குறிப்பிடத்தக்கது. (த)

## தந்தையின் கொலை; நியாயம் கிடைக்கும்

### ஹிருணிகா நம்பிக்கை

எனது தந்தையின் கொலை தொடர்பில் நியாயம் கிட்டும் என மேல் மாகாணசபைஉறுப்பினர்ஹிருணிகாபிரேமச்சந்திர தெரிவித்துள்ளார். பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர கொலை தொடர்பிலான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எனினும் இந்த வழக்கு எதிர்வரும் 22ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.
இந்த நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொலன்னாவத் தொகுதி அமைப்பாளர் பதவியை வழங்கினால் ஏற்றுக்கொள்வேன் என ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார். பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரன் தொடர்பான வழக்கு விசாரணையின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (த)

### கண்ணீர் அஞ்சலி

திரு.கந்தையா கந்தவேள்
(நிர்வாக உத்தியோகத்தர் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்)



எமது திணைக்களத்தில் கடமையாற்றி 28.04.2015 சிவபதம் அடைந்த திரு.கந்தையா கந்தவேள் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

ஆணையாளர் மற்றும் உத்தியோகத்தர்கள்
நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்
வடமாகாணம்

### கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் செல்வி. கந்தையா செல்வநிதி அவர்களின் அன்புத் தந்தையார்

திரு. கணபதி கந்தையா

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்
தென்மராட்சி

பிரதேச செயலக உத்தியோகத்தர்
நலன் புரிச்சங்கம்

### அராலியில் உதித்து அராலி ஆவரம்பிட்டி அம்பாளை ஒளிர வைத்த உத்தமருக்கு கண்ணீர் அஞ்சலி



சுப்பிரமணியம் செந்தில்நாதன்
(ஓய்வு பெற்ற அதிபர் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி, தர்மகர்த்தா, அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீமுத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்)

அன்னாரின் பிரிவால் நாமும் மிகுந்த துயர் அடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அராலி ஆவரம்பிட்டி அம்பாள் 7 ஆம் திருவிழா உபயகாரர்கள் சார்பாக நா. பத்மராசா

### 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் நாகலிங்கம் தர்மகுலசிங்கம்
(பிரபல வர்த்தகர் குணம்)

தோற்றம்
13★06★1959
மறைவு
29★04★2007

திதி:துவாதசி



கண்ணோடு கண்ணினை நோக்கி காதல் மணம் புரிந்து - நாம் கண்ணியமாய் வாழ்வை நடத்தி வரும் வேளை காலனவன் என வாழ்வில் குறிவைத்தான் என் செய்வேன் நான் - என் மனம் ஆறவில்லை எட்டாவது ஆண்டில் அப்பா என்ற அன்பு மொழியால் அழைக்க நீங்கள் இல்லாமல் நிதம் நிதம் தூண்டில் அகப்பட்ட மீனாய் துடிக்கின்றோம் அப்பா.....! நீங்கள் பெற்றெடுத்த பிள்ளைச் செல்வங்கள் நால்வரும் என்றும் மாறாத நினைவுகளுடன்

மந்துவில் மேற்கு கொடிகாமம் **குடும்பத்தினர்.**

### மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

குழந்தையாக 05 . 05 . 1931



தெய்வமாக 03 . 05 . 2012

அமரர் தாமோதரம்பிள்ளை கந்தவனம்

மூன்றாண்டு ஆனாலும் ஓயுமோ உம் நினைவு - எம் ஊனோடும் உணர்வோடும் ஒன்றாய்க் கலந்த உத்தமரே வேருடே நீர் சுரந்து விழுதுகளைத் தாங்கி நின்றீர் வேண்டுவன வெல்லாம் வேண்டாமலே விரும்பி ஈந்தீர் மறைந்தாலும் நிறைந்திருக்கும் நிஜமான நெஞ்சங்கள் மனதின் துயர்தனை சொல்ல இல்லையே வார்த்தைகள்...!

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## நீதியமைச்சிடம் மன்னிப்பு கோருகின்றார் பரணகம

யாழ்ப்பாணம், ஏப். 30

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு, ஜனாதிபதியிடம் கையளித்த இடைக்கால அறிக்கை தொடர்பாக விடுத்த ஊடக அறிக்கையில் நீதி அமைச்சு தொடர்பில் தெரிவித்த விடயத்துக்காக, நீதி அமைச்சிடம் மன்னிப்புக் கோருவதாக, ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியிடம் இரண்டு வாரங்களுக்கு முன்னர், காணாமற்போனோர் தொடர்பில் முன்னெடுத்த விசாரணையின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. குறித்த இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை உள்ளடக்கி, ஊடகங்களுக்கு அறிக்கை ஒன்றை, காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு விடுத்திருந்தது.

அந்த அறிக்கையில், தடுப்பில் உள்ளவர்கள் – அகதி முகாம்களில் உள்ளவர்கள் – சிறைச்சாலைகளிலுள்ளவர்களது விவரங்களை, ஆணைக்குழு நீதி அமைச்சிடம் கோரியதாகவும், அதற்கு உரிய பதில் நீதி அமைச்சிடம் இருந்து கிடைக்கப் பெறவில்லை எனவும், ஆணைக்குழுவின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து எந்தவொரு கோரிக்கையும் நீதி அமைச்சுக்கு விடுக்கப்படவில்லை என்றும், ஊடக அறிக்கையில் தவறாக நீதி அமைச்சின் பெயர் பயன்படுத்தப்பட்டமைக்காகவும் நீதி அமைச்சிடம் மன்னிப்புக் கோருவதாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம தெரிவித்துள்ளார். (த-5)

## போதையில் எரிந்தவர் சாவு

யாழ்ப்பாணம், ஏப். 30

மது போதையில் தனக்குத்தானே மண்ணெண்ணெய்ஊற்றித்தீமூட்டிக் கொண்டவர் வைத்திய சாலையில் சிகிச்சைபயனளிக்காதுஉயிரிழந்தார். செம்மணி வீதி கல்வியங்காட்டில் கடந்த 22 ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த நடராஜா ரஜினிகாந் (வயது 35) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். (த-4)

## புதிய கட்சி அமைக்க பலசேனா தீர்மானம்

புதிய அரசியல் கட்சி ஒன்றை அமைப்பதற்குப் பொதுபலசேனா அமைப்பு தீர்மானித்துள்ளதாக அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதேஅவர்இவ்வாறுகூறியுள்ளார். தூய்மையான சிங்கள பௌத்த கட்சி ஒன்றையே அமைக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். புதியகட்சியின்தலைவர்யார்என்பதையும் கட்சியின் பெயர் என்ன என்பதையும் இன்னும் தீர்மானிக்கவில்லை என அவர் கூறினார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுபல சேனா அமைப்பின் புதிய கட்சி போட்டியிடுவதற்கு அநேக வாய்ப்புகள் உள்ளதாகவும் ஞானசார தேரர் கூறியுள்ளார். இந்த அரசியல் கட்சிக்கு எந்த ஒரு அரசியல்வாதியையோ வேறு கட்சிகளையோ இணைத்துக் கொள்ளப் போவதில்லை என வும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த)

# அடுத்த தேர்தலில் மஹிந்த முடிந்தால் வெல்லட்டும்

### சவால் விடுக்கிறார் ரில்வின் சில்வா

கொழும்பு, ஏப். 30

அரசியல் ஆசை இருந்தாலும் மக்களின் ஆதரவு இன்றி மஹிந்த ராஜபக்ஷவினால் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற முடியாது. முடிந்தால் அடுத்த தேர்தலில் மஹிந்த போட்டியிட்டு வென்று காட்டட்டும் என்று மக்கள் விடுதலை முன்னணி சவால் விடுத்துள்ளது.

கடந்த ஆட்சியின் ஊழல் மோசடிகளை மக்கள் நன்கு அறிந்துள்ளனர் என்றும் மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்தது.

தான் தேர்தலில் போட்டியிட்டால் வெற்றி பெறுவேன் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ள நிலையில் இது தொடர்பில் அக் கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, மஹிந்த ராஜபக்ஷவின் அரசின் இந்தப் பத்து வருட ஆட்சிக் காலத்தில் தேசிய ஒற்றுமையில் பெரும் விரிசல் நிலைமை உருவாகியது. மதக் கலவரங்களும் அடக்குமுறை செயற்பாடுகளுமே மேலோங்கிக் காணப்பட்டன. சிறுபான்மை மக்கள் மட்டுமின்றி சிங்கள மக்களும் பல சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டனர்.

நிறைவேற்று ஜனாதிபதியின் சர்வாதிகாரப் போக்கின் காரணமாக மக்கள் வெறுக்கும் நபராகவே இன்று மஹிந்த மாறியுள்ளார். கடந்த ஆட்சியில்செய்த தவறுகள், பொருளாதார மற்றும் வாழ்வாதார நெருக்கடிகள், அடக்குமுறைகள் என அனைத்தும் மக்கள் மத்தியில் ஆழமாக பதிந்துள்ளன.

மஹிந்தவின் அரச குடும்பம் செய்த மோசடிகள் அனைத்தும் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. இவ்வாறான தொரு நிலைமையில் மக்கள் மீண்டும் மஹிந்த மற்றும் அவரது குடும்ப அரசியலுக்கு ஆதரவு தெரிவிக்க மாட்டார்கள். எனினும் மஹிந்தவின் தோளில் பயணித்த ஒரு சிலர் இன்றும் அவரை வைத்து அரசியல் செய்ய முயற்சிக்கின்றனர். மக்களின் ஆதரவு இல்லாத இவர்கள் தமது அரசியலை தொடர்ந்தும் கொண்டு செல்லவே இவ்வாறாக முயற்சிக்கின்றனர். அதற்கும் மக்கள் இனி மேல் இடம் கொடுக்க மாட்டார்கள்.

எனவேமஹிந்த மீண்டும் அரசியலுக்கு வந்து அதிகாரங்களைக் கைப்பற்றும் முயற்சி இனியொரு போதும் நடக்கப் போவதில்லை. முடிந்தால் மஹிந்த ராஜபக்ஷ அடுத்த தேர்தலில் போட்டியிட்டு வென்று காட்டட்டும்–என்றார். (த)


உதயன்
advt@uthayan.com
0215671111



**பதவி வெற்றிடம்**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பொதுச்சேவை நிறுவனமொன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பொது முகாமையாளர்
2. நிர்வாக அதிகாரி
3. கணக்காளர்

முன் அனுபவத்துடன் அர்ப்பணிப்புடன் செயற்பட முன்வருவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம் நியாயமான வேதனம் வழங்கப்படும் 08.05.2015 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்

நிர்வாகி
201/6, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்



**அக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்**



[illegible] 02.05.2015 [illegible]
[illegible]
விஞ்ஞான ஆசிரியர் S.L.T.S-I

விஞ்ஞான ஆசானாய் விண்ணோங்கு புகழ் கொண்டு
இஞ்ஞாலம் செழித்திட வேபணி செய்தவரே
வைத்தியராய் தாதியராய் ஆசிரியராய் என இன்னும்
விந்தை மிகு புதுமை கொண்டே நின் சீடர்கள்
சிந்தையினித்திட வாழ வழி காட்டியவரே
பாசமிகு மாமனாய் எமக்கும் வழிகாட்டிய பெரியவரே
பணி நிறைவு நன்னாளில் நின்னைப் பாராட்டி
வாழ்த்துவதால் பெருமை கொண்டோம் சிறப்புக்கள்
பல பெற்றே நின் குடும்பத்தினரோடு
சீராய் வாழ்க! வாழ்க வாழியவே பல்லாண்டு

உயர் திரு.
செல்லையா-செல்வராஜா
விஞ்ஞான ஆசிரியர்-S.L.T.S-I
லிங்கநகர்,
திருகோணமலை.

வாழ்த்துவோர்
[illegible]



**விற்பனைக்குண்டு**

வீட்டிற்கு அடிக்கப்பட்ட வெள்ளை நிற போமிக்கா பலகைகள் விற்பனைக்குண்டு பார்வையிட விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்

தொடர்பு:0752094795



**தொலைந்துவிட்டது**

வரணி மாசேரி யோகேஸ்வரன் தேவசுதன் ஆகிய எனது சாரதி அனுமதிப்பத்திரம் வரணியில் இருந்து பருத்தித்துறை செல்லும் வழியில் தவறிவிட்டது தயவு செய்துதொடர்கொள்ளவும்

தொலைபேசி:0776965050



**இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி நடத்தும் இயல் இசை நாடக விழா - 2015**
**இடம்: இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி கலையரங்கம்**
**காலம்: 30.04.2015 - 04.05.2015 நேரம் : பி.ப 4.00 மணி**

தலைவர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் (பிரதி அதிபர் கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

**30.04.2015 முதலாம் நாள் பிரதம விருந்தினர்**
திரு.பா.செந்தில்நந்தனன் (பிரதேச செயலர் நல்லூர்)
நாச்சிமார் கோவிலடி இராஜேஸ்வரி குழுவினர வழங்கும் மங்கல இசை

**நாதஸ்வரம்**
திருமதி இராஜேஸ்வரி சுந்தரலிங்கம்
திருமதி சோபனா பாலகிருஸ்ணன்

**தவில்**
திருமதி புஸ்பராணி
திருமதி செல்வநாயகம்

**மங்கல விளக்கேற்றல்**
திருமதி நீலலோஜினி தர்மகுலசிங்கம் (தலைவர் : றோட்டறிக் கிளப் ஆணையாளர் பெண்கள் சாரணியம் பணிப்பாளர் கோல்டின் ஈகிள் பிறைவேட் லிமிட்டெட்)
திரு.இ. கிருஸ்ணமோகன் (பணிப்பாளர்-ரட்ணம் என்ஜினியரிங்)
திரு.க.சோமசேகரன் (மகாராணி றெக்ஸ் றைஸ்)
தேவாரம் அ.ஆரபி இ.தாரணி ஸ்.தேவந்தி க.சாங்கவி (சாரங்கம் இசை மன்ற மாணவிகள்)
ஆசியுரை செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் (தலைவர் துர்க்கை அம்மன் தேவஸ்தானம் தெல்லிப்பளை)
வாழ்த்துரை திரு.அ.பஞ்சலிங்கம் (முன்னாள் அதிபர் யாழ் இந்துக்கல்லூரி)
காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் வழங்கும்

**இசை விருந்து**
பாட்டு செல்வி.லதாங்கி ராமகிருஷ்ணன்
வயலின் திரு.கி.பத்மநாதன்
மிருதங்கம் நல்லை G. கண்ணதாஸ்

**வேணுகானம்**
புல்லாங்குழல் திரு.சிவகுமாரன் கஜவதனன்
வயலின் திரு.கி.பத்மநாதன்
மிருதங்கம் திரு.சதா.வேல்மாறன்
முகர்சிங் திரு.க.நந்தகுமார்
திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியற்கல்லூரி மாணவிகள் வழங்கும் நாட்டியாஞ்சலி.
நாட்டுவாங்கம் : ஸ்ரீமதி சுதர்சுஷினி ஹரன்சன்
பாட்டு : திரு.தவநாதன் றொபேட்
மிருதங்கம் : திரு. S. துரைராஜா

**சொல்லாடுகளம்**
இன்றைய தமிழ் சினிமாவின் இரசனை மட்டம் ஏற்புடையதா?

**நெறிப்படுத்துனர்**
திரு.இ.சர்வேஸ்வரா (உதவி பதிவாளர் யாழ் பல்கலைக்கழகம்)

**கருத்துரைப்போர்**
திரு.வே.சிவராஜா (சமூக சேவை உத்தியோகத்தர்)
திரு.ந. ஐங்கரன் (முகாமைத்துவ உதவியாளர்)
திரு.சி.சஜீவன் (மக்கள் வங்கி உத்தியோகத்தர்)
திரு.J.P.A. ரஞ்சித்குமார் (சட்டவாளர்)
திரு.ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ (பல்கலைக்கழக மாணவன்)
திரு.ஜீ.சஜீவன் (பல்கலைக்கழக மாணவன்)

**கலைஞர்கள் கௌரவிப்பு**
**பிரதம விருந்தினர் உரை**
இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி வழங்கும்
ஸ்ரீமதி. பத்மினி செல்வேந்திரகுமார்
செல்வி.ரஜித்தா சின்னத்துரை
திரு.தவநாதன்றோபேட்
நல்லை.G.கண்ணதாஸ்
திரு.செல்வரட்ணம் ஆகியோரின் பங்களிப்புடன் நெறியாள்கை புலவர் முத்துராசரட்ணம்

**இலங்கைவேந்தன் இசைநடன நாடகம்**
நன்றியுரை

அனுசரணை : **செல்வ மஹால் அன்ட் ரெஸ்ரோரன்ட்**
**கே. கே. எஸ். றோட், பூநாரி மடத்தடி, யாழ்ப்பாணம்.**



**நடேஸ்வரக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கூட்டம்**

மேற்படி கூட்டம் எதிர்வரும் 03.05.2015 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். இக் கூட்டத்திற்கு சகல பழைய மாணவர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் . இக் கூட்டத்தில் பின்வரும் விடயங்கள் பற்றிக் கலந்துரையாடப் படவுள்ளது.

1. புதிய நிர்வாகக் குழு உறுப்பினர் தெரிவு
2. பாடசாலையை பழைய இடத்துக்கு கொண்டு செல்லல் தொடர்பான கலந்துரையாடல்
3. புதிய அங்கத்தவர்களை சேர்த்துக்கொள்ளல்
4. பாடசாலை அபிவிருத்தி தொடர்பான விடயங்கள்

அதிபர்



**சேவை நலன் பாராட்டு**



திருமதி
**வனஜா ரவீந்திரன்**
(Sp. Trd Home Science)
யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி சாவகச்சேரி

அகவை அறுபது நிறைவு பெற்று இன்று (30.04. 2015) சேவை யிலிருந்து ஓய்வு பெறும்
யா/ சாவகச் சேரி மகளிர் கல்லூரி ஆசிரியர்
திருமதி வனஜா இரவீந்திரன்
(sp. Trd Home Science)
அவர் களின் சேவை நலன்பாராட்டு இருபத்தெட்டு ஆண்டுகள்
யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் மனைப்பொருளியல் பாடத்தை மகிழ்வுடன் கற்பித்து ஓய்வு பெறும் எங்கள் ஆசிரியர் திருமதி வ. இரவீந் திரன் செப்பரும் பெருமை சேர்த்தே சேவையில் நிறைவு கண்டு அகவை அறுபது நிறைவு பெறும் இந்நாளில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

**கல்லூரி சேவையாளர் சங்கம்,**
**யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி**

# விசேட தேவையுடையோருக்கு தனி புனர்வாழ்வுச் செயற்திட்டம்

## வடக்கு புனர்வாழ்வு அமைச்சர் மருத்துவர் சத்தியலிங்கம்

வவுனியா, ஏப்.30

கடந்த 30 வருட சிவில் போரில் அகப்பட்டு அங்கவீனர்களாக்கப் பட்டு விசேட தேவையுடையவர்க ளாக அண்ணளவாக 42,000 பேர் வடக்கு மாகாணத்தில் வாழ்ந்து வருவதாக தரவுகள் உள்ளது. எனி னும் இவர்கள் தொடர்பான முழு மையான தரவு திரட்டுதல் எமது அமைச்சின் கீழுள்ள புனர்வாழ்வு மற்றும் சமூகசேவைகள் திணைக் களத்தினால் முன்னெடுக்கப்படவுள் ளதாக வடக்கு மாகாண சுகாதார சுதேச வைத்திய, சமூக சேவைகள், புனர்வாழ்வு, சிறுவர் நன்னடத்தை மற்றும் மகளிர் விவகார அமைச்சர் மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங் கம் தெரிவித்தார்.

அண்மையில் வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் இயங் கும் விசேட தேவையுடையவர்க ளுக்கான இணையும் கரங்கள் அமைப்பின் ஏற்பாட்டில் சந்திப் பொன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரை யாற்றிய அமைச்சர்,

இதுவரை மாகாண அமைச்சின்கீழ் புனர்வாழ்வு அமைச்சு என்றொரு அமைச்சு இயங்கவில்லை. கடந்த பெப்ரவரி மாதமே எனது அமைச் சின்கீழ் புனர்வாழ்வு மற்றும் சமூக சேவைகள் அமைச்சுகள் கொண்டு வரப்பட்டுள்ளது. இன்றைய யுத்தத் திற்கு பின்னரான சூழ்நிலையில் இவ்வாறாக புனர்வாழ்வு, சமூக சேவைகள் அமைச்சுகள் பொறுப் புடன் இயங்கவேண்டிய தேவை எழுந்துள்ளது. போரில் நேரடியாக வும் மறைமுகமாகவும் பாதிக்கப் பட்டவர்களில் குறிப்பாக சிறுவர் கள், பெண்கள், விசேட தேவைக் குட்பட்டவர்களுக்கான விசேடசெயற் திட்டங்களை முன்னெடுக்க வேண் டிய அவசியம் உணரப்பட்டுள்ளது. எனினும் தற்போது எம்மிடம் இவர் கள் தொடர்பான சரியான தகவல் கள் இல்லை. கடந்த அரசில் இவ் வாறானவர்களை சந்தித்து உரை யாடுவதற்கே அனுமதி இருக்க வில்லை. தற்போது சூழ்நிலையில் சிறிது மாற்றம் இருப்பதாக உண ருகின்றோம்.

பாதிக்கப்பட்டவர்களின் தேவை கள் வேறுபட்டதாகவுள்ளது. எனவே தேவை தொடர்பில் சரியான தரவு கள்திரட்டப்படுதல் வேண்டும். தரவு கள் திரட்டப்பட்டதும் முழுமை யான புனர்வாழ்வுச் செயற்திட்ட மொன்றை ஆரம்பிக்கத் திட்டமிட் டுள்ளோம்.

அண்மையில் வடக்கு மாகாணத் தில் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப் பட்டவர்களுக்கான விசேட மாதாந்த கொடுப்பனவு வழங்கும் செயற் திட்டமொன்றை எனது அமைச்சு ஆரம்பித்துள்ளது. அத்துடன் விரை வில் விசேட தேவையுடையவர்க ளுக்கான புனர்வாழ்வு மருத்துவ மனையொன்றை மாங்குளத்தில் ஆரம்பிப்பதற்கு எண்ணியுள்ளோம்.

தற்போது முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான விசேட மலசலகூடங்கள் அமைக்கும் பணி கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட் டங்களில் ஆரம்பித்துள்ளோம். இதற்கு புலம்பெயர் நாடுகளில் வாழும் எமது உறவுகள் நிதியுதவி வழங்கியுள்ளார்கள். எதிர்காலத் தில் எமது அமைச்சினூடாகவும் இந்த செயற்திட்டத்தை மாகாணத் தின் அமைத்து மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கவுள்ளோம் – என்றார்.

இந்த நிகழ்வில் வவுனியா பிரதேச சபையின் உபதலைவர் தணிகா சலம், இலங்கை வங்கியின் மன் னாள் முகாமையாளர் றோய் ஜெயக் குமார், இணையும் கரங்கள் அமைப் பின் தலைவர் மற்றும் 200ற்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண் டனர். (த)

# கடத்தப்பட்ட மாடுகளுடன் கைப்பற்றப்பட்டது லொறி

வாழைச்சேனை, ஏப். 30

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் கடந்த வியாழக்கிழமை காலை அனு மதிப்பத்திரம் இன்றி மாடுகளை ஏற்றி வந்த லொறியொன்று கைப்பற்றப் பட்டுள்ளதுடன் அதன் சாரதி வாழைச் சேனைப் பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல் லைப் பிரதேசமான றெதிதென்ன பிரதேசத்தில் இருந்து கல்முனைப் பகுதிக்கு லொறியில் மாடுகளை ஏற்றிச் செல்லும் வழியில் வாழைச் சேனை பொலிஸுக்கு முன்பாகக் கடமையிலிருந்த பொலிஸார் வாக னத்தைப் பரிசோதனை செய்துள்ள னர். இதன்போதே பத்து மாடுகளு டனும் ஒரு கன்றுக் குட்டியுடனும் லொறி கைப்பற்றப்பட்டுள்ளது. இத னையடுத்து லொறியின் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணை களை வாழைச்சேனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி என்.திப் புட்டுமுன தலைமையிலான குழு வினர் மேற்கொள்கின்றனர்.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## கஹவத்தையில் கூட்டு மேதினம்

பெருந்தோட்டத் தொழிலாளர் களின் நியாயமான சம்பள உயர் வையும் மலையக மக்களின் காணி, வீட்டு உரிமையையும் வலியு றுத்தியும், இலங்கையின் அனைத்து மக்களினதும் ஜனநாயக, மனித உரிமை களையும் வென்றெடுக் கவும் ஐக்கியப்பட்ட சுதந்திரமான இலங்கையை கட்டியெழுப்பவும் ஜனநாயக இடதுசாரி சக்திகளின் கூட்டு மே தின நிகழ்வு மே முதலாம் திகதி காலை 10 மணிக்கு கஹ வத்தை கூட்டுறவுச் சங்க மண்ட பத்தில் நடைபெறும்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவக்கொழுந்து முருகேசு



மாதகல் கோயிலடி அராலி தெற் கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாக வும் கொண்ட திருமதி சிவக் கொழுந்து முருகேசு நேற்று (29.04.2015) புதன்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முரு கேசுவின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற இராஜேஸ்வரி மற்றும் புஸ்ப ராணி, கந்தசாமி (ஜேர்மனி), புஸ்பமலர் ஆகியோரின் தாயாரும், ஏரம்பு, செல்வரத்தினம், சரோஜினி (ஜேர்மனி), சற்குணபாலன் ஆகியோரின் பாசமிகு மாமியும், சுந்தராசாவின் சிறிய தாயும், விக்னேஸ்வரி (கொழும்பு), கனேஸ்வரன், விக்னேஸ்வரன் (லண்டன்), ஜெகதீஸ்வரி, கணேஸ்வரன், சுபாசினி, கிருபாலினி, சுபாகரன் (லண்டன்), கிருபாகரன்(மொஸ்டோவா), தாஸ்மன் (ஜேர்மனி), தர்சிகா (ஜேர்மனி), சுமிதா (லண்டன்), சுஜிதா, யதுர்சன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2015) வியாழக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக அராலி தெற்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாதகல் கோயிலடி அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை 077 5016872

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி தூயஞான செல்வம் சுமதி



இருபாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பி டமாகவும் கொண்ட திருமதி தூயஞான செல்வம் சுமதி நேற்று(29.04.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் தூயஞான செல்வத்தின் (இலங்கை மின் சார சபை, சித்தன்கேணி) அன்பு மனைவியும் கிரிசா ளினி, காலஞ்சென்ற தர்மேஸ் மற்றும் கார்த்திகா ஆகி யோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற வீரகத்தி பிள்ளை மற்றும் குகமலர் தம்பதியரின் மகளும் காலஞ் சென்றவர்களான சுப்பையா – அன்னப்பிள்ளை தம்பதி யரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(30.04.2015) வியாழக்கிழமை முற் பகல் 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் இருபாலை கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

கேணிக்குளத்தடி,
இருபாலை கிழக்கு, கோப்பாய்.
0778439680

தகவல்:
சு.தூயஞான செல்வம்
(கணவர் – இலங்கை மின்சார சபை)

### திருமதி நாகம்மா சபாவதி



சாவகச்சேரி சங்கத்தனையைப் பிறப் பிடமாகவும் தற்போது காளிகோயில் ஒழுங் கை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா சபாவதி 27. 04.2015 திங்கட்கிழமை காலமாகிவிட் டார்.

அன்னார் சபாவதியின் அன்பு மனை வியும், காலஞ்சென்ற கந்தையா–செல்லம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ் சென்ற சின்னர்– பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மதன ராஜ் (சுவிஸ்) மற்றும் ஜெயந்தினி ஆகி யோரின் தாயும், வசந்தா (சுவிஸ்), பரம நாதன் (ஆனந்தன்) ஆகியோரின் பாசமிகு மாமியும், சன்யா, சதீஸ், சனோஜன் (சுவிஸ்), தர்ஷன், திவ்யநந்தன் ஆகியோரின்பேர்த்தியும், இராசம்மா, நாகம்மா (மணி – கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2015) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளி கோயில் வீதி,
சாவகச்சேரி.
077 9302285, 077 6687621

தகவல்:
கணவர் (சபாவதி)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இரத்தினம்மா சண்முகம்

அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம்மா சண்முகம் நேற்று (29.04.2015) புதன்கிழமை கால மாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சண்முகத்தின் (சங்கிலி சண்முகம்), அன்பு மனைவியும், பாலசுப்பிரமணியம் (கார்பாலு), பாலசரஸ்வதி, பாக்கியலட்சுமி, பாலச்சந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற செல்லம்மா, மோகனதாஸன், சிவானந்தகுமார், ரஞ்சினிதேவி (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற அஜந்தன், சுஜாதா, கவிதா, மாதிரன், மயூரன், மதராணி, மகிபன், மாசிலன், மதிசுகன், செந்தூரன், சௌந்தனன், கோகிலவரன், அபிராமி, ஜீவிசன், மேனியன், சஜிபன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2015) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குருவளை, அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

### பொன்னம்பலம் குகதாசன்



பூநகரி சித்தன் குறிச்சியைப் பிறப்பிடமாக வும் கனடா மேபிள் நகரை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் குகதாசன் (பூநகரான், யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவன், முன்னாள், தபாலதிபர் இலங்கை AIR CANADA ஊழியர், அரசியல் ஆய்வாளர், ஊடகவியலாளர்) 27.04. 2015 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஓய்வுபெற்ற வைத்தியகலாநிதி பொன்னம்பலம்–இராசம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர் களான நடராசா–சிந்தாமணி தம்பதியரின் அன்பு மருமகனும், தனலட்சுமியின் (மருந்தாளர், சென்றல் நேர்ஸிங் ஹோம்–1980) அன்புக் கணவரும், அபிராமி, தர்மினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகரத்தினம் (ஓய்வுபெற்ற வைத்தியகலாநிதி), சிறீஸ்கந்தராஜா (முன்னாள் உப அதிபர் யாழ். இந்து, பிரதேச சபைத் தலைவர், பூநகரி), காந்தராணி (கொக்குவில்), கதிரநாயகி (பூநகரி), காலஞ்சென்ற முருகதாஸ் மற்றும் முருகவேல் (அதிபர், சுவிஸ்பேர்ன் பாடசாலை, முன்னாள் அதிபர் ருக்பூட் பாடசாலை நுவரெலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் சீதாலட்சுமி (கோண்டாவில்), சண்முகலிங்கம் (கோண்டாவில்), மகேஸ்வரி (உரும்பிராய்), பஞ்சலிங்கம் (இணுவில்), இரத்தினசிங்கம்(ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"அன்பகம்" நாமகள் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்.
பா. அஞ்சனன் (மருமகன்)
077 3061615

### திருமதி மகேஸ்வரி சடாசிவம்



உடுவில் தெற்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சடா சிவம் நேற்று (29.04.2015) புதன்கிழமை கால மானார்.

அன்னார்காலஞ்சென்றவர்களான பொன்னு– செல்லம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர் களான நடராசா, சிவ கொழுந்து, மற்றும் அன்னம்மா, சின்னராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், புவனேஸ்வரி, இரத்தினபூபதி, நேசதுரை, தெய்வேந் திரம், இந்திராதேவி, சரஸ்வதி அகியோரின் பாசமிகு தாயும், முருகையா, கணபதிப்பிள்ளை, யோகேஸ்வரி, குணம், பாலசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

உடுவில் தெற்கு, சுதுமலை வீதி, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

# உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் டெனீஸ்வரன் உறுதி



யாழ்ப்பாணம், ஏப். 30

உள்ளூர் சுய தொழில் முயற்சியாளர்களின் கற்பூர உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் ஆலய குருக்களிடம் நேரடியாகப் பேசி உள்ளூர் கற்பூரங்களை வாங்குவதற்கு ஏற்ற ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்துள்ளார் வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன்.

வடமாகாண சபையின் பிரமாண அடிப்படையிலான அபிவிருத்தி நன்கொடை நிதியில் வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் கொக்குவில் மேற்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினால் அமைக்கப்பட்ட கற்பூர உற்பத்தி நிலையம் நேற்று திறந்துவைக்கப்பட்டது. கொக்குவில் மேற்கில் நடைபெற்ற மேற்படி நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கிராமங்கள் தோறும் அபிவிருத்தி ஏற்படுத்துவதைஇலக்காகக்கொண்டு செயற்பட்டு வருகின்றோம். குறிப்பாக உள்ளூரில் கிடைக்கக் கூடிய வளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் உற்பத்திகளுக்கு அதிகளவிலான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்கின்றோம். அந்த வகையில் கற்பூர உற்பத்தி நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தரம் உயர்வடைவதுடன் அதிகளவு வருமானத்தையும் தொழில் வாய்ப் புக்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாறு உருவாக்கப்படும் தொழிற்சாலைகளின் பூரணத்துவம் அதன் மூலம் கிடைக்கும் வருமானத்திலேயே தங்கியுள்ளது. எனவே கற்பூர உற்பத்தியில் ஈடுபடும் உற்பத்தியாளர்கள் துறை சார்ந்த தொழில் நுட்ப உத்தியோகத்தர்களை அணுகிப் பெற்றுக்கொள்ளும் ஆலோசனைகளுக்கு அமைவாக உயர்ந்த தரத்துடன் கூடிய கற்பூரங்களை உற்பத்தி செய்யவேண்டும்.

திறந்த சந்தையில் உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கைகளுக்குப் போட்டித் தன்மை நிலவுகின்றது. எனவே பயிற்சி பெற்று உற்பத்தியில் ஈடுபடுவது அவசியமாகின்றது. அனைத்துத் துறைகளையும் வெற்றி கொள்வதற்கு ஒற்றுமை அவசியம். இன மத பேதமின்றி நாம் தூர நோக்கோடு செயற்படவேண்டும்– எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், அ.பரஞ்சோதி, வடமாகாண எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராஜா, கல்வி அமைச்சின் செயலாளர்கள், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன், உதவி அரச அதிபர் திருமதி வ.ரூபினி உட்படப் பலர் கலந்து கொண்டனர். (த–10)

# இன, மத பேதங்கள் கடந்து செயற்படுபவர் டெனீஸ்வரன்

## புகழாரம் சூட்டினார் வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் தவராஜா

யாழ்ப்பாணம், ஏப். 30

தேவை ஏற்படும் நிலையில் வேறுபாடுகளை மறந்து செயற்பட வேண்டும். இன மத பேதங்கள் கடந்து சேவையாற்றுதலுக்கு வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்திஅமைச்சர்டெனீஸ்வரன் குறிப்பிட்டுக் கூறக் கூடியவர் என புகழாரம் சூட்டியுள் ளார் வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராஜா.

நேற்று கொக்குவிலில் நடைபெற்ற கற்பூர உற்பத்தித் தொழிற்சாலைத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்,

தேவைகள் ஏற்படும் பட்சத்தில் வேறுபாடுகளை மறந்து செயற்பட வேண்டும். கருத்து முரண்பாடுகள் ஏற்படும்போது அதனைக் கருத்தினால் வெல்லவேண்டும். அதற்கு அமைச்சர் டெனீஸ்வரன் முன்னுதாரணம். அவர் எந்தச் சந்தர்ப்பத்திலும் பேதங்கள் பார்ப்பதில்லை. தேவை ஏற்படும் பட்சத்தில் அனைவரிடமும் ஆலோசனை பெறுவார்.



தற்போது மத்திய மற்றும் மாகாண அமைச்சுக்கள் மக்களின் தேவைக்கு முதலிடம் கொடுத்து செயற்படுகின்றன. இதுதான் காலத்தின் தேவை. சுயதொழிலுக்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும். அடுத்து உடலாரோக்கியம் மற்றும் அறிவாரோக்கியம் என்பன முக்கியமானவை.சுயதொழில்வாய்ப்புத்தொடர்பான முன்மொழிவுகளை வழங்குங்கள். நாம் அவற்றை செயற்படுத்துவோம்–என்றார். (த–10)

# திருகோணமலையிலும் கூட்டமைப்பு மே தினம்

மூதூர், ஏப். 30

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேதின நிகழ்வுஇம்முறைதிருகோணமலையிலும் இடம் பெறவுள்ளது.

மேதின ஊர்வலமும் நிகழ்வும் தொடர்பாகதிருகோணமலைதமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் திருகோணமலை நகரசபையின் பொது நூலக கேட்போர் கூடத்தில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் குழுவின் தலைவருமாகிய சி.தண்டாயுதபாணி தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது மே தின ஊர்வலமானது மே தினத்தன்று மாலை 3.00 மணியளவில் திருகோணமலை சிவன் கோயிலடி சந்தியில் இருந்து ஆரம்பமாகி திருகோணமலை கடற்கரையில் உள்ள வெலிக்கடைத் தியாகிகள் அரங்கின் முன் நிறைவடைந்து அங்கே பிரதான நிகழ்வுகள் இடம் பெறும். இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரைகளும் இடம் பெறவுள்ளன.

இந்த நிகழ்விற்கு மூதூர், ஈச்சிலம்பற்று மற்றும் குச்சவெளி, தம்பலகாமம், கிண்ணியா, கன்னியா, சல்லி, சாம்பல்தீவு மற்றும் உப்புவெளி மற்றும் பட்டினமும் சூழலையும் அண்டியுள்ள பகுதிகளில் இருந்து கட்சியின் ஆதரவாளர்களும் பொது மக்களும் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிகழ்வுகள் தொடர்பான துண்டுப்பிரசுரங்கள் விநியோகமும் சுவரொட்டிகள் மற்றும் ஒலி பெருக்கி மூலமான அறிவித்தல்களும் திருகோணமலையில் பல்வேறு பகுதிகளில் காணப்படுகின்றன.

இந்நிகழ்வில் மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (த–40)

# கொழும்பில் கம்பன் விழா

கொழும்புக் கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழா நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பித்து 4ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும் விழாவில் ஸ்ரீ ஐஸ்வர்ய லக்ஷ்மி திருக்கோவிலிலிருந்து கம்பன் பட ஊர்வலம் நடைபெறவுள்ளதுடன் 'இராம நாடக கீர்த்தனை' பாகம் 2 மற்றும் 'திருவாசகம்' நூல் வெளியீடும் கம்பன் விழா இறுவட்டு வெளியீடும் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து அறக்கட்டளை விருது வழங்கல், பரிசளிப்பு, சமூக நிதி உதவி, நாட்டிய அர்ப்பணம் ஆகியவை நடைபெறவுள்ளன.

தொடர்ந்து வரும் தினங்களில் காலை 9.30 மற்றும் மாலை 5.30 மணிகளில் இலக்கியப் பேருரை, சுழலும் சொற்போர், அஞ்சலி அரங்கு, பட்டிமன்றம்,கருத்தரங்கு, கவியரங்கம், ஆய்வரங்கு, குறளரங்கு, ஆன்றோர் கௌரவம், வழக்காடு மன்றம் ஆகியவை நடைபெறவுள்ளதாகவும், ஆர்வலர்கள் கலந்து கொள்ளலாம் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த–10)

# அடுத்துள்ள போர் 20 ஆவது திருத்தம்

## மனோ கணேசன் கூறுகிறார்



கொழும்பு, ஏப். 30

நாடாளுமன்றத்தில் 19ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டு விட்டது. இந்தசரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சட்டவரைவு வாக்கெடுப்பில் கலந்து கொண்டு ஆதரவாக வாக்க ளித்த அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நாம் பாராட்டுகின்றோம். அதேவேளை 19 இன் முடிவுடன், 20 ஆவது திருத்தம் என்ற தேர்தல் முறை மாற்றப் போராட்டம் ஆரம்பித்து விட்டது என்பதை இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களைப் பிரதி நிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தேசிய நிறைவேற்று சபை உறுப்பினரும், ஜனநாயக மக்கள் முன்னணி தலைவருமான மனோ கணேசன்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாடு நேற்றுப் புதன்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இம்மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய மனோகணேசன்மேலும்கூறியதாவது:–

19ஐ விட, 20ஆவது திருத்தம் தொடர்பாகவே இந்நாட்டுச் சிறுபான்மை மக்கள் மிக அதிக கவனம் செலுத்த வேண்டும். 20ஆவது திருத்தம் என்ற பெயரில் எங்களைப் பெரும்பான்மை சக்திகள் சில ஏமாற்றப்பார்க்கின்றன. எங்களுக்கு உரிய பிரதிநிதித்துவங்களை உறுதி செய்யாத எந்த ஒரு திருத்தத்துக் கும் நாம் உடன்படப் போவதில்லை.

இந்தப் பிரச்சினையைக் குறைத்து மதிப்பிட வேண்டாம். இது வாழ்வா, சாவா என்ற எங்கள் உயிர்ப் பிரச்சினை. இவற்றை உறுதி செய்ய, இன்று நாம் நடத்தும் அரசியல் பேச்சுக்கள் பயனளிக்காவிட்டால், நியாயம் வேண்டி சத்தியாக்கிரகம் செய்ய முடிவு செய்துள்ளேன். அத்துடன் நீதியை தேடி நீதிமன்றம் செல்லவும் முடிவு செய்துள்ளோம். இதற்கு நமது மக்கள் ஆதரவளிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. நமது மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சிகளும், அரசியல் பேதங்களை மறந்து ஆதரவளிக்கும் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு.

சிறு மற்றும் சிறுபான்மை கட்சிகளின் சார்பாக எமது சொந்த தேர்தல் முறை திருத்த யோசனைகளை நாம் தற்சமயம் தயாரித்து வருகிறோம். அவற்றை எதிர்வரும் தினங்களில் ஜனாதிபதி, பிரதமர், தேர்தல் ஆணையாளர் ஆகியோரிடம் சமர்ப்பித்து நாம் பேச்சுக்களை நடத்த எண்ணியுள்ளோம். ஒட்டுமொத்த தமிழர் சனத்தொகையில் சுமார் ஐம்பது விகிதமானோரும், ஒட்டு மொத்த முஸ்லிம் சனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கினரும் தென்னிலங்கை மாவட்டங்களிலேயே வாழ்கின்றனர். ஆகவே ஏறக்குறைய 60 சதவிகித சிறுபான்மை மக்கள் தென்னிலங்கையில் வாழ்கின்றனர் என்பது புள்ளிவிவரம் சொல்லும் உண்மை ஆகும். தேர்தல் முறை மாற்றம் பிரதானமாகத் தேர்தல் தொகுதிக்கு ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையை கொண்டதாகும். வடக்கிலும், கிழக்கிலும் தமிழ், முஸ்லிம் மக்கள் கணிசமாக வாழும் தேர்தல் தொகுதிகள் பல இருக்கின்றன. ஆனால், வடக்கு–கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே நிலைமை அப்படி இல்லை.

எனவே தென்னிலங்கையில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு நியாயமான பிரதிநிதித்துவங்களை உறுதி படுத்தாத எந்த ஒரு தேர்தல்முறை மாற்றமும் இந்நாட்டுச் சிறுபான்மை மக்களுக்கு எதிரானதாகவே கருதப்படும். வடக்கு–கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் தமிழ், முஸ்லிம் மக்களே இந்தத் தேர்தல் முறை மாற்றச் செயற்பாட்டில் பெரும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர். நான் திரும்ப, திரும்பக் கூறி வரும் இந்த உண்மை இன்று உணரப்பட்டுள்ளதாக நம்புகின்றேன். இவை தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணியின் நிலைப்பாடு தெளிவாக உள்ளது.

இங்கே நாம் பெரும்பான்மை இனத்துடன் கலந்து வாழ்வதால் நமக்கு ஒன்றுக்கு மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரே தொகுதியில் தேர்வு செய்யப்படும் பல்–அங்கத்தவர் தொகுதிகள் தேவை. கடைசியாக 40 வருடங்களுக்கு முன்னர், தேர்தல் தொகுதி சீரமைப்பு நடைபெற்றது. அப்போது நாட்டின் சனத்தொகை 75 இலட்சம். இன்று அது 205 லட்சம். அப்போது குடியுரிமை, வாக்குரிமை இல்லாமல் இருந்த மலையக தமிழ்ப் பரம்பரையினர் இன்று வாக்களிக்கும் தகைமை பெற்றுள்ளனர்.

தென்னிலங்கையில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவங்களை உறுதி செய்ய கொழும்பு மத்தி, பேருவளை, ஹரிஸ்பத்துவ என்று மூன்று பல்–அங்கத்தவர் தொகுதிகள் உள்ளன. தமிழர்களுக்கு நுவரெலியா–மஸ்கெலியா பல்–அங்கத்தவர் தொகுதி மட்டுமே உண்டு. இவை போதாது. எனது மாவட்டமான கொழும்பில், மத்திய கொழும்புக்கு மேலதிகமாக வட கொழும்பு, தென் கொழும்பு என இன்னமும் இரண்டு பல்–அங்கத்தவர் தொகுதிகளை நான் கோரியுள்ளேன். கண்டி, பதுளை, இரத்தினபுரி, கம்பஹா மாவட்டங்களிலும் பல்–அங்கத்தவர் தொகுதிகள் அவசியம். நுவரெலியா–மஸ்கெலியா பல்–அங்கத்தவர் தொகுதி பிரிக்கப்பட்டு மஸ்கெலியா, ஹட்டன், கொட்டகலை, நுவரெலியா என்ற நான்கு தனித்தொகுதிகளாக பிரிக்கப்பட வேண்டும். நுவரெலியா மாவட்டத்தின் கொத்மலை, வலப்பனை, ஹங்குரன்கெத தொகுதிகள் இணைக்கப்பட்டு பல்–அங்கத்தவர் தொகுதியாக மாற்றப்பட வேண்டும்.– என்றார். (த)

# மஹிந்த மீதான தீர்ப்புகளை ஆராய விசேட குழு

வவுனியா, ஏப்.30

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நிர்வாகத்தின் கீழ் பெரும் சர்ச்சைகளைக் கிளப்பியிருந்த வழக்குகளின் தீர்ப்புக்களை ஆராய்ந்து பார்ப்பதற்காக விசேட குழு ஒன்றை நியமிப்பது தொடர்பாக அரசின் கவனம் திரும்பியுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர்கள் மூவரை இதுதொடர்பாக நியமிப்பதற்குத்திட்டமிடப்பட்டிருப்பதோடு மூன்று மாத காலத்துள் அவர்களிடமி ருந்து இதுகுறித்த அறிக்கை ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அரசின் உயர் மட்டத் தகவல் மார்க்கங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் சர்ச்சைகளைக் கிளப்பியிருந்த அந்த வழக்குகளை உயர் நீதிமன்றத்தின் முழுமைபெற்ற நீதியரசர்கள் ஆயமொன்றின் முன்னிலையில் மீளவும் விசாரணை செய்வதற்கு அமைந்துள்ள ஆற்றல் தொடர்பாகவும் கூட ஆராய்ந்து பார்க்குமாறும் குறித்த குழுவுக்கு தெரியப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (வ-22)

# நிர்வாகசேவைத் தரத்துக்கு திட்டமிடல் சேவையாளர்கள்

## வடக்கு மாகாண அதிகாரிகள் விசனம்

யாழ்ப்பாணம், ஏப்.30

வடக்கு மாகாண நிர்வாகத்துக்கு உட்பட்ட சில திணைக்களங்களில், இலங்கை நிர்வாக சேவைத் தரத்தினர் நியமிக்கப்பட வேண்டிய பதவிகளுக்கு, திட்டமிடல் சேவையைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். புதிய ஆளுநர் பொறுப்பேற்ற பின்னரும், குறித்த பதவிகளுக்கு இலங்கை நிர்வாக சேவைத் தரத்தினர் இன்னமும் நியமிக்கப்படாமலேயே இருப்பதாக, வடக்கு மாகாண அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

வடக்கு மாகாணத்தில், மோட்டார் போக்குவரத்து திணைக்களம், சிறுவர் நன்னடத்தை அபிவிருத்தித் திணைக்களம், கிராமிய அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றின் ஆணையாளர் பதவிக்கு இலங்கை நிர்வாக சேவைத் தரத்தைச் சேர்ந்தவர்களே நியமிக்கப்பட வேண்டும். ஆனாலும், குறித்த பதவிகளுக்கு திட்டமிடல் சேவையைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண சபை நிர்வாகத்தில் போதுமானளவு தகுதியுடைய இலங்கை நிர்வாக சேவைத் தரத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இருந்தும், குறித்த பதவிகளுக்கு திட்டமிடல் சேவையைச் சேர்ந்தவர்களே நியமிக்கப்பட்டிருந்தனர். முன்னைய ஆளுநரின் ஆட்சிக் காலத்தில் இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

தற்போது புதிய ஆளுநர் நியமிக்கப்பட்ட பின்னரும், குறித்த பதவி நிலையில் இன்னமும் திட்டமிடல் சேவையைச் சேர்ந்த அதிகாரிகளே உள்ள னர். வடக்கு மாகாண அரசும் இதுதொடர்பில் அக்கறை கொள்ளவில்லை என்று அதிகாரிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

செயலாளர்களது இடமாற்றங்கள், திணைக்களத் தலைவர்களது இடமாற்றங்கள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையிலும்கூட, மேற்படி மூன்று ஆணையாளர் பதவிகளுக்கும், இலங்கை நிர்வாக சேவைத் தரத்தைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்படவில்லை.

எனவே வடக்கு மாகாண அரசு இந்த விடயத்தில் கவனம் எடுத்து, உரிய பதவிகளுக்கு பொருத்தமான அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்று அரச அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-5)

# மழையால் புகையிலைச் செய்கை பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.30

யாழ்.குடாநாட்டில் பரவலாகப் பெய்து வரும் சீரற்ற மழையால் புகையிலைச்செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மழை திடீர் திடீரென பரவலாக பல்வேறு பிரதேசங்களிலும் பெய்து வருகின்றது.

குறிப்பாக வலி.கிழக்கு பிரதேசத்தில் பெய்த மழையால் புகையிலைச் செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டனர்.

முதிர்வடைந்த புகையிலைச் செடிகளை அறுவடை செய்து வெயிலில் உலர வைத்த போது திடீரெனப் பெய்த மழ்ழ யால் அவை நனைந்து பாதிக்கப்பட்டன.

அதனைவிடஅறுவடைசெய்யாத புகையிலைச் செடிகளும் மழையால் பழுதடையும் நிலையில் உள்ளன.குடாநாட்டில்இந்தமுறை விவசாயிகள்புகையிலைச்செய்கையில் அதிக நாட்டம் காட்டவில்லை. (வ-17)



கைதடி நவபுரம் சனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு நிறைவையொட்டிய மோட்டார் சைக்கிள் பவனி கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றபோது.... (வ-9)

# அரச ஓய்வூதிய உறுப்பினருக்கு அங்கத்துவ மானியம் அதிகரிப்பு

அச்சுவேலி,ஏப்.30

அரச சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதிய உறுப்பினர்களுக்கான அங்கத்துவ மானியங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக தாய்ச் சங்க தீர்மானம்உள்ளடங்கியசுற்றறிக்கைகள் பிரதேசசங்கங்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன.

தமிழ் சிங்கள புத்தாண்டோடு அங்கத்துவ மானியங்களை அதிகரிப்புச் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய நடைமுறையின் பிரகாரம் இறப்பு மானியம் 15ஆயிரம் ரூபாவாகவும் கண் சத்திரசிகிச்சைக்கான கொடுப்பனவு ஒரு கண்ணுக்கு தலா 5ஆயிரம் படி இரண்டு கண்களுக்கும் 10 ஆயிரம் ரூபாவாகவும் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் தினங்களுக்கான கொடுப்பனவு 5ஆயிரம் ரூபாவாகவும் சத்திர சிகிச்சைக்கான கொடுப்பனவு 15 ஆயிரம் ரூபாவாகவும் பிள்ளைகளின் கல்விக்கான புலமைப் பரிசில் கொடுப்பனவு 6 ஆயிரம் ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அரச சேவை ஓய்வூதியர்கள் மாதாந்தம் 50 ரூபா வீதம் வருடத்தில் 600 ரூபாவை மட்டும் சந்தாவைச் செலுத்தும் நிலையில் அவர்களுக்கான அங்கத்துவ மானியங்கள் புதுவருடத்தில் இருந்து அதிகரிக்கப்பட்டிருப்பது இதுவரை உறுப்புரிமை பெற்றுக் கொள்ளாத ஓய்வூதியர்களை உறுப்புரிமை பெறத்தூண்டியுள்ளது. அத்துடன் அங்கத்துவத்தை விலக்கிக் கொண்ட சிலரும் மீள இணைக்கின்றனர் என்று கோப்பாய் பிரதேச சங்கத்தின் செயலாளர் எம்.புவனேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் நிறுவப்பட்ட அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் கிளைச் சங்கங்கள் நாடளாவியரீதியில் சகல பிரதேச செயலகங்களிலும் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-11)

# விழுமியங்களை கற்பிக்கும் பாடநூல் பாடசாலைகளுக்கு

யாழ்ப்பாணம், ஏப்.30

தமிழ்த் தேசியத்தின் தந்தை அமரர் தந்தை செல்வா நிதியத்தின் நிதி அனுசரணையில்அமைக்கப்படவுள்ள யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவு கலையரங்கத்துக்கான அடிக்கல் நடும் விழா யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முதல்வர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம்பெற்றது.


இந்தநிகழ்வில் தந்தை செல்வாவின் மகன் எஸ்.சந்திரஹாசன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கலையரங்கத்துக் கான அடிக்கல்லை நட்டு வைத்தார்.

நவீன வசதிகளைக் கொண்டு 1500 பேர் அமரக்கூடியதாக அமைக்கப்படவுள்ள கலையரங்கானது 70 மில்லியன் ரூபா செலவில் கட்டப்படவுள்ளது. எதிர்வரும் 2016 ஆண்டு நடைபெறவுள்ள கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழாவுக்காக குறித்த கலையரங்கு அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(வ)

## ஆன்மிக சொற்பொழிவு

தென்மராட்சி, ஏப். 30

சாவக்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை வெள்ளிக் கிழமை மாலை 7 மணிக்கு 'கௌரவம்' என்றதலைப்பில் தென்மராட்சி கல்வி வலய தொழில் வழிகாட்டல் அலுவலர் க.க.ஈஸ்வரன் ஆன்மிகச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (வ-9)



# குடாநாட்டில் மணல் தட்டுப்பாடு முடங்கிப்போன கட்டடப் பணிகள்

யாழ்ப்பாணம், ஏப். 30

யாழ். குடாநாட்டில் மணலுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டால் கட்டடப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதோடு கட்டடத் தொழிலாளர் தொழில் இன்றி பெரும் இக்கட்டான நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

நாளாந்தம் மேசன் மற்றும் கூலி வேலைகள் செய்து தமது குடும்ப வாழ்க்கையை நடத்தி வந்த குடாநாட்டு கட்டடத் தொழிலாளர்கள் தொழில் வசதி இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாகத்தான் தொழிலாளர்களும் நாளாந்த தொழில் என்பனவும் முடங்கியுள்ளன.

இந்தநிலையில் மணல் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு எவரும் முன்வரவில்லை என்றும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டடப் பணிகள், வீட்டுத் திட்டப் பணிகள் மற்றும் ஆலய புனரமைப்புப் பணிகள் யாவும் இந்த மணல் தட்டுப்பாட்டால் இடைநடுவில் முடங்கிக் காணப்படுகின்றன.

சிலர் ஏற்கனவே கையிருப்பில் வைத்திருந்த மணலை அதிக விலைக்கு விற்பனை செய்தும் வருகின்றனர்.

இதேசமயம் அரியாலை கிழக்கு பிரதேசத்தில் இரவு வேளையில் சட்டவிரோதமாக அகழப்படும் மணலும் தற்போது இரட்டிப்பான விலைக்கு விற்கப்பட்டு வருகின்றது.

இந்த சட்டவிரோதமாக அகழப்படும் மணலை கையும் மெய்யுமாகப் பிடிக்கும் பணியில் பொலிஸார் மும்முரமாக ஈடுபட்டும் வருகின்றனர். (வ-17)

# மெதடிஸ், ஜசிந்தா மாவட்டத்தில் மகுடம்





கரணவாய், ஏப். 30
யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையிலான கபடித் தொடரில் பெண்களுக்கான ஆட்டத்தில் 19 வயதுப் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும், 15 வயதுப் பிரிவில் பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. பாடசாலையும் வெற்றிபெற்று நடப்பு வருட மாவட்ட சம்பியன்களாகின.
யாழ்மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட கபடித் தொடரின் இறுதியாட்டங்கள் நேற்று முன்தினம் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.
19 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையும் நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் மோதின. ஆதிக்கம் செலுத்திய பருத்தித்துறை மெதடிஸ்த பாடசாலை ஆட்டத்தின் முதல்பாதியில் 13:6 என்ற புள்ளிகள் கணக்கில் முன்னிலை பெற்றிருந்தபோது ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது. இடைவேளையின் பின்னரும் மெதடிஸ்த பெண்களின் ஆட்டத்தில் அனல் பறந்தது. முடிவில் 22:6 என்ற புள்ளிக் கணக்கில் மெதடிஸ்த பெண்கள் கல்லூரி வெற்றிபெற்று மாவட்டச்சம்பியனாகியது. மூன்றாமிடத்தை பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.பாடசாலை பெற்றுக் கொண்டது.
15 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசலையும் பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. பாடசாலையும் மோதின. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் முழுமையாக ஆதிக்கம் செலுத்திய பண்டத்திரிப்பு ஜசிந்தா பாடசாலை கடும் எதிர்ப்பின்றி 41:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று நடப்பு வருட மாவட்டச்சம்பியனாகியது. மூன்றாமிடத்தை சாவகச்சேரி இந்துக் கல்லூரி பெற்றது.

(த-ரி-108)

## கொற்றாவத்தை- ஹென்றிஸ் இறுதியில் பலப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப். 30
யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் நேற்று யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.
முதலாவது அரையிறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொற்றாவத்தை அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை மோதிக் கொண்டது. இதில் கொற்றாவத்தை அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியை எதிர்த்து தேவரையாளி இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

(த-ரி-23)

## கொற்றாவத்தை ஹென்றிஸ் இறுதியில் பலப் பரீட்சை

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் நேற்று யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.
முதலாவது அரையிறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொற்றாவத்தை அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை மோதிக் கொண்டது. இதில் கொற்றாவத்தை அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியை எதிர்த்து தேவரையாளி இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

(த-ரி-23)

## ஞானம்ஸ் அசத்தல் ஆட்டம்



கரணவாய், ஏப். 30
கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவின் நடப்பு வருடத்துக்கான வெற்றிக்கிண்ணத்தைக் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம் கைப்பற்றியது.
கரவெட்டிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகமும் கடந்த திங்கட்கிழமை இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் மோதின.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய டயமன்ஸ் அணி 13.4 பந்துப்பரிமாற்றத்தில் அனைத்து இலக்குகளையும் இழந்து 78 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பிரதீஸ், உஷானந் ஆகியோர் தலா 17ஓட்டங்களையும், பத்மஸ்ரீ 16 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் ஞானம்ஸ் சார்பாக அனுசயந்தன் 4 இலக்குகளையும், குணாதீபன், சேந்திரன் மற்றும் திருவதாஸ் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர் .
பதிலுக்கு 79 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய ஞானம்ஸ் அணி 13.2 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்று 3 இலக்குகளால் நடப்பு வருடத்திற்கான வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

(த-ரி-108)

## சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் 4 அணிகள் தேசிய மட்டத்துக்கு

தென்மராட்சி, ஏப். 30
சாவக்சேரி இந்துக் கல்லூரியின் நான்கு அணிகள் இந்த வருடம் தேசிய மட்ட குழு நிலைப் போட்டிகளில் பங்குபற்றத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.
19 வயதுப் பிரிவு ஆண், பெண் எல்லே அணிகளும், 15 வயதுப் பிரிவு ஆண், பெண் கபடி அணிகளுமே தேசிய மட்டத் தொடர்களில் பங்குபற்றவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடமராட்சியில் நடைபெற்ற மாவட்ட நிலைப் போட்டிகளில் 19 வயதுப் பிரிவு எல்லேயில் ஆண்கள் அணி இரண்டாமிடத்தையும்,பெண்கள் அணி மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.
அதேபோன்று கபடித் தொடர்களில் 15 வயது ஆண்கள் பிரிவு இரண்டாமிடத்தையும் பெண்கள் பிரிவு மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன. இதனையடுத்தே இந்த அணிகள் தேசிய நிலைப் போட்டிகளுக்குத் தகைமை பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(த-ரி-9)

## மகிழங்குளம், சரஸ்வதி எறிபந்தில் சாதித்தன



மாங்குளம், ஏப். 30
வவுனியா மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான ஏறிபந்தாட்டத் தொடரில் ஆண்கள், பெண்கள் என்று இரு பிரிவிலும் வவுனியா வடக்குக் கல்வி வலயம் 5 இடங்களைக் கைப்பற்றியுள்ளது.
வவுனியா மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான எறிபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் கடந்த சனிக்கிழமை ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.
ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மாதர் பனிக்கர் மகிழங்குளம் அ.த.க. பாடசாலையை எதிர்த்து சுந்தரபுரம் சரஸ்வதி அணி மோதியது. ஆட்டம் ஆரம்பித்தது முதல் ஆதிக்கம் செலுத்திய மாதர் பனிக்கர் மகிழங்குளம் அ.த.க. பாடசாலை அணியினரின் எறிகளை ஈடுகொடுக்க முடியாமல் சுந்தரபுரம் அணியினர் திணறினர். இதனால் மூன்றாவது செற்றுக்கு வேலை வைக்காமல் முதல் இரு செற்களையும் 25:14, 25:12 என்ற அடிப்படை யில் கைப்பற்றி அபார வெற்றியீட்டியது மகிழங்குளம் அ.த.க.பாடசாலை. 3ஆம் இடத்தை புதுக்குளம் மகா வித்தியாலய அணி பெற்றுக்கொண்டது.
பெண்களுக்கான இறுதியாட்டத்தில் சுந்தரபுரம் சரஸ்வதி அணியை எதிர்த்து கனகராயன்குளம் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் கனகராயன்குளம் அணியினர் இறுதி வரை போராடிய போதும் வெற்றி இலக்கை நெருங்குவதற்கு சுந்தரபுரம் அணியினர் இடம் கொடுக்கவில்லை. இதனால் சுந்தரபுரம் அணி முதல் இரு செற்களையும் 25:21, 25:20 என்ற அடிப்படை.யில் கைப்பற்றி கிண்ணத்தை தமதாக்கினர். 3ஆம் இடத்தை பாவற்குளம் மகா வித்தியாலய அணியினர் பெற்றுக் கொண்டனர்.

(த-ரி-422)

## முல்லைத்தீவு மாவட்ட கரப்பந்தாட்ட முடிவுகள்





முள்ளியவளை, ஏப். 30
முல்லைத்தீவு மாவட்ட கரப்பந்தாட்ட தொடர்களில் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளில் கலைமகள் வித்தியாலயமும், 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் வன்னிவிளாங்குளம் அ.த.க. பாடசாலையும், 19 வயதுப் பிரிவில் சம்பத்நுவர மகா வித்தியாலயமும், 17வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் கலைமகள் வித்தியாலயமும், 19வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் வித்தியானந்தாக் கல்லூரியும் வெற்றி பெற்றுக் கிண்ணத்தைக் ஸ்கைப்பற்றின.
இதன்படி 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் இரண்டாம் இடத்தை தண்ணீரூற்று முஸ்லிம் மகா வித்தியாலயமும், மூன்றாம் இடத்தை எகதுகஸ்வெள வித்தியாலயமும், பெண்கள் பிரிவில் இரண்டாம் இடத்தை வன்னிவிளாங்குளம் அ.த.க.பாடசாலையும், மூன்றாம் இடத்தை எகதுகஸ்வெள வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.
17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் இரண்டாம் இடத்தை எகதுகஸ்வெள வித்தியாலயமும், மூன்றாம் இடத்தை விஸ்வமடு ம.வித்தியாலயமும், பெண்கள் பிரிவில் இரண்டாம் இடத்தை எகதுகஸ்வெள வித்தியாலயமும்,மூன்றாம் இடத்தை வன்னிவிளங்குளம் அ.த.க.பாடசாலையும் பெற்றுக்கொண்டன.
19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் இரண்டாம் இடத்தை வித்தியானந்தக் கல்லூரியும், மூன்றாம் இடத்தை ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயமும், பெண்கள் பிரிவில் இரண்டாம் இடத்தை பாண்டியன்குளம் ம.வித்தியாலயமும், மூன்றாம் இடத்தை சம்பத்நுவர மகா வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

(த-433-ரி)




# கொல்கத்தா இன்று மீண்டும் என்ன ஆகுமோ?



நடப்பு ஐ.பி.எல். தொடரின் இன்றைய லீக் ஆட்டத்தில் கொல்கத்தா எதிர் சென்னை அணிகள் பலப் பரீட்சை நடத்தவுள்ளன. இரண்டு அணிகளிலும் அதிகப்படியான வாய்ப்பு உள்ள அணியாக சென்னையே மீண்டும் காணப்படுகின்றது.

கடைசியாக நடைபெற்ற ஆட்டத்தில் கொல்கத்தாவை 2 ஓட்டங்களால் வெற்றிபெற்றதுடன் அனைத்து வீரர்களும் தொடர்ந்து திறனிலேயே நீடிக்கின்றனர். மக் கலம், சிமித், டோனி, டுபிளஸிஸ், ஜடேயா, ரெய்னா, அஸ்வின் என்று துடுப்பாட்டத்தில் மிகப்பலம் பெற்றிருக்கும் சென்னையை சமாளிக்க நரைன், மோர்கல், ரசல் போன்ற வீரர்கள் இருந்தாலும் இவர்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு காரணத்துக்காக திறனின்றித் தவிப்பது அறிந்ததே. நரைன் மீண்டும் பந்தை எறிகிறார் என்ற சர்ச்சையில் சிக்கியுள்ளார். அத்துடன் இவரின் உள்திரும்பும்சுழற் பந்தை வீச தடையும் செய்யப்பட்டுள்ளது. மோர் கலின் காயம் இன்றைய ஆட்டத்திலும் அவரை விடாது துரத்தலாம் எனவே துடுப்பாட்டத்தில் பலம் பெற்றிருக்கும் சென்னையைக் கொல் கத்தாவின் பந்துவீச்சு ஒன்றும் செய்துவிடாது போல தெரிகிறது.

அதே நேரம் சென்னையின் பந்துவீச்சும் கொல்கத்தாவுக்கு அச்சுறுத்தலே. குறிப்பாக நெக்ரா வேகத்தில் வித்தை காட்டுகிறார். அஸ்வின் சுழலில் கிறங்கடிக்கின்றார். ஆக மொத்தத்தில் சென்னையின் துடுப்பாட்டத்துக்கு இணங்க பந்து வீச்சும் பலம்பெற்றுள்ளது. சென்னையின் பந்துவீச்சை சமாளிக்கக்கூடிய வீரர்கள் கொல்கத்தாவிடம் இல்லாமல் இல்லை. கம்பீர், உத்தப்பா, யூசுப் பதான், சூரியக்குமார் யாதேவ் போன்ற வீரர்கள் இருந்தாலும் இவர்களால் சென்னையின் பந்து வீச்சை சமாளிக்க முடியுமா என்பது கேள்விக்குறியே? கடைசி ஆட்டத்தில் சென்னையிடம் இரண்டு ஓட்டங்களால் கௌரவத் தோல்வி கண்ட கொல்கத்தா இன்று படுதோல்வி அடைந்தாலும் வியப்பில்லை. (த–ரி)

# சிகரம் சரிந்தது



எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிச் சாதனை படைக்கவிருந்த இந்திய மலையேற்ற வீராங்கனை ரெனே நேபாள நில நடுக்கத்தால் ஏற்பட்ட பனிப் புயலில் சிக்கிப் பரிதாபமாக உயிரிழந்தாக வெளியான தகவல்கள் அனைத்தும் உண்மையென்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே தன்சானியாவில் உள்ள கிளிமஞ்சாரோ சிகரத்தில் ஏறிச் சாதனை படைத்த ரெனே, தற்போது எவரெஸ்ட் சிகரத்தில் ஏறும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

இந்த நிலையில் நிலநடுக்கத்தினால் எவரெஸ்ட் சிகரத்தில் ஏற்பட்ட பனிப் புயலால் பனிப்பாறைகளில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்தார். இதே போன்று எவரெஸ்ட் பகுதியில் சிக்கியுள்ள 150க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகளை மீட்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறமை குறிப்பிடத்தக்கது. (த–ரி)

# இது கோஹ்லியின் மறுபக்கம்





இந்தியாவின் மத்தியப்பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த சித்தாந்த் துபே என்ற சிறுவனுக்கு 'ஹாட்கின் லிம்போமா' எனப்படும் எலும்பு மச்சை புற்றுநோய் இருப்பதை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அறிந்த அவனது பெற்றோர் மனவேதனையால் துடிதுடித்துப் போனார்கள். அதைவிட கொடூரமான மன வேதனையில் மூழ்கினான் சித்தாந்த் துபே, அவனது வேதனைக்கு காரணம் நமது அபிமான கிரிக்கெட் வீரரான விராட் கோஹ்லியை பார்க்காமல் இந்த பூமியை விட்டு போய் விடுவோமோ என்ற ஆதங்கம். இவற்றையெல்லாம் அறிந்த கோஹ்லி அந்தச் சிறுவனை தன்னிடம் வரவழைத்து அவனை அரவணைத்து நீண்ட நேரம் உரையாடி ஆறுதற்படுத்தியுள்ளார்.

இந்த சந்திப்பு தொடர்பாக புற்றுநோயால் பாதிக்கப்பட்ட அந்தச் சிறுவன் தெரிவித்ததாவது:-

என்னுடைய கனவு நிறைவேறி விட்டது. கோஹ்லி என்னைக் கட்டியணைத்து வாழ்த்தியதுடன் எங்களுக்கு ஐ.பி.எல். ஆட்டங்களுக்கான வி.வி.ஐ.பி. நுளைவுச்சீட்டுக்களையும் தந்தனுப்பினார்.

கோஹ்லியைப்போல சிறந்த கிரிக்கெட் வீரராகவர வேண்டும் என்ற ஆர்வத்துடன் வளர்ந்த நான், அவரைச் சந்தித்த இந்த நிமிடத்துக்குப் பிறகு அவரைப் போன்ற மனிதாபிமானம் மிகுந்த கிரிக்கெட் வீரராகவும் வர வேண்டும் என்று முடிவு செய்துள்ளேன்–என்றான்.

ஆட்டத்துக்கு முதல்நாள் இரவு வீரர்கள் எவரையும் சந்திக்கவோ அல்லது விடுதியை விட்டு வெளியேறவோ அனுமதி இல்லை என்ற நிலையில் கோஹ்லி தனது காரை அனுப்பிச் சிறுவனை அழைத்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (த–ரி)

# ஜாம்பவான்களுடன் வலம்வரும் றோகித்



மும்பை இந்தியன்ஸ் அணிக்கு பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ள பொண்டிங்கிடம் இருந்து தலைமைத்துவப் பயிற்சிகளையும் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ள சச்சினிடம் இருந்து துடுப்பாட்டத்துக்குத் தேவையான பயிற்சிகளையும் பெற்று வருவதாக மும்பையின் அணித் தலைவர் றோகித் சர்மா தெரிவித்துள்ளார்.

தனது வளர்ச்சி தொடர்பாக றொகித் சர்மா தெரிவித்ததாவது:-

நான் மும்பை அணியின் தலைவராக நியமிக்கப்பட்டதிலிருந்து தலைமைத்துவம் குறித்து பொண்டிங்கிடம் இருந்த கற்றுக்கொண்டு வருகிறேன். அணியை கண்காணிக்கும் விதம் மற்றும் வீரர்களுடன் பேசும் திறமை ஆகியவை பொண்டிங்கின் தனித்துவங்கள். இவை அனைத்தையும் பொண்டிங் முழுமையாக எனக்கு கற்றுத்தருகிறார். இதைவிட துடுப்பாட்டம் தொடர்பாக சச்சினிடம் இருந்து நிறையவே கற்றேன் கற்கின்றேன்– என்றார்.

மிகப்பெரும் ஜாம்பவான்களான சச்சின், பொண்டிங், அனில் கும்ளே, ஜொன்டி ரொட்ஸ், றொபின் சிங் ஆகியோரின் வழிகாட்டுதல் இருந்த போதிலும் மும்பை நடப்பு தொடரில் 7 ஆட்டங்களில் இரண்டில் மட்டுமே வெற்றி கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த–ரி)

# போல்ட்டின் பந்து போல்ட் ஆக்கும்



ஹைதராபாத்தின் வேகப்பந்து வீச்சாளர் போல்ட்டின் பந்துவீச்சை கணிப்பதோ அல்லது எதிர் கொள்ளுவதோ அல்லது அடித்தாட முற்படுவதோ மிகவும் கடினம் என்று பஞ்சாப்பின் நட்சத்திர வீரர் சகா தெரிவித்துள்ளார்.

போல்ட்டின் பந்துவீச்சை எதிர் கொள்வது தொடர்பாக சகா தெரிவித்ததாவது:-

போல்ட் அருமையான பந்துகளை வீசுகிறார். அத்துடன் பந்தை வேகமாகவும் வீசுகிறார். அவர் பந்து வீச வரும்போது எதிர்கொள்ளும் வீரர் அந்த பந்து தாழ்வாக வருமா? அல்லது வேறுமாதிரி வருமா? என்று கணிக்க முடியாது. ஒவ்வொரு பந்தையும் ஒவ்வொரு விதமாக வீசுகிறார். துடுப்பாட்ட வீரர்களுக்கு ஏற்ப பந்தை மாற்றவும்செய்கிறார்– என்றார். (த–ரி)


# அணிக்கு பாரமாகமாட்டேன்

–அப்ரிடி

பங்களாதேஷ் அணிக்கு எதிரான 'ரி–20' ஆட்டத்தில் அப்ரிடி தலைமையிலான பாகிஸ்தான் அணி தோல்வியடைந்தது. இதனையடுத்து 'அணிக்கு சுமையாகிவிட்டேன் என்று தெரிந்தால் நான் விலகிவிடுவேன்' என்று அப்ரிடி தெரிவித்துள்ளார்.

ரி–20 தோல்வியின் பின்னர் அப்ரிடி தெரிவித்ததாவது:-

மூத்த வீரர்கள் அணியை கைவிட்டுவிட்டனர் என்பதுதான் உண்மை. வீரர்களின் தற்போதைய திறனை வைத்துப் பார்க்கும்போது பாகிஸ்தான் அணி பெரிய அளவில் வெற்றி



களைக் குவிக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. நான் முன்னின்று அணியை வழிநடத்த விரும்புகிறேன். அணிக்கு பாரமாக இருப்பதாக உணரும் தருணத்தில் 'ரி–20' உலகக்கிண்ணத் தொடருக்கு முன்னதாகவே ஓய்வு பெற்றுவிடுவேன். பாகிஸ்தான் கிரிக்கெட் தற்பொழுது கடினமான காலக்கட்டத்தில் சென்று கொண்டிருக்கிறது – என்றார்.

அப்ரிடி ஏற்கெனவே டெஸ்ட் மற்றும் ஒருநாள் ஆட்டங்களில் இருந்து ஓய்வை அறிவித்துள்ளார். இந்த நிலையில் இந்தியாவில் நடைபெறவுள்ள அடுத்த 'ரி–20' உலகக்கிண்ண தொடருக்கான பாகிஸ்தான் அணியை வலுப்படுத்துவதில் மட்டுமே கவனம் செலுத்தப் போவதாகத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த–ரி)

# பலமான நிலையில் பாகிஸ்தான் அணி



பங்களாதேஷ் எதிர் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 2 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது டெஸ்ட் தற்பொழுது பங்களாதேஷில் நடைபெற்று வருகின்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்றதும் பலமாக அமைய முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய பங்களாதேஷ் முதலாம்நாள் ஆட்ட முடிவில் 236–4. இந்த நிலையில் தொடர்ந்து இரண்டாம் நாளுக்காக களமிறங்கிய பங்களாதேஷ் அணிக்கு முன்வரிசை வீரர்களைப்போல் மத்திய வரிசை வீரர்கள் ஒத்துழைப்பு வழங்கவில்லை. ரஹிமுடன் இணைந்த சர்கர் சற்றுநேரம் தாக்குப்பிடிக்க இருவருமாக இணைந்து இணைப்பாட்டமாக 62 ஓட்டங்களை பகிர்ந்தனர். இதுவே மத்திய வரிசையில் பங்களாதேஷின் அதிகப்படியான இணைப்பாட்டம். சர்கர் 33 ஓட்டங்களுடனும் ரஹிம் 32 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க பங்களாதேஷின் இன்னிங்ஸ் 332 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக ரிஜாஸ், சாஜ் தலா மூன்று இலக்குகளையும் ஹபீஸ், பாபர் தலா இரண்டு இலக்குகளையும் கைப்பற்றினர்.

333 ஓட்டங்களைப் பெற்றால் இன்னிங்ஸில் முன்னிலை பெறலாம் என்ற நிலையில் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு ஹபீஸிடன் இணைந்து அஸ்லாம் சுமாரான தொடக்கத்தைக் கொடுத்தார். ஐம்பதாவது ஓட்டத்தில் பாகிஸ்தானின் முதல் இலக்காக அஸ்லாம் 20 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். இரண்டாவது இலக்குக்காக இணைப்பாட்டத்தை ஆரம்பித்தார்கள் ஹபீஸும் அலியும். இந்த இணைப்பாட்டத்தை பங்களாதேஷ் பந்துவீச்சாளர்களால் அசைத்துப் பார்க்க முடியவில்லை. இணைப்பாட்டத்துடன் இணைந்த முறையில் அணியின் ஓட்டங்களும் தனிநபர் ஓட்டங்களும் அதிகரித்துக்கொண்டே சென்றது. ஆனால் இலக்குகள் மட்டும் விழுந்த பாடில்லை. ஆளுக்கொரு அரைச் சதம் கடந்து தொடர்ந்தும் சென்று கொண்டிருந்தார்கள். ஹபீஸ் ஒருபடி மேலே சென்று சதத்தையும் எட்டிவிட்டார். இரண்டாம்நாள் ஆட்டநேர முடிவில் பாகிஸ்தான் 227–1. ஹபீஸ் 137 ஓட்டங்களுடனும் அலி 65 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். ஆட்டத்தின் மூன்றாம் நாள் இன்றாகும். ஆட்டம் இலங்கை நேரப்படி காலை 9மணிக்கு ஆரம்பமாகும். (த–ரி)

# குத்துச் சண்டைத் தொடரில் இந்தியா வரலாற்று வெற்றி



இந்தோனேசியாவில் நடைபெற்ற குத்துச்சண்டை தொடரில் இந்திய அணி முதல் முறையாக சம்பியன் ஆகியுள்ளது.

இந்திய வீரர்களான ராகேஷ்குமார் (69 கிலோ), ஹர்பால் சிங் (75 கிலோ) ஆகியோர் தங்கப் பதக்கம் வென்றதன் மூலம் இந்திய அணி முதலிடத்தைப் பிடித்தது. இதேபோல் இந்திய வீராங்கனைகள் சர்ஜுபாலா (48 கிலோ), பிங்கி ஜங்ரா (51கிலோ) ஆகியோர் மகளிர் பிரிவில் தங்கப் பதக்கம் வென்றனர். இந்தியாவின் மனீஷ் குமார் 60 கிலோ எடைப் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்றார். இதன்மூலம் 33 புள்ளிகளைப் பெற்ற இந்திய அணி முதலிடத்தைப் பிடித்து சம்பியன் ஆனது. மங்கோலியா 2 ஆவது இடத்தைப் பிடித்தது. இந்திய அணியின் இந்த வரலாற்று வெற்றிக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ஆகியோர் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர். இந்தத் தொடரில் 30 நாடுகளைச் சேர்ந்த 130 குத்துச்சண்டை வீர, வீராங்கனைகள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (த–ரி)



# புலிக்கு பிறந்தது பூனையாகுமா?

ஜேர்மனியில் நடந்த கார் பந்தயத்தில் 16 வயதேயான மிக் மேக்கர் அபாரமாகச் செயல்பட்டு சிறந்த இளம் வீரருக்கான விருதைத் தட்டிச்சென்றார்.

மேக்கர் கார் பந்தயத்தில் மகத்தான சாதனைகளை படைத்த முன்னாள் சம்பியன் மைக்கல் மேக்கரின் மகன் ஆவார். ஜேர்மனி பந்தயத்தில் பெற்ற வெற்றியை தனது தந்தைக்கு சமர்ப்பிப்பதாகப் பெருமையுடன் தெரிவித்துள்ளார் மிக் மேக்கர். (த–ரி)

# சென்னைக்கு பலம்



சென்னையால் ஏலத்தில் எடுக்கப்பட்டு காயம் காரணமாக அணியில் இடம்பெறாமல் தொடர்ந்து அவதிப்பட்டு வந்த சகலதுறை வீரர் இர்பான் பதான் இன்று சென்னைக்காக களமிறங்கலாம் என்று தெரிகிறது.

ஐ.பி.எல். தொடர் ஆரம்பமாக முதலே காயத்தால் அவதிப்பட்டு வந்தார் பதான். இவரின் காயம் குணமடைவதும் பின்னர் பயிற்சியின் பொழுது மீண்டும் காயம் ஏற்படுவதுமாக அவதிப்பட்ட நிலையில் காயம் பெருமளவு குணமடைந்து கொல்கத்தாவுக்கு எதிரான இன்றைய ஆட்டத்தில் பதான் களமிறங்கலாம் என்று தகவல்கள்வெளியாகியுள்ளன. (த–ரி)

# தவிர்க்க முடியாத ஆதிக்கத்தில் செரீனா



தொடர்ந்து 114 வாரங்களாக உலகின் முதல்தர ரென்னிஸ் வீராங்கனையாக நீடித்து வரும் செரீனா வில்லியம்ஸ், மகளிர் ரென்னிஸில் நீண்ட காலம் முதல்தர வீராங்கனையாக இருந்தவர்களின் பட்டியலில் மூன்றாம் இடத்தில் இருந்த கிறிஸ் எவர்ட்டின் சாதனையை முறியடித்துள்ளார்.

அமெரிக்க ரென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் முதல்தர இடத்தில் தொடர்ச்சியாக 114 வாரங்களாக நீடித்து வருகிறார். அதிக வாரங்கள் முதல்தர இடத்தில் இருந்தவர்கள் பட்டியலில், ஸ்டெபி கிராப், 1987ஆம் ஆண்டு ஆகஸ்ட்டில் இருந்து 1991 மார்ச் வரை 186 வாரங்கள் தொடர்ந்து இருந்து முதலிடத்தில் உள்ளார். 1982ஆம் ஆண்டிலிருந்து 1985ஆம் ஆண்டு வரை 156 வாரங்கள் தொடர்ந்து முதல் இடத்தில் நீடித்த மார்ட்டினா நவரத்திலோ பட்டியலில் இரண்டாம் இடத்தில் இருக்கிறார். 1976ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து 1978ஆம் ஆண்டு ஜூலை வரை 113 வாரங்கள் இருந்த கிறிஸ் எவர்ட் இதுவரை மூன்றாமிடத்தில் இருந்தார். தொடர்ந்து 114 வாரங்கள் முதலிடத்தில் நீடித்து, கிறிஸ் எவர்ட்டின் இடத்தை தற்போது செரீனா வில்லியம்ஸ் பிடித்துள்ளார்.

2013ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் இடத்தை செரீனா வில்லியம்ஸ் பிடித்தார். இதன் பின்னர் அவர் தொடர்ந்து வெற்றி மேல் வெற்றி குவித்து வருகிறார். 2013ஆம் ஆண்டுக்குப் பிறகு செரீனா 148 ஆட்டங்களில் வெற்றியும் 10 ஆட்டங்களில் மட்டுமே தோல்வியும் கண்டுள்ளார். (ரி)


விசேட வகுப்புகள்

EB பரீட்சைக்கு

சனி, ஞாயிறு, திங்கள்

10.30-4.00 மணிவரை

அதிபர் தரம் III

German Institute

German Swiss நாடுகளுக்கான deutsch மொழிகள் தமிழ் மொழிபெயர்ப்புடன் Germany யிலிருந்து வருகை தந்த ஆசிரியரால் நடைபெறுகின்றது.

10, Palaly Road, Jaffna Mrs. P. Kajenthini

T.P:- 077 1604825

MOBILE PHONE REPAIRING COURSE

(கையடக்க தொலைபேசி திருத்தும் பாடநெறி)

4 days course

150,000/=

Ganesh.K

Mobile Phone Repairing

BTEC

BRITISH TECHNOLOGY ENGLISH COLLEGE

#21, Sirampiyadi Lane, Jaffna.

T.P: 021 7904468

Mo: 0777444225

SPOKEN ENGLISH

WITH DIPLOMA CERTIFICATE

02.05.2015

1. காலை 08.00-10.00 | 3. பி.பகல் 01.00-03.00

2. காலை 10.00-12.00 | 4. மாலை 03.00-05.00

Video DVD

SAMSON

021 320 3313

077 621 4567


இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.